தமிழ் இலக்கியக் கோவை

நான்காம் படிவம் — பொதுப் பகுதி

திருநெல்வேலி டயோசீஸன் புக் டெப்போ,
பாளையங்கோட்டை.

தமிழ் இலக்கியக் கோவை

நான்காம் படிவம் — பொதுப் பகுதி

தொகுத்தோர் :
வித்துவான் வ. தங்கையா,
தலைமைத் தமிழாசிரியர்,
பேரன்புருக் உயர்நிலைப் பள்ளி, பங்களாச்சுரண்டை.

வெளியிடுவோர் :
திருநெல்வேலி டயோசீஸன் புக் டெப்போ,
பாளையங்கோட்டை.

பதிப்புரிமை] **1956** [ரூ. 1—2—0

First Edition 1955
Reprinted 1956
Reprinted 1957

Approved by the Madras Text Book Committee for Class use in Elementary and Secondary Schools. Vide Fort St. George Gazette Page 20 dated 4—4—'56.

திருநெல்வேலி டயோசிசன் பிரஸ், பாளையங்கோட்டை — Kj 1710 — C. 2000

முன்னுரை

"தமிழ் இலக்கியக் கோவை" என்னும் பெயர் வரிசையில் இப் புத்தகம் நான்காம் படிவம் பொதுப்பகுதிக்கு உரியதாகும். மாணவர்கள் தமிழ் இலக்கியத்தில் முறையான பயிற்சியும், சிறந்த தேர்ச்சியும் பெறுவதற்கென சென்னை அரசியலார் 27—1—54 இல் அமைத்த பாடத் திட்டத்தைத் தழுவியும், இப்பொழுது வெளியிடப்படும் பள்ளியிறுதித் தேர்வுத் தமிழ்ப்பாடப் புத்தக அமைப்பைப் பின்பற்றியும் இப்பாடப்புத்தகம் தொகுக்கப் பெற்றுள்ளது.

இத்தொகை நூலில் செய்யுட் பகுதிக்கு **செய்யுட் கோவை** என்றும், உரை நடைப் பகுதிக்கு **உரைநடைக் கோவை** என்றும் பெயர் தந்து, செய்யுட்கோவைப் பகுதியில் **முற்கால, இடைக்கால, இக்கால** நூல்களிலிருந்து மாணவர் பயிற்சி முறைக்கு ஏற்ப, செய்யுட்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. தொகுக்கப் பெற்ற செய்யுட் பகுதி ஒவ்வொன்றிற்கு முன்னும் நூல் வரலாறு, ஆசிரியர் வரலாறுகளும், இறுதியில் குறிப்புரை, பயிற்சி வினாக்கள் முதலியனவும் தரப்பெற்றுள்ளன.

உரைநடைக்கோவைப் பகுதியில் **இலக்கியம், வரலாறு, கதை, கட்டுரை, சொற்பொழிவு** முதலியன பற்றிய கட்டுரைகள் சேர்க்கப்பெற்றுள்ளன. அவை ஒவ்வொன்றின் இறுதியிலும் மாணவர் எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளு முறையில் குறிப்புரை, பயிற்சி வினாக்கள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

எனது வேண்டுகோளுக்கு இணங்கி, இப்பாடப்புத்தகத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு தத்தம் கவிதைகளையும், கட்டுரைகளையும் தந்து உதவிய தமிழ்ப் பேரறிஞர்களுக்கும், உரிமையாளர்க்கும் எனது நன்றி என்றும் உரியதாகட்டும்.

எவ்வகையிலும் நன்முறையில் அமைந்த இப்பாடப் புத்தகத்தை உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களும், தமிழாசிரியர்களும் தங்கள் பள்ளிகளில் பாடப்புத்தகமாக வைத்து எம்மை ஆதரிக்குமாறு அன்பாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பங்களாச் சுரண்டை,
1—10—'55

வ. தங்கையா.

உள்ளுறை

செய்யுட் கோவை

உரை நடைக் கோவை

மனப்பாடஞ் செய்யவேண்டிய பகுதிகள்

I வாழ்த்து

1. தேவாரம் 8
2. திருச்செபமாலை 4

II அறவுரை

1. திருக்குறள் 40

III கதை

1. குசேலோபாக்கியானம் 4, 15. 8
2. நளவெண்பா 10, 11, 16, 17, 19, 20, 21. 28

IV சிறு நூல்கள்

1. சுரசுவதி யந்தாதி 3. 4
2. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் 8

ஆக வரிகள் 100

நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜெயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

— மகாகவி இரவிந்தரநாத தாகூர்.

பொருள்

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்.
நின் திருநாமம், பஞ்சாப்பையும், சிந்துவையும்,
குஜராத்தையும், மஹா ராஷ்டிரத்தையும்,
திராவிடத்தையும், ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சி யடையச் செய்கிறது.
அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

நான்காம் படிவம் பொதுப்பகுதி

செய்யுட்கோவை.

I. *வாழ்த்து.*

1. தேவாரம்

தே + **வாரம்** = தேவாரம்; தெய்வத்தைப்பற்றிய இசையொழுக்கமும் சொல்லொழுக்கமுமுடைய பாடல் என்பது பொருள். இதனை "தே + ஆரம்" எனப் பிரித்துத் தெய்வத்துக்குச் சாத்தப்படும் பூமாலை போன்ற பாமாலை என்று பொருள் கொள்வாருமுளர். சைவசமய குரவர் நால்வருள் **திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்** மூவரும் பாடிய தோத்திரப் பாடல்கள் 'தேவாரம்' என்று பெயர் பெற்றன. அவை எளிமையும் இனிமையும் பக்திச் சுவையும் பொருந்தியனவாகும்; **சைவத்திருமுறைகள்** பன்னிரண்டனுள் தேவாரம் முதல் ஏழு திருமுறைகளாக அமைக்கப்பட்டுள்ளது.

பாடமாக வந்துள்ள தேவாரப் பாடல் திருநாவுக்கரசர் பாடியது. இவர் நடுநாடென்னுந் **திருமுனைப்பாடி** நாட்டிலுள்ள **திருவாமூரில் சைவ வேளாளர்** மரபில் பிறந்தார். இவரது தந்தை பெயர் புகழனார்; தாயார் பெயர் **மாதினியார்**; தமக்கையார் **திலகவதியார்** எனப்படுவர். **மருணீக்கியார்** என்பது இவரது இயற்பெயர். இவர் சமணராயிருந்து, சிவபெருமானருளால் மீண்டும் சைவராயினார். பின் கவி பாடும் புலமையடைந்து சிவதலங்கள்தோறும் சென்று சிவபெருமானை வழிபட்டுப் பல தோத்திரப் பதிகங்களைப் பாடினார். அவைகளே பிற்காலத்தில் '**தேவாரப்பதிகங்கள்**' என்று பெயர் பெற்றன. இவருக்கு **அப்பர்** என்ற பெயரும் உண்டு. இவருடைய காலம் கி. பி. 7ஆம் நூற்றாண்டாகும்.

திருவே ! யென் செல்வமே ! தேனே ! வானோர்
செழுஞ்சுடரே ! செழுஞ்சுடர்நற் சோதி ! மிக்க
உருவே ! யென் னுறவேயென் னூனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமரரேறே !

— *திருநாவுக்கரசர்.*

குறிப்புரை

செழுஞ்சுடர் செழுமை + சுடர்; பண்புத் தொகை. உரு—வடிவு, அழகு; ஊன்—உடல்; சினையாகு பெயர். உள்ளம்—உள்ளிடம்; கற்பகம்—விரும்புவார் விரும்பியதைத் தரும் ஒரு தெய்வத்தரு; மணியாடு பாவாய் கருமணியிடத்துத்தோன்றும் சாயல் போன்றவனே. காவாய்—காப்பாயாக; **வியங்கோள் வினைமுற்று** அருவு—உருவமில்லாமை; வல்வினை—வலிமை + வினை, பண்புத்தொகை. ஆவடுதண்துறை—திருவாவடுதுரை என்னும் புண்ணிய தலம்; உறையும்—தங்கும். அமரர் ஏறே—வானோர் தலைவனே.

2. பெருமாள் திருமொழி.

பெருமாள் **திருமொழி** என்பது குலசேகரப்பெருமாளுடைய திருமொழி என விரியும். இஃது ஆரும் வேற்றுமைத்தொகை. பத்து அல்லது பதினொரு பாடல்களை யுடைய பகுதிக்குத் '**திருமொழி**' என்று பெயர். சைவர்கள் இவ்வாறு வருவதைப் **பதிகம்** என்பர். இந்நூல் திருமால் அடியார்களான பன்னிரு ஆழ்வார்களாலும் பாடப்பட்ட பாடல்களடங்கிய நாலாயிரத்திவ்ய பிரபந்தத்திலுள்ளது. இது 105 பாடல்களைக்கொண்டது. இதனை '**இராமாயண சாரம்**' என்பர்.

பெருமாள் திருமொழி பாடிய **குலசேகரப்பெருமாள்** பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர். இவர் சேரநாட்டிலுள்ள **திருவஞ்சைக்களத்தில்** அரசர் மரபில் தோன்றினர். **குலசேகரன்** என்பது இவரது இயற்பெயர். இவர் திரு

மாலின் அவதாரமான இராமபிரானிடத்தில் நீங்காத பற்றுக்கொண்டு அவருக்குவரும் இன்ப துன்பங்களைத் தமக்கு வந்ததாகக் கருதியதால் அவர் பெயரால் 'பெருமாள்' என்று அழைக்கப்பட்டார். இவர் தமிழ் மொழி, வடமொழி இரண்டிலும் புலமையுடையவர். **முகுந்தமாலை** என்பது இவர் வடமொழியில் பாடியதோர் நூலாகும். இவருடைய காலம் கி. பி. 9 ஆம் நூற்றாண்டு என்பர்.

குன்றினால்குடை கவித்ததும் கோலக்
குரவை கோத்தும் குடமாட்டும்
கன்றினால்விள வெறிந்ததும் காலால்
காளியன்தலை மிதித்ததும் முதலா
வென்றிசேர்பிள்ளை நல்விளையாட்ட மனைத்திலும்
அங்குஎன் னுள்ளமுட் குளிர
ஒன்றும்கண் டிடப்பெற்றிலே னடியேன்
காணுமாறு இனியுண்டேனில் அருளே.

— குலசேகரப்பெருமாள்.

குறிப்புரை

குன்று—கோவர்த்தனமலை; கோலம்—அழகு; குரவை கோத்தல்—குரவை கோத்தாடுதல்; **குரவையாவது** மகளிர் கைகோத் தாடும் ஒருவகைக்கூத்து; குடம் ஆட்டும்—குடக்கூத்தும்; கன்று—பசுவின் கன்று; விளம்—விளாமரம்; காளியன்—காளியன் என்னும் நாகம்; முதலா—முதலாக.

இப்பாடலில் கண்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்து, குரவைக் கூத்தாடியது, குடக் கூத்தாடியது, விளவெறிந்தது, காளியன் தலை மிதித்தது ஆகிய செயல்களனைத்தும் அவனுக்குப் பிள்ளை விளையாட்டெனக் கூறியிருத்தல் நோக்கத்தக்கது.

3. திருப்புகழ்.

திருப்புகழ் என்னுந் தொடர் அழகிய புகழ் என்று பொருள்பட்டு, முருகக் கடவுளைப் புகழும் பாடல்களைக் குறிக்கும். இது பதினாயிரம் பாடல்களையுடையதென்பர்.

ஆனால் இப்பொழுது காணப்படுவன ஏறக்குறைய ஆயிரம் பாடல்களேயாகும்: இப்பாடல்கள் அத்தனையும் சந்தக் கவிகளேயாகும். '**திருப்புகழ் படிக்குமவர் சிந்தைவலு வாலே, ஒருத்தரை மதிப்பதிலை உன்றன்அரு ளாலே**' எனவரும் அடிகள் திருப்புகழின் சிறப்பை இனிது புலப்படுத்தும்.

திருப்புகழைப் பாடிய **அருணகிரிநாதர்** தொண்டை நாட்டிலுள்ள **திருவண்ணுமலையில்** பிறந்தவர். இவரது வரலாறு பற்றிய செய்தியொன்றும் இப்பொழுது திட்டமாய்த் தெரியவில்லை. முருகக் கடவுளால் இவர் கவிபாடும் திறம்பெற்று அவருடைய திருப்பதிகள் தோறும் சென்று திருப்புகழ் பாடினுர் என்பர். '**வாக்குக்கருணகிரி**' என்னும் தொடரால் இவரது வாக்கு வன்மை இனிது புலப்படும். **திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரநுபூதி** முதலியன இவர் பாடிய வேறு நூல்களாகும். இவர் கி. பி. 1450-இல் ஆண்ட **பிரபுடதேவர்** என்னும் அரசர் காலத்தில் வாழ்ந்தவர்; எனவே இவருடைய காலம் கி. பி. 15-ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியாகும். பாரதம் பாடிய வில்லிபுத்தூராரும் இவருடைய காலத்தவரே என்பர்.

கருப்பத் தூறிப்பிறவாதே
கணக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தனுபூதி
சிறக்கப் பாலித் தருள்வாயே!
பரப்பற் ருருக் குரியோனே
பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
சேகத்திற் சோதிப் பெருமானே!

— *அருணகிரிநாதர்.*

குறிப்புரை

கரு — கருவிடத்தில்; பத்து — பத்துமாதமளவும்; ஊறி — வளர்ந்து; கணக்க — மிகவும்; பாடு — துன்பம்; அநுபூதி — கைவந்தபலன்; பரப்பு அற்ருர்—பற்று அற்றவர்; பரத்து அப்பால் — பிரமத்திற்கு அப்புறமான இடத்தில்; அணியோன் — அருகிலிருப்போன்.

4. திருச்செபமாலை

திருச்செபமாலை யென்பது, அழகிய பிரார்த்தனைப் பாடல்களின் தொகுதி என்று பொருள்படும். இது நாளொன்றுக்கு ஒருபகுதியாக ஒரு திங்களுக்குரிய முப்பத்தொரு பிரிவுகளடங்கிய தோத்திரப் பாடல்களை முதற் காண்டமாகவும், பன்னிரண்டிலக்கத் தோத்திர முதலிய ஏழு பிரிவுகளை இரண்டாவது காண்டமாகவும் கொண்டது. இந்நூல் மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் போன்று பத்திச்சுவையுடையதாய்ப் படிப்பவர் மனத்தை உருக்கும் தன்மையது. பாடமாக வந்துள்ள பாடல் 'பன்னிரண்டிலக்கத் தோத்திரம்' என்னும் பிரிவிலுள்ளது. அஃதாவது ஒன்று முதலாகப் பன்னிரண்டு வரை வரப் பாடும் தோத்திரப் பாடல்களடங்கிய பகுதியாகும்.

செபமாலையைப் பாடிய ஆசிரியர் **வேதநாயகம் சாஸ்திரியார்** என்பவராவர். இவர் திருநெல்வேலி நாட்டில் சைவ வேளாளர் குலத்தில் 1774ஆம் ஆண்டு பிறந்தவர். இளமையில் கிறிஸ்தவராகி, தஞ்சை சுவார்ட்ஸ் ஐயரிடம் கல்வி கற்று, வேத அறிவிலும் கவி பாடும் திறமையிலும் சிறந்து விளங்கினர். **பராபரன் மாலை, ஞானவுலா, ஞானக்கும்மி, பேரின்பக் காதல், பெத்தலேகேம் குறவஞ்சி** முதலிய பல கிறிஸ்தவ நூல்களையும் இவர் பாடியுள்ளார்.

ஒருவழியான் ஒருமறையான் ஒருகாவில் ஒருதருமேல்
ஒருபாம்பைச்சேர்
ஒருகனியால் வந்தபவந் தீர்க்கவோரு கனிவயிற்றா
டுதித்தோரூரில்
ஒருகுடிலில் ஒருநாளிற் பிறந்துயர்ந் தோர்குருசேறி
உயிரோன்றீந்த
ஒருவனையேன் னுயிரளவும் ஒருபோது மறக்காம
லோதுவேனே.

— *வேதநாயகம் சாஸ்திரியார்.*

குறிப்புரை

ஒருவழியான் — முத்திக்கு ஒரே வழியாயுள்ளவன்; ஒரு மறையான் — ஒப்பற்ற வேதப் பொருளானவன்; கா — ஏதேன் என்னும் தோட்டம்; ஒரு தரு — நன்மை தீமை அறியத்தக்க ஒரு மரம்; ஒரு பாம்பு — பாம்பு உருவில் வந்த சாத்தான்; ஒரு கனி — முதல் பெண்ணாகிய ஏவாள்; ஒரு கனி வயிற்றூடு — ஒப்பற்ற கன்னியாகிய மரியாள் வயிற்றிடத்து; ஓர் ஊர் — பெத்தலே என்னும் ஓர் ஊர்; குடில் — மாடு அடைக்கும் குடிசை; குருசு — சிலுவை; ஒருவன் — ஒப்பற்ற கிறிஸ்துபெருமான்; ஓதுவேன் — துதிப்பேன்.

இப்பாடலில் உலகத்திற்குத் தீமை வந்த விதமும் அதனைத் தீர்க்க இறைவன் கொண்ட கோலமும் இனிது கூறப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

5. முதுமணிமாலை.

முதுமணிமாலை யென்பது, முதிர்ந்த மணிகள் போன்ற சொற்களாலாகிய செய்யுட்தொகுதி என்று பொருள்படும். மாலை என்பதற்கேற்ப இந்நூல் அந்தாதியாகப் பாடப்படவில்லையாயினும் இதிலமைந்துள்ள பாடல்கள் சொன்னயம், பொருணயம் மிகுந்து கற்றோர் மனத்தைக் கனியச் செய்யும் தன்மையுடையன. இஃது இப்பொழுது '**முதுமொழிமாலை**' என்னும் பெயரோடு எண்பத்தைந்து பாடல்களையுடையதாய் அச்சிடப்பட்டுள்ளது,

முகமது நபியின் வரலாறான சீறாப்புராணத்தைப் பாடிய உமறுப்புலவரே இந்நூலையும் பாடினார் என்பர். இவர் எட்டையபுரத்தில் சேது முதலியாருக்கு மகவாய்த் தோன்றினார். கடிகைமுத்துப் புலவரிடம் தமிழ் பயின்று புலமை எய்தினார். இவர் சிலகாலம் எட்டையபுரம் சமஸ்தானப் புலவராகவும் இருந்தார். முஸ்லீம் புலவர்களுக்குள் இவரே தலை சிறந்தவர், இவருடைய காலம் கி. பி. 17ஆம் நூற்றாண்டு என்பர்.

அறநெறி வழுவாத் தவத்துரை வேந்தை,
யருமறைப் பொருளினுட் பொருளைத்
தறைமதி யிட்ட காமிய முதவு
சற்குணக் கற்பகா டவியைக்

குறைவிலா னந்தத் துறையிடத் தமர்ந்த
கோண்டலே, லோகநா யகரை
மறைபுகழ்ந் தேத்தும், ஞானவா ரிதியை
முகம்மதை யென்றுகாண் குவனே

— *உமறுப்புலவர்.*

குறிப்புரை

உறைவேந்து — தங்கியுள்ள தலைவன்; வினைத்தொகை. மறைப் பொருளினுட் பொருள் — வேதத்தின் பொருளாயுள்ளவன்; இட்ட காமியம் — பயன் கருதிச் செய்யப்படுவது. கற்பகாடவி — கற்பக + அடவி, கற்பகக் காடு, — கற்பகம் என்பது விரும்புவார்க்கு விரும்பிய தைத் தரவல்ல தொரு தெய்வத்தரு. குறைவிலானந்தத் துறை — குறைவு இல்லாத ஆனந்தமாகிய இடம்; கொண்டல் — மேகம் போன்றவன்; உவமையாகு பெயர் லோகநாயகன்—உலகத்திற்குத் தலைவன்; ஏத்தும் — துதிக்கும், வாரிதி — கடல்.

பயிற்சி வினக்கள்

தேவாரம்

1. *தேவாரம் என்பது யாது? அதன் பெயர்க்காரணத் தைக் குறிப்பிடுக.*

2. *தேவாரம் பாடிய மூவர் யார்? அவர்கள் காலம் எவை?*

3. *திருமுறையில் தேவாரம் அமைந்துள்ள முறையைக் குறிப்பிடுக.*

4. *திருநாவுக்கரசரை பற்றி குறிப்பு வரைக.*

5. *திருநாவுக்கரசர் இறைவனது தன்மையை எங்ஙனம் குறிப்பிடுகின்ருர்?*

6. *திருநாவுக்கரசர் ஆவடுதண்டுறையுறைவானிடம் வேண் டுவது யாது?*

7. *'கண்ணே கண்ணிற்கருமணியே மணியாடு பாவாய்' — இதற்கு விளக்கமான பொருள் தருக.*

8. *செழுஞ்சுடர், நற்சோதி, கருமணி, வல்வினை, தண்டுறை — இவை பண்புத் தொகையாவ தெங்ஙனம்?*

பெருமாள் திருமொழி

1. பெருமாள் திருமொழி எந்நூற் பகுதியில் உள்ளது? இதன் பெயர்க் காரணத்தை ஆராய்க.

2. பெருமாள் திருமொழியாசிரியர் யார்? அவரைப்பற்றிக் குறிப்பு வரைக.

3. திருமாலின் பிள்ளை விளையாட்டுகளாகக் கூறப்படுவன யாவை?

4. குலசேகரப்பெருமான் இறைவனிடம் வேண்டுவது யாது?

5. "கன்றினால் விளவெறிந்ததும், காலால் காளியன் தலை மிதித்ததும்" — இதிலமைந்த வரலாறுகளைக் குறிப்பிடுக.

திருப்புகழ்

1. திருப்புகழ் என்று எதற்குப் பெயர்? அதன் பெயர்க் காரணத்தைக் குறிப்பிடுக.

2. திருப்புகழாசிரியரைப்பற்றிக் குறிப்பு வரைக.

3. திருப்புகழாசிரியர் இறைவனது தன்மையை எங்ஙனம் குறிப்பிடுகின்றார்?

4. அருணகிரிநாதர் இறைவனிடம் வேண்டுவது யாது?

5. கருப்பத்தூறி, பாடுற்றுழலாதே, பரப்பற்றருக்கு, பரத்தப்பாலுக்கு — இத்தொடர்களைப் பதம் பிரித்து எழுதுக.

திருச்செபமாலை

1. செபமாலை, இலக்கத்தோத்திரம் — இவைகளைப்பற்றிக் குறிப்பு வரைக.

2. செபமாலையின் பெயர்க்காரணத்தை விளக்கமாக வரைக.

3. செபமாலை ஆசிரியரைப்பற்றிக் குறிப்பு வரைக.

4. செபமாலை ஆசிரியர் கிறிஸ்து பெருமான் குருசேறி உயிர் துறந்தமைக்குக் கூறும் வரலாறு யாது?

5. திருச்செபமாலையில், ஒரு கா, ஒரு பாம்பு, ஒரு கனி, ஒரூர் என்று குறிப்பிட்டன யாவை?

முதுமணிமாலை

1. முதுமொழிமாலையின் பெயர்க்காரணத்தையும், அதிலமைந்த பாடல்களின் தன்மையையும் குறிப்பிடுக.

2. முதுமொழிமாலை பாடிய ஆசிரியரைப்பற்றிக் குறிப்பு வரைக.

3. முகமது நபியை ஆசிரியர் என்னென்ன பெயரிட்டழைக்கின்றார் ?

4. கொண்டல், கற்பகாடவி என முகமது அழைக்கப் படுவதற்குக் காரணம் கூறுக.

5. அறநெறி, குறைவிலா, கற்பகாடவி — இவற்றிற்குப் புணர்ச்சி விதி கூறுக.

II. அறவுரை

1. திருக்குறள்

குறள் என்பது திருக்குறள். குறைந்த இரண்டு அடிகளையுடைய வெண்பாவைக் குறிக்கும். அத்தகைய குறள் வெண்பாக்களாலாகிய நூலுக்குத் திருக்குறள் என்று பெயராயிற்று. இதில் 'திரு' என்பது சிறப்புப்பற்றி வந்த அடைமொழியாகும். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகளையும், பல இயல்களையும், 133 அதிகாரங்களையுமுடையது. அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்களாகத் திருக்குறளில் 1330 குறட்பாக்கள் உள்ளன.

திருக்குறளைக் குறித்துச் சங்கப்புலவர்கள் பாடியனவாக அமைந்த திருவள்ளுவமாலைப் பாடல்கள் அதனைப் பலதிறப்படச் சிறப்பித்துள்ளன. திருக்குறளுக்கு ஆதியில் பத்துப்பேர் உரை எழுதியுள்ளனர். இக்காலத்தும் அதற்குப் பலர் உரை எழுதி வருகின்றனர். அது உலகத்தில் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்பது திருக்குறளின் சிறப்பை விளக்கும் பழமொழியாகும். முப்பால், தமிழ்மறை, பொதுமறை, பொய்யாமொழி முதலியன திருக்குறளுக்கு அதன் சிறப்புப்பற்றி எழுந்த பெயர்களாகும்.

திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரது பிறப்பிடம், குலம், சமயம், காலம் முதலியனபற்றிய செய்திகள் ஒன்றும் இப்பொழுது திட்டமாகத் தெரியவில்லை. அவர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் வாழ்ந்தார் என்று இக்கால ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். மணிமேகலையாசிரியர் அவரைப் 'பொய்யில் புலவன்' என்று புகழ்ந்துள்ளனர். 'வள்ளுவன் தன்னை யுலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் பாடியுள்ளார். நாயனார், தேவர், முதற்பாவலர், செந்நாப்போதார் முதலியன அவருக்கு வழங்கும் சிறப்புப் பெயர்களாகும்.

கடவுள் வாழ்த்து

1. கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்?

அறன்வலியுறுத்தல்

2. மனத்துக்கண் மாசில ஞதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

அன்புடைமை

3. அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த வுடம்பு.

விருந்தோம்பல்

4. மோப்பக் குழையு மனிச்சம்; முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

இனியவை கூறல்

5. இனிய வுளவாக இன்னுத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

செய்ந்நன்றி அறிதல்

6. காலத்தி ஞற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

நடுவுநிலைமை

7. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

அடக்கமுடைமை

8. தீயினுற் சுட்டபுண் ணுள்ளாறும், ஆறுதே
நாவினுற் சுட்ட வடு.

ஒழுக்கமுடைமை

9. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லா ரறிவிலா தார்.

பொறையுடைமை

10. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

அழுக்காறாமை

11. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉ மின்றிக் கெடும்.

வெஃகாமை

12. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

புறங்கூறாமை

13. அறங்கூறா னல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது.

பயனில சொல்லாமை

14. பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்;
மக்கட் பதடி யெனல்.

தீவினையச்சம்

15. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா தடியுறைந் தற்று.

ஒப்புரவறிதல்

16. ஒப்புரவி னால்வருங் கேடெனில் அஃதொருவன்
விற்றுக்கோ டக்க துடைத்து.

ஈகை

17. வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

புகழ்

18. தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

அருளுடைமை.

19. பொருளற்றார் பூப்ப ரொருகால் அருளற்றார்
அற்றார்மற் றாத லரிது.

புலால் மறுத்தல்

20. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்.

— *திருவள்ளுவர்.*

குறிப்புரை

1. என்கொல்—எவன் என்பது 'என்' எனத் திரிந்தது. கொல், அசை நிலை, வாலறிவன்—மெய்யறிவுடைய இறைவன், நற்றாள் — நன்மை + தாள். பண்புத் தொகை, தொழா அர் — பணியார் : இசை நிறைக்க வந்த அளபெடை.

2. மாசு இலன் ஆதல் குற்றமில்லாதவனாகுக. ஆதல்—வியங்கோள் வினைமுற்று. ஆகுலநீர—ஆரவாரத்தன்மையன ; ஆகுலம்-ஆரவாரம். பிற-மனத்தூய்மையில்லாத பிற சொல்லும் செயலும்.

3. அன்பின் வழியது உயிர்நிலை — அன்பு முதலாக அதன் வழி நின்ற உடம்பே உயிர்நின்ற உடம்பாம். என்பு தோல் போர்த்த-என்பினைத் தோலால் போர்த்தனவாம்.

4. குழையும் — வாடும் ; அனிச்சம் — அனிச்சமலர் ; ஆகுபெயர் விருந்து — விருந்தினர் , அனிச்சமலரினும் விருந்தினர் மெல்லியர் என்பதாம்.

5. இனி—இனிய சொற்கள்; இன்னாத—கடுஞ்சொற்கள்; கவர்ந்தற்று—உண்டதை யொக்கும் ; இங்குக் கனி என்றது, ஔவையுண்ட நெல்லிக்கனியைப்போன்ற இனியவற்றையும், காய் என்றது காஞ்சிரங்காய்போன்ற நஞ்சாயினவற்றையும் குறிக்கும்.

6. காலத்தினால்—ஆபத்துக்காலத்தின்கண், ஆல், உருபு மயக்கம், சிறிது எனினும்—அளவில் சிறிதாயிருந்தாலும் ; ஞாலத்தின் — உலகத்தினும் ; இன், ஐந்தனுருபு உறழ் பொருளில் வந்தது மாண—மிக.

7. சமன் செய்து — தன்னைச் சமமாகச் செய்து ; சீர்தூக்கும் — ஏனைய பொருள்களின் ஏற்றத் தாழ்வை அளக்கும் ; கோல் — துலாக்கோல், சான்றோர் — நடுவு நிலைமையுடைய பெரியோர்; அணி—அழகு.

8. உள்—மனம்; நா—நாவினால் சொல்லப்படும் கடுஞ்சொற்கள் சுடுந் தொழிலில் தீயும் நாவும் ஒக்குமாயினும் தீயினால் சுட்டபுண் ஆறும், நாவினால் சுட்டவடு ஆறாது என்றமையால் இது வேற்றுமை யணியாம்.

9. ஒட்ட ஒழுகல்—பொருந்த நடத்தல், இப்பாடலை 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார், பலகற்றும் அறிவில்லாதார்' என உரை நடைப்படுத்திப் பொருள் கொள்க.

10. அகழ்வார் — வெட்டுபவர்; இகழ்வார் — அவமதித்துப் பேசுவாரும் நடப்பாரும்.

11. கொடுப்பது பிறர்க்குக் கொடுக்கும் பொருளிடத்து; அழுக்கறுப்பான்—பொறாமை கொள்பவன்; சுற்றம்—இனத்தார், உண்பதூஉம்; கொடுப்பதூஉம் இன்னிசையளபெடைகள்.

12. அஃகாமை—சுருங்காமை; இங்கு ஆகுபெராம்; சுருங்காமைக்குக் காரணம் எனப் பொருள்படும் வெஃகாமை—விரும்பாமை.

13. அறங்கூருன்—அறன் என்று கூடச் சொல்லாதானுய்; அல்ல —அறனல்லாத தீமைகள்; புறங்கூருமை—பிறரைக் காணுதவிடத்து இகழ்ந்துரையாமை.

14. பயன் இல் சொல்—பயனில்லாத சொற்கள்; பாராட்டுவானை —பெரிதாக மதித்துக் கூறுபவனை; மகன் எனல்—மகன் என்று சொல்லற்க பதடி—பதர்; எனல்—என்று சொல்லுக; இப்பாடலில் 'எனல்' என்பதில் முன்னது எதிர்மறை வியங்கோள் வினைமுற்று, பின்னது உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று

15. கெடுதல்—தான் கெடுதல்; வீயாது—கெடாது; அடியுறைந்தற்று—தனது அடியின்கண் தங்குவதை யொக்கும்; ஒருவனது நிழல் அவனை விட்டுப் பிரியாது அவன் அடியிலேயே படிந்து கிடக்கும். அதுபோல தீவினை செய்த ஒருவர்க்குக் கேடு அவரைப்பற்றியே நிற்கும் என்பது.

16. ஒப்பரவு—உலக நடையை அறிந்து செய்தல்; விற்றுக்கோள் தக்கது உடைத்து—தன்னை விற்ருயினும் அதைக் கொள்ளுதல் தகுதியுடைத்தாம். ஒப்புரவினுல் வரும் கேடு கேடாகாது; புகழேயாம் என்பது.

17. ஈவது—கொடுப்பது; குறி எதிர்ப்பு—அளவு குறித்து வாங்கி அவ்வாங்கியவாறே கொடுப்பது.

18. தோன்றில்—மக்களாய்ப் பிறக்கின், புகழ்—புகழுக்கேதுவாகிய குணம். ஆகுபெயர்

19. பொருள் அற்ருர்—பொருள் இல்லாத வறியவர்; பூப்பர்—பொலிந்து விளங்குவர்; அருள் அற்ருர்—அருள் இல்லாதவர், அற்ருர் —அழிந்தவரேயாவர்: ஆதல்—ஈடேறுதல்.

20. கொல்லான்—உயிர்களைக் கொல்லாதவனுய்; புலாலை மறுத்தான்—கொன்ற உயிரின் இறைச்சியை உண்ணுதவன்.

2. திரிகடுகம்

திரிகடுகம் என்பது, கடைச்சங்க காலத்தில் தோன்றிய தோர் நீதி நூல். இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் அளவாய்ச் சேர்ந்த ஒருவகை மருந்துக்குத் 'திரிகடுகம்' என்று பெயர்; அது உடற்பிணியை நீக்கி உறுதி கொடுக்கும் இயல்புடையது. அதுபோல செய்யுள் தோறும் மூன்று நீதிகளையுடையதாய், அறியாமையாகிய பிணியை நீக்கி, உயிர்க்கு உறுதியைக் கொடுக்கும் இந்நூலும் அப்பெயர் பெற்றது. இது உவமையாகு பெயர். இனி, இந்நூலுள் '**திரிகடுகம் போலு மருந்து**' என வருதலால், அச்சொல்லே இந்நூற்குப் பெயராயிற்று என்பாருமுளர். இது காப்புச் செய்யுள் உட்பட 101 வெண்பாக்களை யுடையது. இதற்குப் பழைய பொழிப்புரை யொன்றுண்டு. இக்காலத்திலும் பலர் இதற்கு விளக்கவுரைகள் எழுதி வெளியிட்டுள்ளனர்.

திரிகடுகம் பாடிய **நல்லாதனார்** கடைச்சங்கப் புலவர்களில் ஒருவர். இவரைப்பற்றிய வேறு வரலாறு ஒன்றும் இப்பொழுது தெரியவில்லை. இவரது சமயம் வைணவம் என்பது இவர் இந்நூற்குப் பாடிய காப்புச் செய்யுளால் தெரிகிறது. இவருடைய காலம் கடைச்சங்க காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றுண்டின் இறுதிக்காலமாகும்.

மெய்ப்பொருளுணர்ந்தவர்

1. வைததனை இன்சொல்லாக் கொள்வானும், நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும், — ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்.

பயனற்றவை

2. குருடன் மனையா ளழகும், இருடீரக்
கற்றறி வில்லான் கதழ்ந்துரையும் — பற்றிய
பண்ணிற் றெரியாதான் யாழ்கேட்பும் இம்மூன்றும்
எண்ணிற் றெரியாப் பொருள்.

ஒற்றுரை யொத்தார் இவர் எனல்

3. அருமறை காவாத நட்பும், பெருமையை
வேண்டாது விட்டொழிந்த பெண்பாலும், — யாண்
டானுஞ்
செற்றங் கொண்டாடுஞ் சிறுதொழும்பும் இம்மூவர்
ஒற்று ளெனப்படு வார்.

— நல்லாதனார்.

குறிப்புரை

1. வைதது — வன்சொல்லாகச் சொல்லியது; **வினையாலணையும் பெயர்;** இன்சொல்லா — இனிய சொல்லாக; சொல்லா, ஈறு திரிந்தது. நெய் பெய்த — நெய் இட்ட; கூழ் — புல்லரிசி; ஊறிய வாயில் நீர்பெருக; **சொல்லிய** என்னும் **வாய்பாட்டுவினையெச்சம்;** கைப்பு — கைக்கும் பொருள்; கட்டி — வெல்லக்கட்டி.

2. இருள்தீர — மயக்கம் நீங்க; கற்றறிவில்லான் — கற்றும் அறிய மாட்டாதவன்; கதழ்ந்துரை — விரைந்துசொல்லும் சொல்; உரை, **முதனிலைத்தொழிற்பெயர்.** பற்றிய — விரும்பப்பட்ட; பண்ணின் — பண்களை; பண் — இசை; யாழ் — யாழோசை; **கருவியாகு பெயர்;** கேட்பு — கேட்டல்; 'பு' **விகுதி பெற்ற தொழிற்பெயர்.**

3. அருமறை — வெளிப்படுத்துதற்கரிய இரகசியம்; **பண்புத் தொகை.** பெருமை — நற்குண நற்செய்கைகளினுலுண்டாகும் புகழ் ஒழிந்த — கற்புநிலைதவறிய; செற்றம் — பகை சிறுதொழும்பு — ஏவலாளர்; ஒற்றுள் — ஒற்றறிந்து கூறுபவர்; ஒற்று — இரகசியம்.

3. நான்மணிக்கடிகை

நான்மணிக்கடிகை யென்பது, கடைச்சங்க காலத்தில் தோன்றிய ஒரு நீதி நூலாகும். இது பதினெண் கீழ்க் கணக்கில் ஒன்று. கடிகை — கழுத்திலணியும் ஒருவகை மாலை; நான்கு வகை மணிகளால் கோர்க்கப்பட்ட மாலை நான்மணிமாலை (கடிகை) என்றுற்போல, செய்யுள்தோறும் நான்கு நீதிகள் தோன்றப் பாடப்பட்ட இந்நூலும் **நான்மணிக்கடிகை** யென்று பெயர் பெற்றது. இஃது அடை யடுத்த உவமையாகு பெயர். காப்புச் செய்யுள் ஒன்று நீங்கலாக இந்நூல் நூறு வெண்பாக்களையுடையது. இதற்குப் பழைய பொழிப்புரை யொன்றுள்ளது. இக் காலத்தினும் பலர் இதற்கு விளக்கவுரை யெழுதி யுள்ளார்கள்.

நான்மணிக்கடிகையைப் பாடிய **விளம்பிநாகனர்** கடைச் சங்கப்புலவர்களில் ஒருவராவார், நாகனர் என்பது இவரது இயற்பெயர். விளம்பி என்பது இவரது ஊர். அவ்வூரில் பிறந்த காரணத்தினலோ அல்லது வாழ்ந்த காரணத்தினலோ இவர் இப்பெயர் பெற்றார். நான்மணிக் கடிகையின் காப்புச் செய்யுளில் இவர் திருமாலை வாழ்த்தி யிருப்பதால், இவருடைய சமயம் வைணவம் எனத் தெரி கிறது. இவருடைய காலம் கடைச் சங்க காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலமாகும்.

எல்லாம் பொருளில் பிறக்கும்

1. கல்லிற் பிறக்கும் கதிர்மணி; காதலி
சொல்லிற் பிறக்கு முயர்மதம் — மெல்லென்
றருளிற் பிறக்கு மறநெறி; எல்லாம்
பொருளிற் பிறந்து விடும்.

தனக்கு அணியாவது

2. நிலத்துக் கணியென்ப நெல்லும் கரும்பும்;
குளத்துக் கணியென்ப தாமரை; பெண்மை
நலத்துக் கணியென்ப நாணம்; தனக்கணியாம்
தான்செல் லுலகத் தறம்.

சான்றோரைப் பிணிக்கும் விதம்

3. கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத் தாற்பிணிப்பர் மாநாகம் — கொந்தி
இரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை
நயத்திற் பிணித்து விடல்.

— விளம்பிநாகனர்.

குறிப்புரை

1. கதிர்—ஒளி; காதலி—மனைவி; உயர்மதம்—வினைத்தொகை; மெல்லென்று—மெல்லிய; அறநெறி—தருமவழி; இருபெயரொட்டுப் பண்புத்தொகை; பொருளில் — பொருளினால்.

2. அணி — அழகு; பெண்மை — பெண்தன்மை; நாணம் — தகாதவற்றைச் செய்தற்கு வெட்கப்படல்; தான் செல்லுலகம் — மறுமையுலகம்; அறம் — அறச்செயல். ஆகுபெயர்.

3. கந்து — கட்டுத்தறி; களிறு — மதயானை; கதந்தவிர — கோபம் நீங்க; கொந்தி — உடம்பை ஒறுத்து; கயம் — கீழ்மகன்; இரும்பு — விலங்கு; **ஆகுபெயர்**; சான்றோர் — பெரியோர்; நயம் — இன்சொல்; விடல் — விட்டு விடுக; **வியங்கோள்வினைமுற்று**

4. சிறுபஞ்சமூலம்

சிறுபஞ்சமூலம் என்பது, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகும். சிறிதாகிய ஐந்து வகை வேர் என்பது இதன் பதப்பொருள். மூலம் — வேர், கண்டங்கத்தரிவேர்; சிறுவழுதுணைவேர்; சிறுமல்லிவேர்; நெருஞ்சிவேர்; பெருமல்லிவேர், ஆகிய ஐந்தும் மருத்துவ நூலில் '**பஞ்சமூலம்**' என்று பெயர் பெற்றுள்ளன. அவை உடற் பிணியை நீக்கி உறுதிகொடுக்கும் இயல்புடையன; அது போல இந்நூலும் செய்யுள் தோறும் ஐந்து பொருள்களை யுடையதாய் அறியாமையாகிய பிணியை நீக்கி உயிர்க்கு உறுதி கொடுக்கும் தன்மையால், இப்பெயர் பெறலாயிற்று. இஃது அடையடுத்த உவமையாகுபெயர். இந்நூல் பாயிரமுட்பட 100 நேரிசை வெண்பாக்களையுடையது. இதற்குப் பழைய பொழிப்புரையொன்று உளது. இக் காலத்திலும் பலர் இதற்கு விளக்கவுரை யெழுதி யுள்ளார்கள்.

சிறுபஞ்சமூலத்தை இயற்சுயவர் **காரியாசான்** என்னும் புலவராவர். இவர் மாக்காயர் என்பவருக்கு மாணாக்கர் என்பதும், சிறந்த கொடைவள்ளல் என்பதும், ஆசிரியர் தொழில் பூண்டவர் என்பதும் இதன் பாயிரச் செய்யுளால் தெரிகிறது. இவரைப்பற்றிய பிற செய்திகள் ஒன்றும் இப்பொழுது காணப்படவில்லை. இவருடைய காலம் கடைச் சங்க காலமாகும்.

கூற்றமாவன

1. சிலம்பிக்குத் தன்சினை கூற்றம்நீள் கோடு
விலங்கிற்குக் கூற்ற மயிர்தான் வலம்படா
மாவிற்குக் கூற்றமா ஞெண்டிற்குத் தன்பார்ப்பு
நாவிற்கு நன்றல் வசை.

நகைத்தற்குரியன

2. நாணிலான் சால்பும், நடையிலான் நன்னோன்பும்,
ஊணிலான் செய்யும் உதாரதையும், — ஏணிலான்
சேவகமும் செந்தமிழ் தேற்றான் கவிசெயலும்
நாவகமே நாடி னகை.

இன்னார் இத்தன்மைய ரென்பது

3. பூத்தாலுங் காயா மரமுமுள ; நன்றறியார்
மூத்தாலும் மூவார்நூல் தேற்றாதார் — பாத்திப்
புதைத்தாலும் நாறாத வித்துள பேதைக்
குரைத்தாலும் செல்லா துணர்வு.

— *காரியாசான்*

குறிப்புரை

1. சிலம்பி - சிலந்திப்பூச்சி, சினை — முட்டை; கூற்றம் உடலினின்று உயிரைக்கூறுபடுத்தும் எமன்; விலங்கு—மான் முதலிய மிருகம்; நீள்கோடு - நீண்ட கொம்பு; வலம்படா — வெற்றியுண்டாகாத; மாவிற்கு — கவரிமானாகிய மிருகத்திற்கு; ஞெண்டு — நண்டு; பார்ப்பு — குஞ்சு; நன்று அல்வசை நன்மையல்லாத இழிசொற்கள்.

2 நாண் — நாணம்; சால்பு—அமைதி; நடை— நல்லொழுக்கம்; நோன்பு — விரதம்; ஊண் — உணவு; உதாரதை — ஈகை; ஏண் — வலிமை; சேவகம் — வீரச்செயல்: தேற்றான் — தெளிந்த அறிவில்லாதவன்; நா அகம் - நாவினிடத்து; நாடின் — ஆராயின்.

3. காயா — காய்க்காத; நன்று அறியார் — ஒருவர் செய்த நன்மையை மறந்தவர்கள் மூத்தாலும் — ஆண்டில் முதுமையடைந்தாலும்; மூவார் — அறிவில் முதியவராகார்; நூல் தேற்றாதவர் — கற்கவேண்டிய நூல்களைக் கற்றுத் தெளியாதவராவர்; பாத்திப் புதைத்தாலும் — பாத்திகட்டிப் புதைத்தாலும் ; நாறாத — முளைக்காத ; பேதைக்கு — அறிவில்லாதவனுக்கு; செல்லாது உணர்வு — அறிவு தோன்றாது.

5. நீதி வெண்பா

நீதி வெண்பா என்பது நீதியைப்பற்றிய வெண்பா என விரியும். இஃது இரண்டனுருபும் பொருளும் உடன் தொக்கத் தொகை. வெண்பா என்பது வெண்பாயாப்பினால் பாடப்பட்ட நூலைக் குறித்து நின்றது. எனவே

அது கருவியாகு பெயர். இது நாலடியாரைப் போன்ற தொரு அறநூல். காப்புச் செய்யுள் நீங்கலாக இந்நூல் 100 வெண்பாக்களையுடையது. திருவள்ளுவரது கருத்துக்கள் இந்நூலில் மிகுதியும் காணப்படுகின்றன. இநிலமைந்த வெண்பாக்களில் சில பழமையாகவும், பல பிற்கால நடைபயின்றனவாகவும் அமைந்திருப்பதால், இந்நூல் பிற்காலத்தில் ஒருவரால் தொகுக்கப்பட்டதென்று தெரிகிறது.

நீதி வெண்பாவின் ஆசிரியர் இன்னுரென்று தெரியவில்லை. ஆனுல் இதன் காப்புச் செய்யுளால், இந்நூலாசிரியர் சைவ சமயத்தினரென்பதும், இந்நூலுக்கு முதனூல் முன்னோர் உரைத்த மூதுரைகளே என்பதும் தெரிகின்றன. இதன் காலம் சமண, பௌத்தர் காலமெனக் கருதுதற்கு இடமளிக்கின்றது.

கற்ருேர் சிறப்பெய்து மிடம்

1. ஆனை மருப்பும் அருங்கவரி மான்மயிரும்
கான வரியுகிரும் கற்றோரு — மானே
பிறந்தவிடத் தன்றிப் பிறிதோருதே சத்தே
செறிந்தவிடத் தன்றே சிறப்பு.

உருவத்தினுல் பிறரை மதிக்கலாகாது

2. கர்ப்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கர்ம்பூர மாமோ கடலுப்பு — போற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணிய ராவாரோ புகல்.

சிற்றறிஞரும் பேரறிஞரும்

3. சிற்றுணர்வோ ரேன்றுஞ் சிலுசிலுப்ப ரான்றமைந்த
முற்றுணர்வோ ரோன்று மொழியாரே — வெற்றிமிகும்
வெண்கலத்தி னோசை மிகுமே விரிபசும்போன்
ஒண்கலத்தி னுண்டோ வொலி.

குறிப்புரை

1. மருப்பு—கொம்பு; கான வரி உகிர்—காட்டில் வாழும் புலி நகம்; வரி—வரிகளையுடைய புலி, சினையாகு பெயர். செறிந்த இடம்—தாம் சேர்ந்த இடம்; கற்றோர்க்கு அவர்கள் பிறந்த இடங்களில் உண்டாம் சிறப்பினும் சேர்ந்த இடத்திலுண்டாம் சிறப்பு மிகுதி என்பது.

2. கர்ப்பூரம் சூடம்; பொற்பு—அழகு; புண்ணியர் – நல்வினையாளர்; புல்லியர்—அற்பர்கள்.

3. சிற்றுணர்வோர் — சிறிய அறிவினையுடையவர்கள்; ஆன்று அமைந்த — கல்வி கேள்விகளால் நிறைந்து அவற்றிற்கு அடங்கிய; முற்றுணர்வோர் — முற்றும் அறிந்தவர்கள்; பசும்பொன் — பண்புத்தொகை; ஒண்கலம் — ஒளிபொருந்திய பாத்திரம்.

பயிற்சி வினைக்கள்

திருக்குறள்

1. 'திருக்குறள்' என்பதன் பெயர்க் காரணத்தைக் குறிப்பிடுக.

2. திருக்குறளின் அமைப்பு முறையை எழுதுக.

3. திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்களில் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.

4. திருக்குறளின் சிறப்பினை எவ்வெவற்றாலறியலாம்?

5. திருவள்ளுவரைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

6. கல்வி கற்றலின் பயனாக வள்ளுவர் கூறுவது யாது?

7. 'அறன்வலியுறுத்தல்' என்பதன் பொருள் யாது? அதன் கீழமைந்த குறட்பா அதற்கு எவ்வாறு விளக்கமாகும்?

8. அன்புடையார், அன்பிலார் இவர்களுக்கு எது எது உவமையாகும்? விளக்கி எழுதுக.

9. விருந்தினரின் மென்மைத் தன்மையை வள்ளுவர் எங்ஙனம் விளக்குகின்றார்?

10. "கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"— இது எதற்கு உவமை? காய், கனி என்பன எவை போல்வனவற்றை?

11. காலத்தினாற் செய்த நன்றியின் சிறப்பென்னை?

12. சான்ருேர்க்கு அணியாகக் கூறப்படுவது யாது? அதனை வள்ளுவர் எங்ஙனம் விளக்குகின்ருர்?

13. தீயினுற் சுட்டமைக்கும் நாவினுற் சுட்டமைக்குமுள்ள வேறுபாட்டை வள்ளுவர் எங்ஙனம் குறிப்பிடுகின்ருர்?

14. 'உலகத்தோ டொட்ட' என்று தொடங்கும் குறட்பாவை எழுதி, அதனை உரை நடைப் படுத்திப் பதவுரை தருக.

15. அகழ்வாரைத் தாங்கும் நிலம் — எதற்கு ஒப்பிடப் பட்டுள்ளது? பொருத்திக் காட்டுக.

16. 'கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம்' — எங்ஙிலை யடையும்?

17. நமது செல்வம் குறையாமல் இருத்தற்கு வள்ளுவர் கூறும் வழி யாது?

18. புறங்கூறுதல் எதனிலும் கொடியதாகும்?

19. பயனில் சொல் பாராட்டுவானை எதுவாகக் கருதல் கூடாது? எதுவாகக் கருதல் வேண்டும்?

20. தீயவை செய்தார் கெடுதல் எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது?

21. விற்றுக்கோள் தக்கது, குறி எதிர்ப்பை நீரது— விளக்கி எழுதுக.

22. எல்லா வுயிரும் தொழுதற் குரியார் யாவர்?

திரிகடுகம்

1. 'திரிகடுகம்' என்பதன் பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.

2. திரிகடுகம் பாடிய ஆசிரியர். அவரது சமயம், காலம் முதலியவற்றைக் குறிப்பிடுக.

3. மெய்ப்பொருள் கண்டு வாழ்வார் யாவர்? மெய்ப் பொருள் என்றது எதனை?

4. திரிகடுகத்தில் பயனற்றவையாகக் கூறப்படுவன யாவை?

5. ஒற்ருள் எனப்படுவார் யாவர்? ஒற்ருள் என்பதன் பொருளை நன்கு விளக்குக.

நான்மணிக்கடிகை

1. 'நான்மணிக்கடிகை' என்பதன் பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.

2. நான்மணிக்கடிகையாசிரியரைப் பற்றிக் குறிப்பு வரைக.

3. 'எல்லாம், பொருளில்பிறந்துவிடும்' என்ற உண்மையை ஆசிரியர் எங்தெந்த உவமைகளால் குறிப்பிடுகின்றார்?

4. நிலம், குளம், பெண், இவைகளுக்கு எது எது அணியாம்.

5. களிறு, நாகம், கயவர், சான்றோர், இவைகளை எவ்வெவற்றால் பிணித்தல் கூடும்?

சிறுபஞ்சமூலம்

1. சிறுபஞ்சமூலம் என்று எதற்குப் பெயர்? அது நூலுக்குப் பெயராயினமை எங்ஙனம்?

2. சிறுபஞ்சமூல ஆசிரியரைப் பற்றிக் குறிப்பு வரைக.

3. சிலம்பி, கலைமகள், கவரிமான், ஞெண்டு. இவற்றிற்கு எது எது கூற்றமாகும்; எங்ஙனம்?

4. நகைத்தற் குரியனவாகச் சிறுபஞ்சமூலத்தில் கூறப்படுவன யாவை?

5. மூத்தாலும் மூவார் யார்; உவமையாகக் கூறப்படுவது யாது?

6. 'பாத்தி, புதைத்தாலும் நாறுத வித்துள'—உவமேயந் தந்து விளக்குக.

நீதிவெண்பா

1. நீதிவெண்பாவைப் பற்றிக் குறிப்பு வரைக.

2. 'பிறந்த விடத்தன்றி.........செறிந்த விடத்துச் சிறப்பெய்துவன யாவை? எங்ஙனம்?

3. நீதிவெண்பாவில் கர்ப்பூரமும் கடலுப்பும் யார் யாருக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளன; பொருத்திக் காட்டுக.

4. வெண்கலம், பொன்கலம் இவற்றின் வேறுபாடு யாது? இவற்றால் விளக்கப்படும் உண்மைகள் யாவை?

III. கதை

1. பாஞ்சாலி சபதம்

பாஞ்சாலி சபதம் என்பது, பாஞ்சாலியினது சபதத்தைக் கூறும் நூல் என விரியும். பாஞ்சாலி என்பாள் பாஞ்சால நாட்டு மன்னனான துருபதனுடைய மகள்; பஞ்சபாண்டவர்க்கு மனைவி; திரௌபதி என்பது அவள் பெயர். பஞ்சபாண்டவர்களில் தருமபுத்திரன் துரியோதனனோடு சூதாடி, தன் நாடு நகரங்களைமட்டுமன்றித் தம்பியரையும், திரௌபதியையும் தோற்றான். அதனால் துரியோதனன் தன் தம்பி துச்சாதனனைக் கொண்டு திரௌபதியை அரச சபைமுன் அழைத்துவந்து துகிலுரிந்து அவமானப்படுத்தினான். அது பொறாத அவள் வெகுண்டு, "தன்னை அவமானப்படுத்திய துச்சாதனன் இரத்தத்தையும், அதற்குக் காரணமாயிருந்த துரியோதனன் இரத்தத்தையும் கலந்து பூசி அல்லாமல்தான் இனிக் கூந்தல் முடிப்பதில்லை" யென்று சபதம் செய்தாள். அச்செய்தியே இச்சிறு காப்பியத்தில் கூறப்படுகிறது. இது பெரும்பாலும் வடமொழி வியாசபாரதத்தின் மொழிபெயர்ப்பே என்பது ஆசிரியர் வாக்கால் தெரிகிறது.

பாஞ்சாலி சபதம் என்னும் இக்காப்பியத்தைப் பாடியவர் தேசியக்கவி சி. சுப்பிரமணியபாரதியாராவர். இவர் திருநெல்வேலி நாட்டிலுள்ள எட்டையாபுரத்தில் அந்தணர் குலத்தில் 1882 ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய தந்தை பெயர் சின்னச்சாமி ஐயர்; தாயார் பெயர் இலட்சுமி அம்மையார். இவருடைய பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் சுப்பையா என்பது. இவர் சில காலம் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் ஆங்கிலம் பயின்றார். ஆயினும் தமிழ் மொழியிடத்து மிக்க விருப்பமுடையவராய்த் திருக்குறள், சிலப்பதிகார முதலிய தமிழ் இலக்கியங்களைக் கற்று விரைவில் இவர் கவிபாடும் புலமை எய்தினார். இவருடைய பாடல்களில் தமிழுணர்ச்சியினையும், நாட்டுணர்ச்சியினையும் உண்டுபண்ணும் கருத்துக்கள் பல

மலிந்து காணப்படுகின்றன. இவருடைய பாடல்களின் நயத்தினைக்கண்ட தமிழ்ப்புலவர்கள் இவருக்குப் **'பாரதி'** என்ற பட்டத்தை வழங்கி இவரைப் பாராட்டினர். இவர் 1921 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 11 ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

பாஞ்சாலிசபதம் **துரியோதனன் சூழ்ச்சிச் சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துகிலுரிதற் சருக்கம் சபத சருக்கமென** ஐந்து சருக்கங்களையும், 308 கவிதைகளையும் கொண்டது. அவைகளில் இங்குப் பாடமாக வந்துள்ள பகுதி நான்காவது சருக்கமாகிய துகிலுரிதற் சருக்கத்தில் உள்ளது. இப்பகுதியில் சூதில் வென்ற துரியோதனன் திரௌபதியை அரச அவைக்கு அழைத்து வரும்படி விதுரனுக்குக் கூறியதும், விதுரன் அதனை மறுத்து அவனுக்குப் புத்தி புகட்டியதும், பின் அவன் தன் தேர்ப்பாகனை அனுப்பியதும், தேர்ப்பாகன் அழைப்புக்குத் திரௌபதி மறுமொழி கூறியதும் பிறவுமான செய்திகள் இனிய, எளிய நடையில் கூறப்பட்டுள்ளன.

துரியோதனன் விதுரனுக்குக் கூறியது

அகத்தே இருளுடையான், ஆரியரின் வேறானோன்,
துரியோ தனனும் சுறுக்கெனவே தான்திரும்பி
அரியோன் விதுர னவனுக் குரைசெய்வான் :—
"செல்வாய், விதுரா ! நீ சிந்தித் திருப்பதேன் ?
வில்வா ணுதலினாள், மிக்கஎழி லுடையாள்,
முன்னே பாஞ்சாலர் முடிவேந்தன் ஆவிமகள்,
இன்னேநாம் சூதில் எடுத்த விலைமகள்பால்
சென்றுவிலை வேல்லாஞ் சேவ்வனே தானுணர்த்தி,
"மன்றினிடை யுள்ளான்நின் மைத்துனன்நின் ஓர்தலைவன்
நின்னை அழைக்கிறான் நீள்மனையில் ஏவலுக்கே
என்ன உரைத்தவளை இங்குக்கொணர் வாய்" என்றான்.

துரியோ தனன்இச் சுடுசொற்கள் கூறிடவும்
பெரியோன் விதுரன் பெரிதுஞ் சினங்கொண்டு,
" மூட மகனே மொழியொணா வார்த்தையினைக்
கேடுவரல் அறியாய், கீழ்மையினாற் சொல்லிவிட்டாய்;
புள்ளிச் சிறுமான் புலியைப்போய்ப் பாய்வதுபோல்
பிள்ளைத் தவளை பெரும்பாம்பை மோதுதல்போல்
ஐவர் சினத்தின் அழலை வளர்க்கின்றாய்,
தெய்வத் தவத்தியைச் சீர்குலையப் பேசுகிறாய்;
நின்னுடைய நன்மைக்கிந் நீதியெலாஞ் சொல்லுகிறேன்;
என்னுடைய சொல்,வேறு எவர்பொருட்டும் இல்லையடா!
பாண்டவர்தாம் நாளைப் பழியிதனைத் தீர்த்திடுவார்,
மாண்டு தரைமேல், மகனே! கிடப்பாய்நீ,
தன்னழிவு நாடுந் தறுகண்மை என்னேடா?
முன்னமொரு வேனன் முடிந்தகதை கேட்டிலையோ?
நல்லோர் தமதுள்ளம் நையச் செயல்செய்தான்
பொல்லாத வேனன், புழுவைப்போல் மாய்ந்திட்டான்;
நெஞ்சஞ் சுடவுரைத்தல் நேர்மைஎனக் கொண்டாயோ?
மஞ்சனே, அச்சொல் மருமத்தே பாய்வதன்றோ?
கேட்டார்தம் வாயில் எளிதே கிளைத்துவிடும்;
பட்டார்தம் நெஞ்சில் பலநாள் அகலாது;
வெந்நரகு சேர்த்துவிடும், வித்தை தடுத்துவிடும்;
மன்னவனே, நொந்தார் மனஞ்சுடவே சொல்லுஞ்சொல்;
சொல்லிவிட்டேன்; பின்னொருகால் சொல்லேன், கவுரவர்காள்!
புல்லியர்கட் கின்பம் புவித்தலத்தில் வாராது.
பேராசை கொண்டு பிழைச்செயல்கள் செய்கின்றீர்!
வாராத வன்கொடுமை மாவிபத்து வந்துவிடும்.
பாண்டவர்தம் பாதம் பணிந்தவர்பாற் கொண்டதெலாம்
மீண்டவர்க் கீந்து விட்டு வினயமுடன்

" ஆண்டவரே! யாங்கள் அறியாமை யால்செய்த
நீண்ட பழிஇதனை நீர்பொறுப்பீர் " என்றுரைத்து,
மற்றவரைத் தங்கள் வளநகர்க்கே செல்லவிடீர்,
குற்றந் தவிர்க்கும் நெறிஇதனைக் கொள்ளீரேல்
மாபா ரதப்போர் வரும்நீர் அழிந்திடுவீர்,
பூபாலரே " என்றப் புண்ணியனும் கூறினான்.

துரியோதனன் மாற்றம்

சொல்லிதனைக் கேட்டுத் துரியோதன மூடன்,
வல்லிடிபோல் 'சீச்சி! மடையா, கெடுக,நீ
எப்போதும் எம்மைச் சபித்தல் இயல்புனக்கே.
இப்போதுன் சொல்லை எவருஞ் செவிக்கொளார்.

துரியோதனன் தேர்ப்பாகனுக்குக் கட்டளையிடல்

யாரடா, தேர்ப்பாகன்! நீபோய்க் கணமிரண்டில்
"பாரதர்க்கு வேந்தன் பணித்தான்" எனக்கூறிப்
பாண்டவர்தந் தேவிதனைப் பார்வேந்தர் மன்றினிலே
ஈண்டழைத்து வா'என் றியம்பினான் —

தேர்ப்பாகன் செலவும் பணிவுரையும்

— ஆங்கேதேர்ப்
பாகன் விரைந்துபோய்ப் பாஞ்சாலி வாழ்மனையில்
சோகம் ததும்பி துடித்த குரலுடனே,
" அம்மனே போற்றி! அறங்காப்பாய், தாள்போற்றி!
வெம்மை யுடைய விதியால் யுதிட்டிரனார்
மாமன் சகுனியொடு மாயச்சூ தாடியதில்,
பூமி யிழந்து பொருளிழந்து தம்பியரைத்
தோற்றுத் தமது சுதந்திரமும் வைத்திழந்தார்.
சாற்றிப் பணயமெனத் தாயேஉனை வைத்தார்.
சொல்லவுமே நாவு துணியவில்லை; தோற்றிட்டார்

எல்லாருங் கூடி யிருக்கும் ஸபைதனிலே,
நின்னை அழைத்துவர நேமித்தான் எம்மரசன்"
என்ன உரைத்திடலும்,—

திரௌபதியின் ஐயவுரை

—'யார்சொன்ன வார்த்தையடா!
சூதர் ஸபைதனிலே தோல்சீர் மறக்குலத்து
மாதர் வருதல் மரபோடா? யார்பணியால்
என்னை அழைக்கின்றாய்?' என்றாள் —

தேர்ப்பாகன் மறுமொழி

— அதற்கவனும்,
'மன்னன் சுயோதனன்றன் வார்த்தையினால்'
என்றிட்டான்.

திரௌபதி வினவுரை

'நல்லது; நீ சென்று நடந்தகதை கேட்டுவா
வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம்
என்னை முன்னேகூறி இழந்தாரா? தம்மையே
முன்ன மிழந்து முடித்தென்னைத் தோற்றாரா?
சென்று ஸபையில்இச் செய்தி தெரிந்துவா'
என்றவளுங் கூறி, இவன்போ கியபின்னர்,

திரௌபதியின் துன்பநிலை

தன்னந் தனியே தவிக்கும் மனத்தாளாய்,
வன்னங் குலைந்து மலர்விழிகள் நீர்சொரிய,
உள்ளத்தை அச்சம் உலைவுறுத்தப் பேய்கண்ட
பிள்ளையென வீற்றிருந்தாள்; —

தேர்ப்பாகன் கொண்டுவந்த செய்தி

— பின்னந்தத் தேர்ப்பாகன்
மன்னன் ஸபைசென்று, 'வாள்வேந்தே! ஆங்கந்தப்

பொன்னரசி தாள்பணிந்து, போதருவீர் என்றிட்டேன்.
"என்னை முதல்வைத் திழந்தபின்பு தன்னைஎன்
மன்னர் இழந்தாரா? மாறித் தமைத்தோற்ற
பின்னரெனைத் தோற்றாரா? என்றேநும் பேரவையை
மின்னற் கொடியார் வினவிவரத் தாம்பணித்தார்
வந்துவிட்டேன்" என்றுரைத்தான் —

அவையின் அமைதி

— மாண்புயர்ந்த பாண்டவர்தாம்

நொந்துபோ யொன்றும் நுவலா திருந்துவிட்டார்.
மற்றும் ஸபைதனிலே வந்திருந்த மன்னரெலாம்
முற்றும் உரையிழந்து மூங்கையர்போல் வீற்றிருந்தார்.

— சி. சுப்பிரமணிய பாரதியார்.

குறிப்புரை.

வரி. 1—11. அகம்—மனம்; அரியோன்—அருமையானவன்; வாள்நுதல்—ஒளி பொருந்திய நெற்றி; எழில்—அழகு; பாஞ்சாலர் முடிவேந்தன்—துருபதன்; ஆவி மகள்—ஆவி அன்ன மகள்; ஆவி — உயிர்; விலைமகள் — அடிமைப் பெண்; விளைவு — நிகழ்ந்தது; மன்று—அரச சபை; மனை—வீடு; ஏவல்—தொண்டு.

வரி 12—28. சுடுசொல்; வினைத்தொகை. சினம் — கோபம்; மொழியொணா—சொல்ல முடியாத; கேடு—அழிவு; கீழ்மை—இழிகுணம்; அழல்—நெருப்பு; தவத்தி—தவத்தினாற் பிறந்த திரௌபதி; சீர்குலைய—பெருமை கெட; மாண்டு—இறந்து; தறுகண்மை—வீரம்; வேனன்: இவன் அங்கனுக்குச் சுநிதையிடம் பிறந்து, தீயொழுக்கத்தால் இருடிகள் சாபமேற்று இறந்தான். முடிந்த—அழிந்த; நைய—வருந்த; நேர்மை—முறை;

வரி. 29—46. மஞ்சன்—மைந்தன்; மருமம்—மார்பு; கிளைத்து—தோன்றி; பட்டார்—துன்பப்பட்டவர்கள்; வெந்நரகு—கொடிய நரகு; வித்தை—கல்வி; கவுரவர்—குரு குலத்தில் தோன்றிய துரியோதனன் முதலியோர்; புல்லியர்—அற்பர்; புவித்தலம்—பூமி; மாவிபத்து—பெரிய ஆபத்து; கொண்டது—கவர்ந்து கொண்ட நாடு முதலியன; மீண்டு—திரும்பவும்; ஈந்து—கொடுத்து; விநயம்—பணிவு; ஆண்டவரே—பெரியீரே; பழி—பழித்தற்குறிய செயல்; வளநாடு—செழிப்புள்ள நாடு; நெறி—வழி முறை; கொள்ளீரேல்—ஏற்றுக்கொள்ளவில்லையானால்; மாபாரதப் போர்—(மா+பார்+அதம்

போர்)—பெரிய உலகமழியும் போர்; பூபாலர்—அரச குலத்தவர்; புண்ணியன்—விதுரன்.

வரி. 47—49. வல்லிடி—கொடிய இடி; மடையா - அறிவில்லாதவனே; சபித்தல் — அழியும்படி கூறுதல்; இயல்பு — வழக்கம்; செவிக்கொளார் — கேளார்.

வரி. 50—53. தேர்ப்பாகன் — தேரை ஓட்டுபவன்; கணம் — நொடிப்பொழுது: பாரதர்க்கு வேந்தன் — பரத குலத்தவர்க்கு மன்னனை துரியோதனன்; பணித்தான் — கட்டளையிட்டான்; தேவி — மனைவி; பார்—உலகம்; மன்று—அவை; ஈண்டு—இங்கே;

வரி. 54—64. பாஞ்சாலி — பாஞ்சால மன்னன் மகள்; மனை — வீடு; சோகம்—துன்பம்; குரல்—பேச்சு; அம்மன்—தாய்; தாள் —பாதம்; உதிட்டிரன் — தரும புத்திரன்; மாய — பொல்லாத; சாற்றி—சொல்லி; பணயம்—பந்தயப் பொருள்; நாவு—நாக்கு; நேமித்தான்—நியமித்தான்.

வரி. 65—68. சூதர் — சூதாடுபவர்; தொல்சீர் — பழமையான பெருமையுடைய; மறக்குலத்து மாதர்—வீரர்குலத்துப் பிறந்த பெண்; மரபு—முறை; பணி—கட்டளை; சுயோதனன்—துரியோதனன்;

வரி. 69—74. சகுனி — துரியோதனன் மாமன், துரியோதனனுக்காகத் தருமனுடன் சூதாடி வென்றவன்; மாண்பு—பெருமை; நாயகர்—கணவர்; போகிய—சென்ற;

வரி. 75—78 மனத்தாளாய்—மனத்தையுடையவளாய்; வன்னம் —அழகு; மலர்விழி—தாமரை மலர் போன்ற கண்கள்; உள்ளம்— மனம்; உலைவுறுத்தல்—துன்புறுத்தல்.

வரி. 79—85. பொன்னரசி—திரௌபதி; போதருவீர்—வருவீர்; மாறி—அதற்கு மாறாக; பேர் அவை—பெரிய அரச சபை; மின்னற் கொடியார்—திரௌபதி;

வரி. 86—88. நொந்து—வருந்தி; நுவலாது—சொல்லாது: உரை—பேச்சு. மூங்கை—ஊமை.

பயிற்சி வினாக்கள்

1. *பாஞ்சாலிசபதம் கூறும் கதை யாது? அதற்கு முதனூல் எது?*

2. பாஞ்சாலிசபதத்தின் ஆசிரியரைப் பற்றிக் குறிப்பு வரைக.

3. பாடமாக வந்துள்ள பகுதி பாஞ்சாலிசபதத்தின் எப்பிரிவைச் சேர்ந்தது? ஏனைய பிரிவுகளைக் குறிப்பிடுக.

4. துரியோதனன் விதுரனிடம் பாஞ்சாலியைப் பற்றி யாது கூறினன்?

5. 'முன்னை பாஞ்சாலன் முடிவேந்தன் ஆவிமகள்'— இடஞ்சுட்டி விளக்குக.

6. விதுரன், துரியோதனன் குற்றங்களை எவ்வாறு குறிப்பிடுகின்றான்? அவன் துரியோதனனுக்குக் கூறிய அறிவுரை யாது?

7. துரியோதனன் பாண்டவரைப் பகைத்தலை விதுரன் எவ்வெவற்றிற்கு ஒப்பிடுகின்றான்?

8. தன்னழிவு நாடுந் தறுகண்மைக்கு விதுரன் எடுத்துக் காட்டாகக் கூறிய வரலாறு யாது?

9. 'மஞ்சனே அச்சொல் மருமத்தே பாய்வதன்றோ'— எச்சொல்? அச்சொல்லால் ஏற்படுந் தீமைகள் யாவை?

10. துரியோதனன் எவ்வாறு விதுரன் அறிவுரையை மறுத்தான்?

11. தேர்ப்பாகன் திரௌபதியிடம் கூறிய செய்தி யாது?

12. திரௌபதி தேர்ப்பாகனிடம் சொல்லியனுப்பிய வினை யாது? அதைக்கேட்ட அவையினர் நிலை எங்ஙனம் கூறப் பெற்றுள்ளது?

13. 'பேய்கண்ட பிள்ளையென'— இடஞ்சுட்டி உவமேயத் துடன் பொருத்திக் காட்டுக.

---

2. குசேலோபாக்கியானம்

குசேலோபாக்கியானம் என்பது, குசேல+உப+ஆக்கியானம் எனப் பிரிந்து, குசேலனது வரலாற்றைக் கூறும் துணைக்கதை என்று பொருள்படும். குசேலன்–கிழிந்த ஆடையையுடையவன்; உப ஆக்கியானம்—துணைக்கதை, இவ்வரலாறு வடமொழிப் பாகவத புராணத்திலுள்ளது. அதனைத் தமிழில் மொழிபெயர்த்தவர் ஆரியப்புலவர் என்னும் பெரியார். அம்மொழிபெயர்ப்புப் பகுதியும், தெலுங்கில் வரகவி என்பார் பாடிய குசேலோபாக்கியானம் என்னும் நூலுமே இதற்கு முதனூல்களாகும்.

இந்நூல் குசேலன் மேல் கடலடைந்த அத்தியாயம், குசேலன் துவாரகை கண்டு தந்நகர்ப் புறமடைந்த அத்தியாயம், குசேலன் செல்வ நுகர்ந்து வைகுண்டமடைந்த அத்தியாய மென மூன்று அத்தியாயங்களையும், 773 விருத்தப்பாக்களையும் கொண்டது. பாடமாக வந்துள்ள பகுதி குசேலன் தந்நகர்ப்புறமடைந்த அத்தியாயத்திலுள்ளது.

குசேலோபாக்கியானத்தைத் தமிழில் பாடியவர் வல்லூர் தேவராச பிள்ளை என்பார். இவர் தொண்டை நாட்டிலே வல்லூர் என்னு மூரில் கருணீகர் குலத்தில் பிறந்தார். இவரது தந்தை பெயர் வீராசாமி பிள்ளை என்பது. இவர் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் தமிழ் பயின்று புலமை எய்தினர். இவர் இந்நூலைப் பாடத் தொடங்கி முடிக்க இயலாதிப்ப இவருடைய ஆசிரியரான மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களே முடித்துக்கொடுத்து, இதற்குச் சிறப்புப் பாயிரமும் தந்தார் என்பார்கள். இவருடைய காலம் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

இப்பாடப் பகுதியில் குசேலன் கண்ணனைக் காணச் சென்றதும், கண்ணன் குசேலனை வரவேற்று உபசரித்ததும், இன்மொழி கூறி அவன் கொண்டு வந்த அவற் பொதியில் ஒரு பிடி எடுத்து உண்டதுமான செய்திகள் கூறப்பட்டுள்ளன.

குசேலன் கண்ணன் கோயில் கண்டு வியத்தல்

ஆசிரிய விருத்தம்

1. மன்னனைக் காணும் அன்பும் வாயில்கா வலரு முன்னே
நன்னயத் துடன டப்ப நடப்பவ னுங்காங் குள்ள
பன்னரும் வளங்க ளெல்லாம் பார்த்தன னிறும்பூ தற்றான்,
பொன்னகர் சிறந்த தென்பார் புல்லிய ரெனவுட்
கொண்டான்.

குசேலன் அரண்மனை அந்தப்புரத்தைச் சார்தல்

2. பன்மணி வாயி லெல்லாம் பின்னிடும் படிந டந்து
நன்மணி மௌலி வேந்தர் நயந்தபே ரவையு நீந்தி
அன்மணி விளர்க்கும் வண்ணன் அணங்கனு ரோடமி
ருக்கும்
பொன்மணி வாயிலந்தப் புரத்தினுக் கணிய னானன்.

குசேலன் கண்ணன் இருந்த தனியிடத்தை அடைதல்

8. வளர்மறை யுணர்ச்சி மிக்கான் வரவுபார்த் திருப்ப அந்த
அளவிடற் கரிய மேலோ னுடைமைத் தோளி னல்லார்
கிளர்தர நின்று காக்கும் கேடில்வா யிலுங்க டந்து
தளர்வில்பன் மாதர் சூழும் தனியிடத் தணுகுங் காலை

குசேலன் கண்ணனைக் காண்டல்

4. எண்ணனைக் கிலங்கு மார்ப மீத்தருள் பிரானை, நீல
வண்ணனைத், திகிரி சங்கம் வலமிட முறக்கொண் டானை,
மண்ணனைத் தும்பு ரக்கும் வாசுதே வனைம ணக்குங்
கண்ணனைத் துளவத் தாமக் கண்ணனைக் கண்ணிற்
கண்டான்.

கண்ணன் குசேலனைக் கண்டு பணிதல்

5. காண்டலு முவகை பூத்துக் கால்விசை கொடுந டந்தான்;
ஆண்டகை யவனுங் கண்ணுற் றணையுடைத் தெழுநீத்
தம்போல்
நீண்டபூம் பள்ளி நீத்து நிலவுபே ரன்பு பொங்கப்
பூண்டமா தவன்முன் சென்று பொன்னடி வணங்கி
னனல்.

கண்ணன் குசேலனை மஞ்சன நீராட்டுதல்

6. அங்கொரு மாடத் துள்ளால் அரதந பீடத் தும்பர்
மங்கல மறைவ லாளன் மகிழ்ந்தெழுந் தருளப் பண்ணிப்
பொங்குபொற் குடம்பூ ரித்த புதியமஞ் சனநீ ராட்டித்
திங்களங் கதிரே யென்னத் திகழ்ந்தவொற் றுடை சாத்தி.

கண்ணன் குசேலனுக்குச் சுவையுணவு நல்கல்

7. விரைதரு தூமங் காட்டி மேவுநெய் விளக்கங் கோட்டி
யுரைபெறு பளித நீரா சனக்கல மொளிரச் சுற்றித்
திரைசெய்நல் லமுத மன்ன தீஞ்சுவை யுணவு நல்கிக்
கரையறு தவத்தோன் வாயுங் கையுமொள் ளறலிற் பூசி.

கண்ணன் குசேலனுக்குக் கவரி வீசுதல்

8. பாகடை சிறப்ப நல்கிப் பயன்பெறு முகமன் கூறிப்
போதுயர் மாடத் திட்ட பொற்றதன் படுக்கை யேற்றி
மோகமிக் கருகி ருந்து முதுகுதை வந்து பின்னும்
கோகன கப்பூங் கையாற் குளிர்செய்பொற் கவரி வீசி,

கண்ணன் குசேலன் களைப்புத்தீரக் கால் வருடுதல்

9. வழிநடந் திளைத்த வேயிம் மலரடி யிரண்டு மென்று
கழிமகிழ் சிறப்ப மெல்ல வருடினன் கமலக் கண்ணன்;
பழியில்பல் லுபசா ரங்கள் பண்ணவுந் தெரியா னகி
யொழிவறு தவக்கு சேல னென்றும்பே சாதி ருந்தான்.

கண்ணன் குசேலனை வினவத் தொடங்குதல்

10. இன்னண மிவனி ருப்ப விவன்வர வனைத்துஞ் சொல்லா
முன்னரே யுணர்ந்து கொண்ட முழுமுதற் கண்ண
னென்பான்,
மன்னிய வுவகை பூத்து வழிதரு மனத்த னகி
யன்னவன் வதந நோக்கி யமையவின் னனசொல் வானல்.

கண்ணன் தான்பெற்ற பேறு கூறுதல்

கொச்சகக் கலிப்பா

11. மன்னுடைய மறையனைத்தும் வகுத்துணர்ந்த மாதவனே
யுன்னுடைய தரிசனத்தால் உடம்புபூ ரித்தனனன்யான்

மின்னுடைய விளங்கொளிவேல் வேந்தருளும் தேவருளும்
என்னுடைய பேறலரும்பே றியார்பெற்றார் யார்பெறுவார்.

மணமாயிற்று என்று கண்ணன் வினுதல்

12. முத்திக்கு வித்தாகு முழுதுணர்ந்தோர் பெருநட்பே
தித்திக்கும் நாடோறுந் தேவர்பெறற் கருந்திருவுஞ்
சித்திக்கும் படியருளும் செப்பரிதா லதுநிற்க
வெத்திக்கும் புகழுநினக் கியன்மணநன் காயிற்றே?

மனையாள் குண நலங் கேட்டல்

13. நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்புபெரு நீர்மையளே
மன்னுடைய சோற்காத்துச் சோர்விலா மாண்பினளே
தன்னுடைய வுயிராநின் றனைப்பேணுந் தன்மையளே
யுன்னுடைய வருவாய்க்குத் தக்கசெல வுஞற்றுவளே

மக்கள் நலம் உசாவுதல்

14. பைங்குதலை வாய்மைந்தர் பலர்பிறக்க வேண்டுமே
யெங்குமரும் புகழுடையாய் யெத்தனைமைந் தர்கள்பிறந்தார்?
அங்கவரைப் பேரவையோர் அணிதரச்செய் செயலனைத்துஞ்
சிங்கலறப் புரிந்தனையோ? செய்தனை யோஉப நயனம்?

மக்களது கல்வி நலங் கேட்டல்

15. இவர்தந்தை என்னோற்றா னென்றறிஞ ருரைக்கும்வகை
இவர்கின்ற மனத்தினரா யிருங்கலைகற் றுணர்வரே
யுவர்கொண்ட கடலாடை புடையுடுத்த வுலகமெலாம்
உவர்கொண்ட குணமேவர்க்குண் டெனமொழிய
வுயர்வரே.

இருவரும் ஒன்றுபட்டமை கூறி மகிழ்தல்

16. சீரார்நின் னூர்நின்று சேர இவண் வருவாரான்
நீரார்நின் தன்மையெலா நென்னல்வரைக் குந்தவரு
தாராய்ந்து கொண்டிருந்தேன் அகன்றபல நாள்களின்பின்
ஏரார்இன் புஞ்சிறப்ப இருவேமும் கூடினேம்.

யாது கொண்டு வந்தனை என்று கேட்டல்
ஆசிரிய விருத்தம்

17. பந்தனை யகன்ற மேலோய் பற்பல நாட்குப் பின்பு
வந்தனை யெனக்கென் கொண்டு வந்தனை யதனை யின்னே
தந்தனை யாயின் நன்று தருசுவைப் பக்க ணத்தேன்
சிந்தனை நின்ற தென்றான் தெரிவரும் வஞ்சக் கள்வன்.

குசேலன் வாளாவிருத்தல்

18. திருந்தவிங் களித்தி யென்று செங்கர மலர்த்தி நீட்டப்
பொருந்தவின் பாலுண் பான்பாற் புளித்தகா டியைக்கொ
டுத்திட்
டருந்திடேன் றுரைத்தல் போலிவ் வவற்கொடை
யென்று வாளா
விருந்தனன் குசேல மேலோன் இவனுள மறிந்த
கண்ணன்.

கண்ணன் அவற்பொதி காண்டல்

19. நடலைதீர்ந் தவன்மெய்ப் போர்த்த நாள்பல கண்ட கந்தைப்
படர்தலைச் சுருக்கி வாங்கிப் பாங்குவைத் தினிதி ஞய்ந்து
விடலருங் கற்பு வாய்த்த மின்னனுர் வணங்குந் தெய்வந்
திடமுற முடிந்து வைத்த சிறுபொதி கண்டு கொண்டான்.

கண்ணன் ஒருபிடி அவல் தின்றல்

20. மலிதரு அன்பின் வந்த வண்பொதி யவிழ்த்து நோக்கி
வலிதரு மவற்று ணன்று வாய்த்தது நமக்கி தென்று
வொலிதரு கழற்கா லையன் ஒருபிடி அவலைக் காதல்
பொலிதர வெடுத்து வாயிற் போகட்டுக் கொண்டான்
மாதோ !

(இவ்வாறு குசேலன் கொண்டுவந்த அவலைக் கண்ணன் உண்ட மகிழ்ச்சியால் அவன் அறியாமலே அவனுக்கு எல்லாச் செல்வமும் உண்டாகியது. அவன் கண்ணனைப் பாராட்டி அச் செல்வங்களை அவனுடைய மனைவி மக்களுடன் துய்த்து இன்புற்றுன்.)

குறிப்புரை

1. நன்னயம் — நல் விருப்பம்; பன்னரும் — பன்ன + அரும், சொல்லுதற்கரிய; இறும்பூது — ஆச்சரியம்; பொன்னகர் — பொன் மயமான தேவலோகம்; புல்லியர் — அற்ப அறிவுடையார்; உட்கொண்டான் — நினைத்தான்

2. மணி — மாணிக்கம்; மோலி — முடி, கிரீடம்; நயந்த — விரும்பி வந்த; அவை — அரச சபை; நீந்தி — கடந்து; அல்மணி — அல்லும் மணியும்; அல் — இருள்; மணி — நீலமணி; விளர்க்கும் — வெளுத்துப் போகும் வண்ணன் — அழகுடையோன்; அணங்கனார் — திருமகளை யொத்த பெண்கள்; அணங்கு — திருமகள்; பொன்மணி — பொன்னும் மணியும், உம்மைத் தொகை; அணியணுகினன் — அருகில் வந்தான்.

3. ஆடு அமைத்தோள் — அசைகின்ற மூங்கில் போலும் தோள்; கிளர்தர — விளக்கமாக; கேடு இல் வாயில் — அழிவில்லாத அந்தப்புர வாயில்; தளர்வு — தளர்ச்சி; தனி — தனித்த; அணுகுதல் — நெருங்குதல்.

4. எண் அனைக்கு — சிறப்பாக எண்ணப்படுகின்ற தாயாகிய இலக்குமிக்கு; பிரான் — திருமால்; வண்ணம் — நிறம்; திகிரி — சக்கரம்; புரக்கும் — காக்கும்; வாசுதேவன் — வசுதேவனுக்கு மகன்; மணக்கும் — வாசனை வீசும்; கள் நனை துளவம் — தேன் நிறைந்த திருத்துழாய்; தாமம் — மாலை.

5. உவகைபூத்து—மகிழ்ச்சி மிகுந்து; விசை கொடு—விரைந்து; ஆண்தகை — ஆண்மைக் குணமுடைய கண்ணன்; கண்ணுற்று — பார்த்து; நீத்தம் — வெள்ளம்; பள்ளி — படுக்கை; நீத்து — பிரிந்து.

6. மாடம் — மாளிகை; அரதநபீடம் — இரத்தின பீடம்; பீடம் — இருக்கை; உம்பர் — மேல்; மறை வல்லாளன் — குசேலன்; பூரித்த — நிறைக்கப்பட்ட; மஞ்சன நீர் — மஞ்சளிட்ட குளிர்ந்த நீர்; கதிர் — கிரணம்; ஒற்று ஆடை சாத்தி—மெல்லிய ஆடையை உடுத்தி.

7. விரை — வாசனை; தூமம் — புகை; விளக்கம் — விளக்கு; கோட்டி — சுற்றிலும் காட்டி; உரைபெறு — புகழ்பெற்ற; பளிதம் — கர்ப்பூரம்; நீராசனக் கலம் — மங்கல ஆலத்தி யமைந்த பாத்திரம்; திரை — அலைகளையுடைய கடல், சினையாகு பெயர். கரை — குற்றம்; ஒள் அறல் — நன்னீர்; பூசி — கழுவி.

8. பாகு அடை — பாக்கு வெற்றிலைகள்; முகமன் — உபசார வார்த்தை; போகு உயர் மாடம் — மிகவுமுயர்ந்த மேலறையில்;

பொற்ற — பொன்னிறமான ; மோகம் மிக்கு — அன்பு மிகுந்து ; தை வந்து — தடவி ; கோகனகம் — தாமரை ; கவரி — வெண்சாமரம்.

9 இளைத்தவே — இளைத்தனவோ, ஏகாரம் வினாப் பொருளில் வந்தது ; கழி—மிக்க ; கமலக் கண் — தாமரை மலர் போன்ற கண் ; பழி இல் — குற்றமில்லாத ; ஒழிவுஅறு — ஓய்வில்லாத.

10. இன்னணம் — இவ்வாறு ; முழு முதல் — முழு முதற் பொருளாகிய ; மன்னிய — நிலையான ; வழிதரு மனம் — இசைந்த மனம் ; வதநம் — முகம் ; அமைய — பொருந்த.

11. மன்னுடைய — நிலையான ; மறை — வேதம் ; தரிசனம் — வரவு ; உடம்பு பூரித்தனன் — மகிழ்ந்தேன் ; மின் — மின்னல் ; பேறு — நன்மை.

12. முத்தி — மோட்சம் ; வித்து – காரணம் ; முழுதுணர்ந்தார் — எல்லாமறிந்த பெரியோர் ; பெரு நட்பு — நல்ல நட்புடைமை ; தித்திக்கும் — இனிமை தரும் ; திரு — செல்வம் ; சித்திக்கும் — உண்டாகும் ; செப்பரிதால் — சொல்லுதற்கு அறியதாம் ; திக்கு — திசை ; புகழும் — புகழ்தற்குரிய ; மணம் — திருமணம்.

13. மனைக்கிழத்தி — மனையாள் ; நிரம்பு — நிறைந்த ; நீர்மை — நற்குணம் ; சொல் காத்து — சொல்லைப் பாதுகாத்து ; மாண்பு — மாட்சிமை ; உயிரா — உயிராக ; உஞற்றுவளே — செய்பவளா ; ஏகாரம், நான்கு அடிகளிலும் வினாப்பொருளில் வந்தது.

14. பைங்குதலைவாய் — பசுமையான மழலைச் சொற்களைப் பேசும் வாயையுடைய ; அரும் புகழ் — அரிய புகழ் ; பேர் அவையோர் — பெரிய சபையிலுள்ளவர்கள் அணிதர — பெருமைப்படுத்த ; சிங்கல் அற — குறைவில்லாதபடி இருக்க ; உப நயநம் — பூணூற் சடங்கு.

15. நோற்றான் — தவம் செய்தானோ ; இவர்கின்ற — விரும்பிய ; இருங்கலை — நல்ல கல்வி உவர்கொண்ட — உப்புச் சுவை பொருந்திய கடலாடை — கடலாகிய ஆடை ; புடை — பக்கம் ; உவர்—மேலே சொல்லியவர்கள், சுட்டுப்பெயர் ; உயர்வாரே — சிறப்புற்றுள்ளாரா ; ஏகாரம்; நான்கு அடிகளிலும் வினாப் பொருளில் வந்தது.

16. சீர் ஆர் — சிறப்பு நிறைந்த ; சேர — ஒருமிக்க ; நீர் ஆர் — நற்குணம் நிறைந்த ; நென்னல்—நேற்று ; ஆராய்ந்து—விசாரித்து ; ஏர் ஆர் — அழகுமிக்க.

17. பந்தனை — உலகப்பற்று ; அகன்ற — நீங்கிய ; வந்தனை — வந்தாய் ; தரு — நீ எனக்குத் தருகின்ற ; பக்கணம் — பண்டம்

சிற்றுண்டி; சிந்தனை — மனம்; தெரிவு அரும் — அறிதற்கரிய; கள்வன் — மாயவனாகிய கண்ணன்.

18. திருந்த — செம்மையாக; இங்கு — இப்பொழுது; மலர்த்தி — விரித்து; இன்பால் — இனிய பாலை; உண்பான் பால் — உண்ணு பவனிடத்து; அவல் கொடை — அவலைக் கொடுத்தல்; வாளா — ஒன்றும் பேசாமல்; உளம் — உள்ளக் கருத்து.

19. நடலை தீர்த்தவன் — வஞ்சனையில்லாதவனாகிய குசேலன்; பலநாள் கண்ட — பலநாள் கழியப் பெற்ற; படர்தலை — துணியை; வாங்கி — எடுத்து; பாங்கு — பக்கம் இனிதின் ஆய்ந்து — நன்றாக ஆராய்ந்து; விடல் அரும் — நீக்குதற்கரிய; மின் அனார் — மின்னற் கொடியை யொத்த மாதர்கள்; தெய்வம் — தெய்வம் போன்றவளான சுசீலை (குசேலர் மனைவி); திடம் உற — உறுதியாக; பொதி — முடிப்பு.

20. மலிதரும்-மிகுந்த; வண்பொதி-அழகிய (அவல்) முடிப்பு; வலிதரும் அவற்றுள் — வன்மையுடைய அந்த அவல் உணவில்; காதல் பொலிதர - அன்பு அதிகரிக்க.

பயிற்சி வினாக்கள்

1. குசேலோபாக்கியானம் என்பது யாது? அதன் பெயர்ப்பொருளை விளக்குக.

2. குசேலோபாக்கியானத்தைத் தமிழில் பாடியவர் யார்? இதற்கு அவர் முதனூலாகக் கொண்டன யாவை?

3. குசேலோபாக்கியானத்தின் அமைப்பு முறையைக் குறிப்பிடுக.

4. குசேலோபாக்கியான ஆசிரியரைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

5. "பொன்னகர் சிறந்ததென்பார் புல்லிய ரெனவுட் கொண்டான்"—உட்கொண்டான் யார்? அவ்வாறு உட் கொள்ளக் காரணம் யாது?

6. குசேலன், கண்ணன் இருக்குமிடத்தை அடைந்த தன்மை எங்ஙனம் கூறப்பெற்றுள்ளது?

7. பெண்களும் வாயிற்காவலரா யிருந்தனரென்பதைச் சான்று காட்டி விளக்குக.

8. குசேலன் கண்ட கண்ணன் சிறப்பு எங்ஙனம் கூறப் பெற்றுள்ளது?

9. "அணையுடைத் தெழுநீத்தம் போல்"—எதற்கு உவமை? இடஞ்சுட்டி விளக்குக.

10. கண்ணன் குசேலரை எவ்வாறு உபசரித்தான்?

11. "வழிநடந் திளைத்தவேயிம் மலரடி யிரண்டு மென்று" —என்றது யார்? யாரை? எப்பொழுது?

12. குசேலன் அந்தணனென்பதற்கு இரு சான்றுகள் காட்டுக.

13. கண்ணன் தான் பெற்ற பேருக எதனைக் கூறினன்?

14. பெரியோர் நட்பின் பெருமை எங்ஙனம் கூறப் பட்டுள்ளது?

15. மனையாள் பண்புகளாகக் குசேலோபாக்கியானத்தில் கூறப்படுவன யாவை?

16. கண்ணன் குசேலனுடைய பிள்ளைகளைப் பற்றிக் கேட்டன யாவை?

17. திருக்குறளின் கருத்து குசேலோபாக்கியானத்தில் அமைந்துள்ள இடமொன்றைச் சுட்டி விளக்குக.

18. 'தெரிவரும் வஞ்சக் கள்வன்' என்றது யாரை? கள்வன் என்றதற்கேற்ப அவன் நடந்து கொண்டதென்ன?

19. "பொருந்தவின் பாலுண் பான்பாற் புளித்தகா டியைக் கொடுத்திட், டருந்திடென் றுரைத்தல் போல்"—இடஞ்சுட்டி, உவமேயத்துடன் பொருத்திக் காட்டுக.

20. குசேலன் மனையாளின் கற்பின் திறம் எங்ஙனம் கூறப் பெற்றுள்ளது?

21. கண்ணன், குசேலன் இருவர் நட்பின் திறத்தையும் விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

3. நளவெண்பா

நளவெண்பா என்பது, நளனது வெண்பா என விரியும். இஃது ஆறும் வேற்றுமைத்தொகை. நளனைப்பற்றிய வெண்பா எனினும் அமையும். வெண்பா என்பது, அதனுலாகிய நூலுக்கு ஆகுபெயராய் நின்றது. இதனை 'நளன் கதை' என்றும் வழங்குவர். வடமொழி மகாபாரதம் ஆரணியபருவத்தில் வரும் 'நளோபாக்கியானம்' என்னும் பகுதியே இந்நூற்கு முதனூலாகும். இது **சுயவர காண்டம்**, **கலிதொடர் காண்டம்**, **கலிநீங்கு காண்டம்** என மூன்று காண்டங்களையுடையது. காண்டங்கள்தோறும் காப்புச் செய்யுட்கள் பல உள்ளன. காப்பு, அவையடக்கம், சிறப்புப்பாயிரம் இவைகளுக்குரிய ஒன்பது வெண்பாக்கள் நீங்கலாக இந்நூல் 441 வெண்பாக்களையுடையது. பாடமாக வந்துள்ள பகுதி கலிநீங்கு காண்டத்திலுள்ளது.

நளவெண்பாவைப் பாடியவர் **புகழேந்திப்புலவர்**. இவர் தொண்டைநாட்டிலுள்ள பொன்விளைந்தகளத்தூரில் வேளாளர் குலத்தில் பிறந்தார். இவருடைய இயற்பெயர், பெற்றோர் வரலாறு முதலியனவொன்றும் இப்பொழுது தெரியவில்லை. இவருடைய சமயம் வைணவமென்பது, இவர் இந்நூற்குப் பாடியுள்ள கடவுள்வாழ்த்துப் பாடலால் தெரிகிறது. இவர் இளமையிலேயே கல்வி கேள்விகளிலும் கவி பாடுவதிலும் சிறந்து விளங்கினர். **வரகுணபாண்டியன்** அவைப் புலவராய் இவர் சில காலம் இருந்தார். பாண்டியன் மகளுக்குக் கல்வி கற்பித்தவரும் இவரே என்பர்.

உறையூரில் இருந்து சோழநாட்டை யாண்ட குலோத்துங்கசோழன் மகனுக்குப் பாண்டியன் மகளை மணம் செய்வித்தபோது, புகழேந்திப் புலவரும் சோழ நாட்டிற்கு உடன் சென்றர். அங்குச் சோழன் அவைப் புலவராயிருந்த **ஒட்டக்கூத்தருக்கும்** இவருக்கும் பகை ஏற்பட்டு, அதனுல் இவர் அங்கிருந்து நீங்கி மள்ளுவ நாட்டை முரணூரிலிருந்து ஆண்ட **சந்திரன் சுவர்க்கி** என்னும் அரசன்

ஆதரவில் வாழ்ந்து வந்தார். அவன் விரும்பியபடி இவர் நளவெண்பாவைப் பாடிப் புகழ் பெற்ருர்.

புகழேந்தி என்பது இவருக்குண்டான பெருமையினுல் ஏற்பட்ட பெயராகும், '**வெண்பாவிற் புகழேந்தி**' என்பது இவர் வெண்பாப் பாடுதலில் திறனுடையவர் என்பதைப் புலப்படுத்தும். இவர் தம்மை ஆதரித்த சந்திரன் சுவர்க்கியின் நன்றியை மறவாமல், நளவெண்பாவில் பல இடங்களில் அவனைப் புகழ்ந்து பாடியுள்ளார். இவருடைய காலம் கி. பி. 13ஆம் நூற்ருண்டின் முற்பகுதி என்பர். நளவெண்பாவே யன்றி, இவர் **இரத்தினச் சுருக்கம்** என்னும் நூலையும் பாடினுர் என்பர்.

நளன் வேற்றுருவத்தில் அயோத்தி நகரடைதல்

1. முன்னீர் மடவார் முறுவற் றிரள்குவிப்ப
நன்னீ ரயோத்தி நகரடைந்தான் — பொன்னீர்
முருகுடைக்குந் தாமரையின் மொய்மலரைத் தும்பி
அருகுடைக்கு நன்னுட் டரசு.

(நளன் அயோத்தி நகரில் ருதுபர்ணன் அரண்மனையில் தேர்ப்பாகனுயிருந்து பணி புரியலானுன்.)

தமயந்தி புரோகிதனுக்கு நளனைக் கண்டுபிடிக்கும் உபாயங் கூறல்

2. காரிருளிற் பாழ்மண்ட பத்தேதன் காதலியைச்
சோர்துயிலி னீத்த துணிவன்றே — தேர்வேந்தற்
கேன்றறைந்தா னேர்நின் றெதிர்மாற்றந் தந்தாரைச்
சேன்றறிந்து வாவென்ருள் தேர்ந்து.

அயோத்தியில் புரோகிதன் கூற்றும், நளன் வரவும்

3. கானகத்துக் காதலியைக் காரிருளில் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ — தானேன்று
சாற்றினுன் அந்தவுரை தார்வேந்தன் தன்செவியில்
ஏற்றினுன் வந்தா னெதிர்.

நளன் புரோகிதனுக்குக் கூறியது

4. ஒண்டொடி தன்னை யுறக்கத்தே நீத்ததுவும்
பண்டை விதியின் பயனேகாண் — தண்டரளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்வனத்தே
நீத்தானென் றையுறேல் நீ.

புரோகிதன் மீண்டுவந்து தமயந்திக்குக் கூறுதல்

5. வாக்கினுன் மன்னவனை யொப்பான், மறித்தொருகால்
ஆக்கையே நோக்கின் அவனல்லன் — பூக்கமழும்
கூந்தலாய் மற்றக் குலப்பாகன் என்றுரைத்தான்
ஏந்துநூல் மார்பன் எடுத்து.

தமயந்தி கூறிய உபாயம்

6. மீண்டோர் சுயவரத்தை வீமன் றிருமடந்தை
பூண்டாளென் றந்தண ! நீ போயுரைத்தால் — நீண்ட
கொடைவேந்தர்க் கித்தூரந் தேர்க்கோலங் கொள்வான்
படைவேந்த னென்றாள் பரிந்து.

புரோகிதன், தமயந்திக்கு இரண்டாம் சுயம்வர மென்று ருதுபர்ணனுக்கு அறிவித்தல்

7. எங்கோன் மகளுக்(கு) இரண்டாஞ் சுயவரமென்(று)
அங்கோர் முரசம் அறைவித்தான் — செங்கோலாய்
அந்நாளு நாளைய அளவென்றான் அந்தணன்போய்த்
தென்னுளுந் தேரானைச் சேர்ந்து.

நளனுக்கு உண்டான ஐயம்

8. முன்னை வினையான் முடிந்ததோ மொய்குழலாள்
என்னைத்தான் காண விசைந்ததோ — தன்மரபுக்
கொவ்வாத வார்த்தை யுலகத் துரைப்பட்ட
தெவ்வாறு கொல்லோ விது.

நளன் ருதுபர்ணனுக்குத் தேர் கொண்டு வந்து நிறுத்துதல்

9. ஒற்றைத் தனியாழித் தேரென்ன வோடுவதோர்
கொற்ற நெடுந்தேர் கொடுவந்தேன் — மற்றிதற்கே
போந்தேறு கென்றுரைத்தான் பொம்மென் றளிமுரலத்
தீந்தேறல் வாக்குந்தார்ச் சேய்.

நளனது தேரின் வேகம்

10. மேலாடை வீழ்ந்த தெடுவென்றான் அவ்வளவில்
நாலாறு காத நடந்ததே — தோலாமை
மேல்கொண்டான் ஏறிவர வெம்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல்கொண்ட மா.

(இடைவழியில் ருதுபர்ணன் தான் கற்ற கணித வித்தையை நளனுக்குக் கற்றுக்கொடுக்க, நளன் தான் கற்ற குதிரை வித்தையை ருதுபர்ணனுக்குக் கற்றுக் கொடுத்தான். அப்பொழுதே கலி நளனைவிட்டு நீங்கியது.)

கலி நளனைவிட்டு நீங்கிய தன்மை கூறல்

11. வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி — கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல் நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி.

ருதுபர்ணன் குண்டினபுரம் அடைதல்

12. ஆமை முதுகில் அலவன் துயில்கொள்ளும்
காமர் நெடுநாடு கைவிட்டு — வீமன்றன்
பொன்னகரி சென்றடைந்தான் போர்வேட் டெழுங்கூற்றம்
அன்னகரி ஒன்றுடையான் ஆங்கு.

நளன் குதிரைகளை அவிழ்த்துக் கட்டிவிட்டு
மடைப்பள்ளியை அடைதல்

13, ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டவையாற்றிக்
கோதி லடிசிற் குறைமுடிப்பான் — மேதிக்

கடைவாயில் கார்நீலம் கண்விழிக்கு நாடன்
மடைவாயிற் புக்கான் மதித்து.

தமயந்தி தன் தோழியை நளனிடம் அனுப்புதல்

14. இடைச்சுரத்திற் றன்னை இடையிருளின் நீத்த
கோடைத்தொழிலான் என்றயிர்த்த கோமான் —
மடைத்தொழில்கள்
செய்கின்ற தெல்லாந் தெரிந்துணர்த்து வாவென்றாள்
நைகின்ற நெஞ்சா ணயந்து.

தமயந்தி, நளனைச் சோதிக்கு முபாயம் கூறல்

15. கோதை நெடுவேற் குமரனையும் தங்கையையும்
ஆதி யரச னருகாகப் — போத
விளையாட விட்டவன்றன் மேற்செய ஞடென்றாள்
வளையாடுங் கையாள் மதித்து.

பிள்ளைகளைக் கண்ட நளனது நிலை

16. மக்களைமுன் காணு மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா — "மக்காள்நீர்,
என்மக்கள் போல்கின்றீர், யார்மக்கள்" என்றுரைத்தான்
வன்மக் களியானை மன்.

நளனுடைய மக்கள் தம்மை இன்னரென் றுரைத்தல்

17. "மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்;
அன்னைதனைக் கான்விட்(டு) அவனேக — இந்நகர்க்கே
வாழ்கின்றோம்; எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்று" னென்றார் அழுது.

நளன் வருந்துதல்

18. ஆங்கவர் சொன்ன வுரைகேட்(டு) அழிவெய்தி
நீங்கா உயிரோடு நின்றிட்டான் — பூங்காவில்
வள்ளம்போற் கோங்கு மலரும் திருநாடன்
உள்ளம்போற் கண்ணீர் உகுத்து.

நளன் தன் மக்களை வினுதல்

19. "உங்கள் அரசொருவன் ஆளநீர் ஓடிப்போந்(து)
இங்கண் உறைதல் இழுக்கன்றே? — செங்கை
வளவரசே" யென்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி யெடுத்து.

நளன் வினுவிற்கு மக்களின் கோபவுரை

20. நெஞ்சால்இம் மாற்றம் நினைந்துரைக்க நீயல்லா(து)
அஞ்சாரோ மன்னர் அடுமடையா — எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலாய்! எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி."

நளன் கூறிய சமாதானவுரை

21. "மன்னர் பெருமை மடையர் அறிவரோ
உன்னை அறியா துரைசெய்த — என்னை
முனிந்தருளல்" என்று முடிசாய்த்து நின்றான்,
கனிந்துருகி நீர்வாரக் கண்.

நளன் செயலையுஞ் சொல்லையுங் கேட்ட
தமயந்தி வருந்துதல்

22. கொற்றக் குமரனையும் கோதையையுந் தான்கண்டு
மற்றவன்றான் ஆங்குரைத்த வாசகத்தை — முற்றும்
மொழிந்தாரம் மாற்ற மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தாள் அழுது.

மடைத்தொழில் செய்வோன் நளனேயென்று
தமயந்தி தன் தந்தைக்குக் கூறுதல்

23. மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத் தனித்தேரும் கொண்டணைந்து — மற்றும்
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்கா ணெங்கள்
கொடைத்தொழிலா னென்றாள் குறித்து.

(இதன்பின் தமயந்தியின் தந்தை நளனை இனங்கண்டு,
அவனுடைய வேற்றுருவிற்குக் காரணமுந் தெரிந்து, பின்

அவ்வுருவம் நீங்க அவனைத் தன் அரண்மனைக்கு அழைத்து வந்து விருந்து செய்து, தமயந்தியுடனும், அவள் பிள்ளைகளுடனும் கூடி வாழச் செய்தான்.)

நளன் தன் மனைவி மக்களுடன் மாவிந்த நகரத்திற்குப் புறப்பட்டுப் போதல்

24. விற்றானை முன்செல்ல வேல்வேந்தர் பின்செல்லப்
பொற்றேர்மேல் தேவியோடும் போயினான் — முற்றும்பல்
தேனீர் அளித்தருகு செந்நெற் கதிர்விளைக்கும்
மாநீர் நிடதத்தார் மன்.

குறிப்புரை

1. முன்னீர் — பழமையான கடல்; மடவார் — மகளிர்; முறுவல் — பற்கள் போன்ற முத்துக்கள்; பொன்னீர் — பொன்மயமான; முருகுடைக்கும் — அழகையும் வெல்லும்; தும்பி — வண்டுகள்.

2. காதலி — மனைவி, தமயந்தி; சோர்துயில் — அறிவு சோர்ந்த தூக்கம்; நேர்நின்று — முன்னே வந்து; மாற்றம் — மறுமொழி.

3. கானகம் — காடு; தார் — மாலை; செவியில் ஏற்றினான் — கேட்டான்.

4. ஒள் தொடி — ஒளி பொருந்திய தொடியணிந்த தமயந்தி, அன்மொழித் தொகை; உறக்கம் — தூக்கம்; தரளம் — முத்து; பூ தாமம் — அழகிய மாலை; பொன்மகள் — இலக்குமி போன்ற அழகுடைய தமயந்தி; நீத்தான் — பிரிந்தான்; ஐயுறேல் — சந்தேகிக்க வேண்டாம்.

5. வாக்கு — பேச்சு; மன்னவன் — நளன்; மறித்து — திரும்பவும்; ஆக்கை — உடல்; குலப்பாகன் — உயர்குலத் தேர்ப்பாகன்; ஏந்து நூல் மார்பன்—பூணூல் தாங்கிய மார்பினையுடைய புரோகிதன், சுதேவன்

6. மீண்டு — திரும்பவும்; வீமன் திருமடந்தை — வீமனுக்கு மகளான தமயந்தி; பூண்டாள் — ஏற்றுக்கொண்டாள்; நீண்ட கொடை வேந்தற்கு—மிகவும் கொடுக்குந் தன்மையுடைய அயோத்தி மன்னனுக்கு; தேர்க்கோலம்—தேரையோட்டும் வாகுகன் வேடம்; படை வேந்தன் — நளன்.

7. எம்கோன்—எமது மன்னனுன வீமன்; முரச மறைவித்தான் — முரசறைந்து தெரிவித்தான்; தென் ஆளும் தாரான் — அழகைத் தனதாகப் பெற்ற மாலையையுடைய ருதுபர்ணன்.

8. முன்னை வினை—முன் பிறவியில் செய்த கருமம்; முடிந்ததோ — நேரிட்டதோ; மொய் குழலாள் — தமயந்தி; இசைந்ததோ — விரும்பியதோ; மரபு — உயர்குல வொழுக்கம்; ஒவ்வாத — பொருந்தாத; உரைப்பட்டது — வழங்கியது, சொல்லியது.

9. தனி ஆழி தேர் — ஒப்பற்ற சக்கரத்தையுடைய தேர்; இது சூரியனுக்குரியது; கொற்றம்—வெற்றி; கொடுவந்தேன் — கொண்டு வந்தேன்; இதற்கு — இதில்; போந்து ஏறு — வந்து ஏறுவாயாக; பொம் என்று பொம் என்னும் ஒலியோடு; அளிமுரல — வண்டுகள் ஒலிக்க; தேறல் — தேன்; வாக்கும்தார் சேய் — சொரிகின்ற மாலையையுடைய நளன்.

10. நாலாறு — நாலும் ஆறுமாகிய பத்து, உம்மைத்தொகை; நான்காகிய ஆறு, இருபத்துநான்கு; பண்புத்தொகை; தோலாமை மேல்கொண்டான் — பகைவர்க்குத் தோலாமையையுடையவனுகிய ருதுபர்ணன்; கலிச்சூதின் மால்கொண்டான் — கலிபுருடனுடைய சூதினுல் மயக்கம் கொண்டவனுகிய நளன்; கோல்கொண்டமா — தார்க்கோல் கொண்டு நடாத்திய குதிரைகள்.

11. வண்டு ஆர் — வண்டுகள் நிறைந்த; தண் தார் புனை — குளிர்ச்சி பொருந்திய மாலையை அணிந்த; பாவலன் பால் — புலவனிடத்து, காவலன் — நளன்; கலி — துன்பம்.

12. அலவன் — நண்டு; துயில்கொள்ளும் — படுத்துத் தூங்கும்; காமர் — அழகிய; நெடு நாடு — கோசல நாடு; வீமன் தன் பொன் நகரி — குண்டினபுரம்; வேட்டு — விரும்பி; கூற்றம் அன்ன கரி ஒன்று உடையான் - யமனை யொத்த யானையையுடைய ருதுபர்ணன்.

13. ஆதி — முதன்மையான; பரிவிட்டு — குதிரையை அவிழ்த்து விட்டு; ஆற்றி — பசி ஆற்றி; கோது இல் — குற்றமற்ற; அடிசில் குறை — உணவு சமைக்க வேண்டிய வேலையை; மேதி — எருமை; கடைவாயில் — குதட்டுகின்ற வாயின் கடையிடத்து; கார் — கருமை; கண் விழிக்கும் — மலர்ந்து தோன்றும்; மடைவாயில் — மடைப்பள்ளியிடத்து; புக்கான் — சென்ருன்; மதித்து—நினைத்து.

14. இடைச்சுரம் — பாலைவனத்தின் நடுவில்; இடை இருள் — நடு இருள்; நீத்த — பிரிந்த; கொடைத் தொழிலான் — நளன்; அயிர்த்த கோமான் - சந்தேகிக்கப்பட்ட வாகுகன்; மடைத் தொழில்

கள் — சமையல் தொழில்கள்; நைகின்ற — கணவனைப் பிரிந்த தினுல் வருந்திய; நயந்து — விரும்பி.

15. கோதை நெடுவேல் — மாலையணிந்த நீண்ட வேலைத் தாங்கும்; ஆதி அரசன் — முதன்மைபெற்ற அரசஞன வாகுகன்; போத — போகவும்; மேல் — அதன்பின்; நாடு — ஆராய்க; வளை ஆடும் கையாள் — வளையல்கள் அசைந்தாடும் கைகளையுடைய தமயந்தி.

16. காணு — கண்டு; காணு, நடுங்கா, உயிரா, அணையா என்பன செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சங்கள். உயிரா—உயிர்த்து, பெருமூச்சு விட்டு; வன்மக் களி யானை — வலிய மதம் பொழியும் யானை; மன் — மன்னஞன நளன்.

17. மன்னன் — மன்னனும்; நிடதத்தார் வாழ் — நிடததேசத்தார் வாழுகின்ற; கான் — காடு; இந்நகர்க்கே — இந்நகரத்தில்; வளநாடு — நிடதநாடு; மற்ருெருவன் — புஷ்பகரன்.

18. அழிவு எய்தி - மனம் உடைந்து; நீங்கா உயிரோடு—உடலை விட்டுப்பிரியாத உயிரோடு; பூங்கா — சோலை; வள்ளம் — கிண்ணம்; திருநாடன் - செல்வ மிகுந்த நிடத நாட்டையுடைய நளன்; உகுத்து — சொரிந்து.

19. அரசு ஆட்சிக்குரிய நாடு; போந்து — வந்து; உறைதல் — தங்குதல்; இழுக்கு — குறைவு; செம் கை வளம் — செம்மையான கொடை வளம்; இள அரசு — மைந்தன்.

20. மாற்றம் — மறுமொழி; அடுமடையா — சமைத்தற் தொழிலையுடையவனே; எஞ்சாது — குறையாமல்; சிறு தொழில் — தாழ்ந்த தொழில்; வாய்மை — உண்மை; கண்டாய் — அறிவாயாக; வலி — வலிமையுடையது.

21. மடையர் — மடைத்தொழிலைச் செய்பவர்; உரை செய்த — சொன்ன; முனிந்தருளல் — கோபிக்க வேண்டாம்; முடிசாய்த்து — பணிந்து; கனிந்து — மனம் இளகி; நீர் வார — நீர் சொரிய.

22. கொற்றம் — வெற்றி; கோதை — மகள்; வாசகம் — வார்த்தைகள்; மாற்றம் — மறுமொழி; அழிந்தாள் — மனமழிந்தாள்;

23. திருநகர் — குண்டினபுரம்; மன்னர் — ருதுபர்ணன்; அணைந்து — சேர்ந்து; மடைத்தொழில் — சமையற்ருெழில்; மன்ன

வன் — வாகுகன்; கொடைத் தொழிலான் — நளன்; குறித்து — ஆராய்ந்து.

24. வில் தானை — வில்லேந்திய சேனை; பொன் — அழகு; தேவி — தமயந்தி; ஆம்பல் — அல்லி மலர்; தேன் நீர் — மதுவாகிய நீரை; நிடதத்தார் — நிடத தேசத்தார்; மன் — மன்னனாகிய நளன்.

பயிற்சி வினாக்கள்

1. 'நளவெண்பா' என்பதற்குப் பொருளும் இலக்கணமும் தருக.

2. நளவெண்பாவிற்கு முதனூல் எது? அதன் ஆசிரியரைப் பற்றிக் குறிப்பு வரைக.

3. நளவெண்பாவின் அமைப்பு முறையைக் குறிப்பிடுக.

4. 'முந்நீர் மடவார் முறுவற் றிரள்குவிப்ப' — இதன் பொருள் யாது?

5. நளனைக் காண, தமயந்தி புரோகிதனிடம் கூறிய உபாயம் யாது? அதனால் விளைந்த நன்மைகள் யாவை?

6. புரோகிதன் அயோத்தி சென்று அறிந்துவந்த செய்திகள் யாவை?

7. நளன் குண்டினபுரத்திற்கு வரத் தமயந்தி செய்த உபாயம் யாது?

8. தமயந்திக்கு இரண்டாம் சுயவரமென்பதை அறிந்த நளன் எவ்வாறு ஐயுற்றான்?

9. நளனது தேரோட்டும் திறமைக்கு ஒரு சான்று தருக.

10. நளவெண்பாவில் பாடமாக வந்துள்ள பகுதி எது? அப்பகுதியின் பெயர் பொருந்துமாற்றைக் குறிப்பிடுக.

11. புகழேந்திப் புலவரை யாதரித்த மன்னன் யார்? அவர் நன்றியறிதலாக அவனை நளவெண்பாவில் புகழ்ந்துள்ள இடமொன்றைக் குறிப்பிட்டு விளக்குக.

12. தமயந்தி தன் தோழியையும். மக்களையும் அனுப்பி நளனை எவ்வாறு சோதித்தாள்?

13. தன் மக்களைக் கண்ட நளனுக்கு உண்டான மெய்ப் பாடுகளையும், செயலையும் குறிப்பிடுக.

14. நளனுக்கும் அவன் மக்களுக்கும் நடந்த உரையாடலைக் குறிப்பிடுக.

15. 'எங்கள் வளநாடு மற்றொருவன் ஆள்கின்றான்', 'மன்னர் பெருமை மடையர் அறிவரோ' — இவற்றை இடஞ்சுட்டி விளக்குக.

16. கோசலநாடு, நிடதநாடு-இவற்றின் சிறப்பினைக் குறிக்கும் தொடர்களில் ஒவ்வொன்று எழுதி விளக்குக.

17. நளன், ருதுபர்ணன் — இவர்களைச் சுட்டும் தொடர்களில் இரண்டிரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.

18. தமயந்தி மீண்டும் நளனை அடைந்ததைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

IV. சிறு நூல்கள்

1. சரசுவதியந்தாதி

அந்தாதி என்பது, தமிழ்மொழியிலுள்ள சிறுநூல் வகைகளில் ஒன்று. அந்தத்தை ஆதியாகவுடையது அந்தாதி; அஃதாவது, ஒரு செய்யுளின் ஈற்றெழுத்தாவது, அசையாவது, சீராவது, அடியாவது அடுத்த செய்யுளின் முதலில் வரும்படி பாடுவது. இவ்வாறு பத்துச் செய்யுட்கள் அந்தாதியாக வருமாயின் '**பதிற்றந்தாதி**' என்றும், நூறு செய்யுட்கள் வருமாயின் '**நூற்றந்தாதி**' அல்லது **பதிற்றுப்பத்தந்தாதி** என்றும், அவ்வாறு வெண்பாவால் பாடியன '**வெண்பாவந்தாதி**' என்றும், கலித்துறையால் பாடியன '**கலித்துறையந்தாதி**' என்றும், அதுவே சிலேடையாய் வரின் '**சிலேடையந்தாதி**' என்றும் பெயர்பெறும். இதனை '**மாலை**' என்று கூறுவாருமுளர்.

பாடமாக வந்துள்ள **சரசுவதியந்தாதி** கட்டளைக்கலித்துறையால், சரசுவதி சம்பந்தமாகப் பாடப்பட்ட நூலாகும். இது காப்புச்செய்யுளாகவுள்ள இரண்டு வெண்பாக்கள் நீங்கலாக முப்பது கட்டளைக்கலித்துறைச் செய்யுட்களைக் கொண்டது. இதனைப் பாடியவர் கல்வியிற் பெரிய **கம்பர்** என்பர். அவருடைய காலம் கி. பி. 12ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியாகும்.

1. இயலா னதுகொண்டு நின்றிரு நாமங்கள்
   ஏத்துதற்கு
   முயலாமை யாற்றடு மாறுகின் றேனிந்த
   மூவுலகுஞ்
   செயலா லமைத்த கலைமக ளேநின்
   றிருவருளுக்
   கயலா விடாம லடியே னையுமுவந்
   தாண்டருளே,

2. அருக்கோ தயத்தினுஞ் சந்திரோ தயமோத்
தழகெறிக்குந்
திருக்கோல நாயகி செந்தமிழ்ப் பாவை
திசைமுகத்தால்
இருக்கோது நாதனுந் தானுமேப் போது
மினிதிருக்கும்
மருக்கோல நாண்மல ராளென்னை யாளு
மடமயிலே.

3. மயிலே மடப்பிடி யேகோடி யேயிள
மான்பிணையே
குயிலே பசுங்கிளி யேயன்ன மேமனக்
கூர்ருட்கோர்
வெயிலே நிலவெழு மேனிமின் னேயினி
வேறுதவம்
பயிலேன் மகிழ்ந்து பணிவே னுனதுபோற்
பாதங்களே.

— *கம்பர்.*

குறிப்புரை

1. இயல் — கல்வி; ஏத்துதல் — துதித்தல்; மூவுலகு — மேல், கீழ், நடு என்பன; அமைத்த — படைத்த; திருவருள் — கருணை; அயல் ஆ விடாமல் — புறம்பாக விட்டுவிடாமல்; உவந்து — விரும்பி; ஆண்டருள் — பாதுகாப்பாக.

2. அருக்கோதயம் — அருக்க + உதயம்; அருக்கம் — சூரியன்; உதயம் — தோற்றம்; சந்திரோதயம் — சந்திர + உதயம்; எறிக்கும் — ஒளி வீசும்; திருக்கோலம் — திருமேனி; தமிழ்ப்பாவை — தமிழுக் குரிய தெய்வம்; திசை முகம் — நான்கு முகம்; இருக்கு — இருக்கு முதலிய நான்கு வேதங்கள்; இருக்கோது நாதன் — பிரமன்; மரு — வாசனை; கோலம் — அழகு; நாள் மலர் — புதிய தாமரை மலர்; மடமயில் — பெண் தெய்வம், உவமையாகு பெயர்.

3. மடப்பிடி — பெண் யானை; மான்பிணை — பெண் மான்; பசுங் கிளி — பண்புத்தொகை; கூர்—மிக்க; வெயில் — சூரிய ஒளி; நிலவு எழுமேனி — நிலவொளி போன்ற நிறமுடைய; மின் — மின்னற் கொடி போன்றவள்; பயிலேன் — பழகி அறியேன்; பொற்பாதம் — **உவமைத்தொகை.**

2. திருவருணைக்கலம்பகம்

கலம்பகம் என்பது, தமிழ்மொழியிலுள்ள சிறுநூல் வகைகளில் ஒன்று; அது தேவர்களையேனும் மக்களிற் சிறந்தாரையேனும் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு புயவகுப்பு, மதங்கு, அம்மானை முதலிய பதினெட்டு உறுப்புக்களையுடையதாய் மருட்பா, ஆசிரியப்பா முதலிய பலவகைப் பாக்களால் அந்தாதியாகப் பாடப்படுவது.

திருவருணைக்கலம்பகம், திருவருணையிலுள்ள சிவபெருமான் சம்பந்தமாகப் பாடியது. அருணை என்பது, அருணகிரி என்னும் தலம். இதனைப் பாடிய **சைவ எல்லப்ப நாவலர்** தொண்டை நாட்டில் **தாழை** என்னும் ஊரில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தார். அவருடைய காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர்.

சம்பிரதம்

பரவைபோ ருக்கெழவுங் ககனம்வ டேப்படவும்
பருதிவ டக்கெழவு நிருதிகு ணக்குறவும்
இரவுப கற்படவும் பகலிர வோத்திடவும்
எளிதினி யற்றிடுவோ மிவைசில வித்தைகளோ?
அரவம ணிப்பணியா னனலகி ரிப்பெருமான்
அருணகி ரிக்கிணையா வவனித லத்திடையே
கருதிம னத்தினிலே சிறிதுநி னைத்தளவே
கதியை யளித்திடுமோர் பதியுமு ணர்த்துவமே.

— *சைவ எல்லப்ப நாவலர்.*

குறிப்புரை

சம்பிரதம் — தற்புகழ்ச்சி; அஃதாவது, இந்திரஜால முதலிய மாய வித்தை வல்லவர் தமது சிறப்பைத் தாமே எடுத்துக் கூறுவதாகச் செய்யுள் செய்வது. பரவை — கடல், பாலை நிலம்; பொருக்கு — காலை உறுத்தும் சிறு மண் கட்டி; கானம் — ஆகாயம், காடு; வடு — தழும்பு, தளிர்; பருதி — சூரியன்; வடக்கு — திசை, உத்தராயணம் நிருதி — அட்டதிக்குப் பாலர்களில் ஒருவர், அரக்கி; குணக்கு — கிழக்கு, மாறுபாடு; பகல் — பகற்காலம், சூரியன்; அரவம் அணிப் பணியான் — பாம்பை அழகிய ஆபரணமாகவுடைய சிவபெருமான்; அனலகிரி — அருணகிரி; அனல் — நெருப்பு; அவனிதலம் — பூமி; கதி — மோட்சம்; பதி — இடம்.

3. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

பிள்ளைத்தமிழ் என்பது, தமிழ்மொழியிலுள்ள சிறு நூல் வகைகளில் ஒன்று; கடவுளையாவது, உலகத்துப் பெரியோரையாவது சிறு பிள்ளையாகக் கற்பித்துக் **காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, வருகை, முத்தம், அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர்** என்னும் பத்துப் பருவங்களையுடைய தாய் ஆசிரிய விருத்தப்பாவால் நூறு செய்யுள் வரப் பாடுவது இதன் இலக்கணமாகும். இஃது **ஆண்பால் பிள்ளைத் தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ்** என இருவகைப்படும். இவற்றுள் ஆண்பாலுக்குரிய இறுதி மூன்று பருவங்களான **சிற்றில், சிறுபறை, சிறுதேர்**, என்பனவற்றிற்கு மாருகப் பெண்பாற் பிள்ளைத்தமிழில் **கழங்கு, அம்மானை, ஊசல்** என்னும் மூன்று பருவங்களும் வரப்பெறும்.

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் வைத்தீசுவரம் என்னும் தலத்தில் எழுந்தருளிய முத்துக்குமாரசுவாமி என்னும் முருகக்கடவுளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டதொரு நூலாகும். எனவே, இஃது ஆண்பாற் பிள்ளைத் தமிழின் பாற்படும். இதனை இயற்றிய **குமரகுருபர அடிகள்** பாண்டிய நாட்டிலுள்ள ஸ்ரீவைகுண்டத்திலே சைவ வேளாளர் குலத்தில் இற்றைக்கு 150 ஆண்டுகட்கு முன் பிறந்தவர். இவருடைய தந்தை பெயர் **சண்முகசிகாமணிக் கவிராயர்**; தாயார் பெயர் **சிவகாமி அம்மையார்**; இவர் பிறந்து ஐந்தாண்டு அளவும் ஊமையாயிருந்து பின் திருச்செந்தூர் முருகக் கடவுளின் அருளால் ஊமை நீங்கிக் கவிபாடும் திறமை பெற்ருர் என்பர்.

வருகைப் பருவம்

உலகு குளிர வெமது மதியி
லொழுகு மமுத கிரணமே!
உருகு மடிய ரிதய நெகிழ
வுணர்வி லெழுந லுதயமே!
கலையு நிறையு மறிவு முதிர
முதிரு மதுர நறவமே!

கழுவு துகளர் முழுக நெடிய
கருணை பெருகு சலதியே!
அலகில் புவன முடியும் வெளியி
லளியு மொளியி னிலயமே!
அறிவு ளறிவை யறியு மவரு
மறிய வரிய பிரமமே!
மலையின் மகள்கண் மணியை யனைய
மதலை வருக வருகவே!
வளமை தழுவு பரிதி புரியின்
மருவு குமரன் வருகவே!

— குமரகுருபர அடிகள்

குறிப்புரை

மதி – அறிவு; அமுத கிரணம்—சந்திரன்; நெகிழ—இளகும் படி; உதயம்—சூரியன்; கலை—கலை நூல்கள்; நிறை—ஒழுக்கம்; மதுர நறவம் இனிய தேன்; கழுவு துகளர்—குற்றமற்ற ஞானிகள்; சலதி—கடல்; அலகு இல் முடிவில்லாத; புவனம்—உலகங்கள்; அளியும்—முதிர்ந்த; நிலயம்—இருப்பிடம்; அறியுமவர்—அறியும் ஞானிகள்; மலையின் மகள் – பார்வதி, அனைய—ஒத்த; மதலை—புதல்வனே; வளமை தழுவு – வளம் நிறைந்த; பரிதிபுரி; வைத்தீசுவரத்தில் சூரியன் தவம் புரிந்து வரம் பெற்ற காரணத்தால், அத்தலம் இப்பெயர் பெற்றது.

4. விநாயகர் நான்மணிமாலை

நான்மணிமாலை என்பது, தமிழ் மொழியிலுள்ள தொண்ணூற்ருறு சிறு நூல் வகைகளில் ஒன்று. இஃது நால்வகை மணிகளால் ஆகிய மாலை போல வெண்பா. கலித்துறை, விருத்தம், அகவற்பா ஆகிய நால் வகைப் பாக்களால் அந்தாதித் தொடை அமைய நாற்பது செய்யுள் வரப் பாடுவது. நால்வர் நான்மணிமாலை, கோயில் நான் மணிமாலை, திருவாரூர் நான்மணிமாலை முதலியன இந்நூல் வகையைச் சேர்ந்தனவாகும். இங்குப் பாடமாக வந்துள்ள பாடல்கள் விநாயகர் நான்மணிமாலையில் உள்ளன.

இந்நூலைப் பாடியவர் **தேசியக் கவி சி. சுப்பிரமணிய பாரதியார்.** இவர் 1882 ஆம் ஆண்டு முதல் 1921 ஆம் ஆண்டு வரை வாழ்ந்து தமிழ் நாட்டில் சுதந்தரவுணர்ச்சி யையும், தாய்மொழிப்பற்றையும் உண்டாக்கும் பல பாடல் களைப் பாடியுள்ளார்.

வெண்பா

1. நமக்குத் தொழில்கவிதை, நாட்டிற் குழைத்தல்,
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல், — உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான் ;
சிந்தையே! இம்மூன்றுஞ் செய்.

கலித்துறை

2. செய்யுங் கவிதை பராசக்தி
யாலே செயப்படுங்காண்,
வையத்தைக் காப்பவள் அன்னை
சிவசக்தி வண்மையெலாம்
ஐயத்தி லுந்துரி தத்திலுஞ்
சிந்தி யழிவ தென்னே
பையத் தொழில்புரி நெஞ்சே!
கணாதிபன் பக்திகொண்டே!

விருத்தம்

3. பத்தி யுடையார் காரியத்திற்
பதறார், மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்குந் தன்மைபோல்
மெல்லச் செய்து பயனடைவார் ;
சத்தி தொழிலே அனைத்துமெனிற்
சார்ந்த நமக்குச் சஞ்சலமேன் ?
வித்தைக் கிறைவா! கணநாதா!
மேன்மைத் தொழிலிற் பணியெனையே!

அகவல்

எனைநீ காப்பாய், யாவுமாந் தெய்வமே!
பொறுத்தா ரன்றே பூமி யாள்வார்?
யாவுநீ யாயின் அனைத்தையும் பொறுத்தல்
செவ்விய நெறி, அதிற் சிவநிலை பெறலாம்;
பொங்குதல் போக்கிப் பொறையெனக் கீவாய்;
மங்கள குணபதி! மணக்குளக் கணபதி!
நெஞ்சக் கமலத்து நிறைந்தருள் புரிவாய்;
அகல்விழி உமையாள் ஆசை மகனே!
நாட்டினைத் துயரின்றி நன்கமைத் திடுவதும்,
உள்ளமெனு நாட்டை ஒருபிழை யின்றி
ஆள்வதும், பேரொளி ஞாயிறே யனைய
சுடர்தரு மதியொடு துயரின்றி வாழ்தலும்
நோக்கமாக் கொண்டு நின்பதம் நோக்கினேன்;
காத்தருள் புரிக, கற்பக விநாயகா!
காத்தருள் புரிக, கடவுளே! உலகெலாம்
கோத்தருள் புரிந்த குறிப்பரும் பொருளே!
அங்குச பாசமும் கொம்பும் தரித்தாய்
எங்குல தேவா! போற்றி!
சங்கரன் மகனே தாளிணை போற்றி!

— *சி. சுப்பிரமணிய பாரதியார்.*

குறிப்புரை

1. உழைத்தல் — பணி புரிதல்; இமைப்பொழுதும் — சிறு பொழுதாயினும்; சோராது இருத்தல் — சோர்ந்து போகாமல் இருத்தல்; உமை — உமாதேவி, பார்வதி; கணநாதன் — பூத கணங்களுக்குத் தலைவன், விநாயகன்.

2. வையகம் — உலகம்; வண்மை — வளப்பம்; ஐயம் — சந்தேகம்; சிந்தை — மனம்; பைய — மெதுவாக; கணதிபன் — கண + அதிபன்.

3. பதறுர் — அவசரப்பட்டார்; சார்ந்த — அடைக்கலமாகக் கொண்ட; சஞ்சலம் — துன்பம்; வித்தை — கல்வி; பணி — நடத்து.

4. செவ்விய — சிறந்த; பொங்குதல் — கோபித்தல்; பொறை — பொறுமை; கமலம் — தாமரை; ஞாயிறு — சூரியன்; சுடர் — ஒளி; கோத்து — ஒன்றுசேர்த்து; குறிப்பரும் — சொல்லுதற்கரிய; பாசம் — கயிறு; சங்கரன் — சிவன்; தாள் இணை — இரு பாதங்கள்.

பயிற்சி வினுக்கள்

சரசுவதி அந்தாதி

1. அந்தாதியின் இலக்கணம் யாது? சரசுவதியந்தாதியின் அமைப்பைக் குறிப்பிடுக.

2. சரசுவதியந்தாதியின் ஆசிரியர் யார்? குறிப்பு வரைக.

3. அந்தாதியாசிரியர் தடுமாறுவதற்குக் கூறும் காரணம் யாது? அவர் கலைமகளிடம் எதனை வேண்டுகிறுர்?

4. கலைமகளின் தோற்றப் பொலிவு எங்ஙனம் கூறப் பெற்றுள்ளது?

5. கலைமகளுக்கு உவமையாகக் கூறப்படும் உயிரினங்கள் யாவை?

திருவருணைக்கலம்பகம்

1. கலம்பகத்தின் இலக்கணம் யாது? திருவருணைக்கலம் பகம் யாரைப் பற்றியது? ஆசிரியர் யார்?

2. திருவருணைக்கலம்பக ஆசிரியரைப் பற்றிக் குறிப்பு வரைக.

3. 'பரவை பொருக்கெழவும்......எளிதினியற்றிடுவோம்'— இதற்குச் சிலேடைப்பொருள் தருக.

4. 'இவை சில வித்தைகளோ' — எவை?

5. சப்பிரதமாவது யாது? அதன் இலக்கணம் இச்செய் யுளில் எவ்வாறு அமைந்துள்ளது?

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்

1. பிள்ளைத்தமிழின் இலக்கணம் யாது? 'முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்' என்பதை விளக்குக.

2. பிள்ளைத் தமிழுக்குரிய பத்துப்பருவங்கள் எவை? ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கும் பெண்பாற் பிள்ளைத் தமிழுக்குமுள்ள வேறுபாடுகள் எவை?

3. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழாசிரியரைப் பற்றிக் குறிப்பு வரைக.

4. முத்துக்குமாரசுவாமி யார்? அவருக்குச் சூரியன், சந்திரன் எவ்வாறு உவமைகளாகும்?

5. "அலகில் புவனம்......பிரமமே"–விளக்கமான பொருள் தருக.

விநாயகர் நான்மணிமாலை

1. நான்மணிமாலையின் இலக்கணம் யாது? விநாயகர் நான்மணிமாலையைப் பாடிய ஆசிரியர் யார்?

2. நான்மணிமாலையில் வரும் செய்யுள் வகைகள் எவை?

3. "சிந்தையே இம்மூன்றுஞ் செய்" — மூன்று எவை?

4. பாரதியார் 'பையத் தொழில்புரி' எனத் தம் நெஞ்சிற்கு அறிவுறுத்தியது ஏன்?

5. பத்தியுடையார் பண்புகளாகக் கூறப்படுவன யாவை?

6. பாரதியார் விநாயகரிடத்து வேண்டுவன யாவை?

V. புனைந்துரை

1. பொழுது புலர்தல்

தொண்டரடிப்பொடி யாழ்வார் பாடிய பிரபந்தங்களில் **திருப்பள்ளி யெழுச்சி** என்பது ஒன்று இதில் பொழுது புலர்ந்த தன்மை சிறப்பாக வருணிக்கப்பட்டுள்ளது.

1. சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்;
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி
படரொளி பசுத்தனன்; பனிமதி யிவனோ
பாயிரு ளகன்றது; பைம்பொழிற் கமுகின்
மடலிடைக் கீறி வண்பாளை கள்நாற
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை
அரங்கத் தம்மா பள்ளியெழுந் தருளாயே!

2. புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்;
போயிற்றுக் கங்குல்; புகுந்தது புலரி;
கலந்தது குணதிசைக் கனைகட லரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல்கொண் டடியினை பணிவான்
அமரர்கள் புகுந்தன ராதலி லம்மா
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே!

— திருப்பள்ளி யெழுச்சி.

குறிப்புரை

1. சூழ்திசை — நான்கு திசைகளிலும்; துன்னிய—நெருங்கிய; தாரகை — நட்சத்திரம்; பனிமதி — குளிர்ந்த சந்திரன்; பசுத்தனன் — ஒளி மழுங்கினன்; பாய் இருள் — பரந்த இருள்; பைம் பொழில்; பண்புத் தொகை; நாற — வாசனை வீச; கூர்ந்தது — தோன்றியது; மாருதம் — காற்று; அடர் — அடர்ந்த; திகிரி —

சக்கரம்; அரங்கத்து அம்மா — திருவரங்கத்தில் எழுந்தருளிய சுவாமிகளே; பள்ளி — படுக்கை.

2. புட்கள் — பறவைகள்; வாய் — இடம்; புலரி — கடல்; அரவம் — ஒலி; களி வண்டு — தேனை உண்டு களிக்கும் வண்டுகள்; மிழற்றிய — பாடிய; கலம்பகம் புனைந்த — பலவகைப் பூக்களாலே தொடுக்கப்பட்ட; அலங்கல் அம் தொடையல் — அலங்கலாகிய மாலை; அமரர் — தேவர்; இலங்கையர்கோன் — இராவணன்.

2. பொதியமலைச் சிறப்பு

பொதியமலைச் சிறப்புப் பற்றிய பாடல் **மீனாட்சியம்மை குறம்** என்னும் நூலிலுள்ளது. இந்நூலே பிற்காலத்தில் 'குறவஞ்சி நாடக நூல்' தோன்றுவதற்குக் காரணமாயிற்று என்பர். இதைப் பாடியவர் **குமரகுருபர அடிகள்.** இவர் திருநெல்வேலியை அடுத்த ஸ்ரீவைகுண்டத்தில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தார். இவருடைய காலம் இற்றைக்கு 150 ஆண்டுகட்கு முற்பட்ட காலமாம்.

திங்கள்முடி சூடுமலை; தென்றல்விளை யாடுமலை;
தங்குபுயல் சூழுமலை; தமிழ்முனிவன் வாழுமலை;
அங்கயற்கண் அம்மைதிரு அருள்சுரந்து பொழிவ(து)எனப்
பொங்(கு)அருவி தூங்குமலை, **பொதியமலை** என்மலையே.

— மீனாட்சியம்மை குறம்.

குறிப்புரை

திங்கள் — சந்திரன்; திங்கள் முடி சூடுதலாவது, சந்திரன் தன் உச்சியில் தங்கும்படியாக உயர்ந்திருப்பது. புயல் — மேகம்; தமிழ் முனிவன் — அகத்தியன்; அங்கயற்கண் அம்மை — மீனாட்சி; தூங்கும் — அசைந்தோடும்.

3. கண்ணன் குழலூதும் சிறப்பு

இப்பாடல் **அழகர் கலம்பத்தில்** காணப்படுகின்றது. இதனை இயற்றியார் இன்னார் என்று அறியக் கூடவில்லை. அழகர் என்பது திருமாலுக்குரிய ஒரு பெயர். திருமால் சம்பந்தமான கலம்பகம் 'அழகர் கலம்பகம்' என்று பெயர் பெற்றது.

குறித்தமுகிற் பந்தரிட்டுக்
குறுந்துளிதூற் றிடவாயர்
தறித்தமர மத்தனையும்
தழைத்தயர்ந்து பழுத்துதவக்
கடம்புலிகள் அயர்ந்துசித்ர
காயமெனும் பெயர்விளக்கக்
கோடம்பணிகள் மாலையதாய்க்
குலரத்ந விளக்கேற்றக்
கருங்கல்தான் வெண்ணெயெனக்
கரைந்தோட விரைந்தோடி
வருங்கற்றுன் இமைப்பொழிய
மழவிடையங் கயர்ந்துநிற்ப
மிகவிளக்கோ வியரெழுத
வேள்கியத்ரி பங்கியுடன்
சுகவிளங்கோ வியர்மழலை
தோனித்தகுழல் இசைத்தோய்கேள்!

— *அழகர் கலம்பகம்.*

குறிப்புரை

குறித்த முகில் — முழங்கும் மேகம்; தூற்றிட — சிந்த; தறித்த — வெட்டின; தழைத்து — தளிர்த்து; அலர்ந்து — பூத்து; உதவ — பயன்பட; சித்ரகாயம் — கோடுகளால் அலங்கரிக்கப்பட்ட உடல்; இது புலிக்குக் காரணப்பெயர்; பணிகள் — பாம்புகள்; மாலையது ஆய் — வரிசை வரிசையாக; குல ரத்நம் — பெரிய மாணிக்கம்; கற்றுன் — கன்று + ஆன், கன்றுகளையுடைய பசுக்கள்; இமைப்பு ஒழிய — கண்ணிமைக்காமல் திகைத்து நிற்க; மழவிடை — இளம் எருதுகள்; ஓவியர் — சித்திரக்காரர்; திரிபங்கி — மூன்று வளை வுள்ளதொரு கோலம்; கோவியர் — ஆயர் மகளிர்; குழல் — வேய்ங் குழல்.

4. குரங்கும் பலாப்பழமும்

இப்பாடல் திருவாரூர் நான்மணிமாலையில் உள்ளது. திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராசப் பெருமான் சம்பந்தமாகப் பாடப்பட்டது; இதனைப் பாடியவர் குமர

குருபர அடிகளாவார். இவர் திருநெல்வேலி நாட்டிலுள்ள ஸ்ரீவைகுண்டம் என்னுமூரில் சைவ வேளாளர் மரபில் இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகட்கு முன் பிறந்தவர். கந்தர்கலிவெண்பா, நீதிநெறிவிளக்கம் முதலிய வேறு பல நூல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

ஒண்கதிர் பரப்பும் செங்கதிர்க் கடவுள்
வெயில்கண் டறியா வீங்கிருட் பிழம்பில்
புயல்கண் படுக்கும் பூந்தண் பொதும்பில்
காவலர்ப் பயந்து பாதபத் தொதுங்கிய
இருவே றுருவிற் கருவிரன் மந்தி
பொன்னிறம் பழுத்த பூஞ்சுளை வருக்கை
முன்னுறக் காண்டலும் முளையெயி றிலங்க
மடித்தலத் திருத்தி வகிர்ந்துவள் ளுகிரால்
தொடுத்தபொற் சுளைபல எடுத்துவாய் மடுப்பது
மானிட மடங்கல் தூணிடைத் தோன்றி
ஆடகப் பெயரின் அவுணன்மார் பிடந்து
நீடுபைங் குடரின் நிணங்கவர்ந் துண்டென
இறும்பூது பயக்கும் நறும்பணை மருதம்.

— *திருவாரூர் நான்மணிமாலை.*

குறிப்புரை

செங்கதிர்க் கடவுள் — சூரியன்; இருட்பிழம்பு — இருள் கூட்டம்; புயல் — காற்று; கண் படுக்கும் — தங்கும்; பொதும்பில் — சோலையில்; காவலர் — காவலாளிகள்; பாதபம் — மரம்; ஒடுங்கிய — மறைந்த; இருவேறு உரு — முகம் ஒரு வடிவம், உடல் வேறு வடிவம்; மந்தி — குரங்கு; வருக்கை — பலாப்பழம்; முள் எயிறு — இளமையான பற்கள்; வகிர்ந்து — கீறி; உகிர் — நகம்; வாய் மடுப்பது — உண்பது; மானிட மடங்கல் — திருமாலின் நரசிங்க வடிவம்; ஆடகப் பெயரின் அவுணன் — பொன்னைக் குறிக்கும் பெயரையுடைய அரசன், இரணியன்; ஹிரண்யம் — பொன்; நிணம் — கொழுப்பு; இறும்பூது — ஆச்சரியம்; பணை — வயல்.

பயிற்சி வினாக்கள்

பொழுது புலர்தல்

1. 'பொழுது புலர்தல்' என்னும் பொருள்பற்றிய பாடல் எந்நூலில் உள்ளது? ஆசிரியர் யார்?

2. 'திருப்பள்ளியெழுச்சி' என்பது இன்னதென்று விளக்குக.

3. பொழுது புலரும்போது நிகழ்ந்தனவாக எவை கூறப் படுகின்றன?

4. 'அலங்கலந் தொடையல்கொண் டடியிணை பணிவான், அமரர்கள் புகுந்தனர்'—எப்பொழுது? அப்பொழுது நிகழ்ந்த பிற நிகழ்ச்சிகள் யாவை?

5. இலங்கையர்கோன் வழிபாடு செய் கோயில்—எது? வரலாறு தருக.

பொதியமலைச் சிறப்பு

1. பொதியமலை எங்குள்ளது? அதன் சிறப்புக்கள் யாவை?

2. பொதியமலைச் சிறப்புப் பற்றிய பாடல் எந்நூலில் உள்ளது? பாடிய ஆசிரியர் யார்?

3. குமரகுருபர அடிகளைப் பற்றிக் குறிப்பு வரைக.

4. "திங்கள்முடி சூடுமலை; தென்றல்விளை யாடுமலை" விளக்கம் தருக.

5. பொதியமலையில் அருவி பாய்வது எதற்கு ஒப்பிடப் பட்டுள்ளது?

கண்ணன் குழலூதும் சிறப்பு

1. கண்ணன் குழலூதும் சிறப்புப் பற்றிய பாடல் எந் நூலிலுள்ளது? அந்நூலைப்பற்றிக் குறிப்பு வரைக.

2. அழகர் குழலிசைத்த போது நிகழ்ந்தன யாவை?

3. புலிகள் 'சித்திரகாயம்' என்று அழைக்கப்பட்டது ஏன்?

4. "சுகவிளங்கோ......இசைத்தோய்"—பொருள் தருக.

குரங்கும் பலாப்பழமும்

1. திருவாரூர் நான்மணிமாலை பாடியது யார்? அதில் பாடமாக வந்துள்ள பகுதி எதைப் பற்றியது?

2. "இருவே றுருவிற் கருவிரல்மந்தி" — இருவேறுரு யாவை? மந்தி இருந்த சோலை எங்ஙனம் வருணிக்கப் பெற்றுள்ளது?

3. குரங்கு பலாப்பழத்தைத் தின்ற தெங்ஙனம் வருணிக்கப்பட்டுள்ளது? அதற்குக் கூறப்படும் உவமையாது? பொருத்திக் காட்டுக.

VI. பல்சுவை

1. சிலேடை

ஒரு சொற்றொடர் பல பொருள்பட வருவது **சிலேடை** யாகும். அது **செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை** என இருவகைப்படும். ஒரு சொல் இரு பொருள்பட வருவது செம்மொழிச் சிலேடை; ஒரு சொல் நின்று ஒரு பொருள்படவும், அதுவே பிரிந்து நின்று வேறு பொருள்படவும் வருவது பிரிமொழிச் சிலேடையாம்.

இச்செய்யுட்களில் முதலாவது செய்யுள் பாம்புக்கும், வாழைப்பழத்துக்கும் சிலேடையாகப் பாடியது. இது **தனிப்பாடல் திரட்டில்** உள்ளது. இதனைப் பாடியவர் **காளமேகப் புலவர்**. காலம் கி. பி. 15ஆம் நூற்றாண்டாகும். இரண்டாவது செய்யுள் **கலைசைச் சிலேடை வெண்பாவிலுள்** ளது. இதனைப் பாடியவர் **தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர்**. இவரது காலம் கி. பி. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

பாம்புக்கும் வாழைப்பழத்துக்கும் சிலேடை

1. நஞ்சிருக்கும் ; தோலுரிக்கும் ; நாதர்முடி மேலிருக்கும் ;
வெஞ்சினத்திற் பற்பட்டால் மீளாது — விஞ்சுமலர்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்.

கலைசைச் சிலேடை வெண்பா

2. ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரைச் சூழும் கலைசையே — மேவும்
அரிவையம் பாகத்தான் அரனேருமுன் றும்எய்தோன்
அரிவையம் பாகத்தான் அகம்.

குறிப்புரை

1. நஞ்சு இருக்கும் — (பாம்பு) விடத்தைத் தன்னில் கொண் டிருக்கும்; (பழம்) நைந்து இருக்கும்; வெஞ்சினத்தில் — (பாம்பு)

கொடிய கோபத்தில்; (பழம்) உணவாகப் பயன்பட்டால், விஞ்சு மலர் — விரிந்த மலர்; தேம் — இனிய தேன்; வரை — மலை.

2. பாவலர் — புலவர்; காவலர் — அரசர்; கா + அலர் — சோலையிலுள்ள மலர்கள்; அரி வை அம்பு ஆக — திருமாலைக் கூர்மையான அம்பாகக் கொண்டு; அரிவை அம் பாகத்தான் — உமாதேவியை அழகிய இடப்பாகத்தேயுடைய சிவபெருமான்; அகம் — இடம்.

2. சீட்டுக்கவி

புலவர்கள், வள்ளல்களிடம் பரிசு முதலிய பெற வேண்டித் தம் வரவை அறிவித்தற்கும் எழுதியனுப்பும் கவிக்குச் 'சீட்டுக்கவி' என்று பெயர். இதனைத் '**தீட்டுக்கவி**' என்று கூறுவது முண்டு. தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார் இதற்கு 'ஓலைத்தூக்கு' என்று பெயரிட்டுள்ளார்.

இப்பாடல்கள் எட்டயபுரம் மகாராச ராசேந்திர திரு. **வெங்கரேசுரெட்டப்ப பூபதி** அவர்களுக்குச் சி. **சுப்பிரமணிய பாரதியார்** எழுதியனுப்பிய ஓலைத்தூக்காகும். இஃது 1919ஆம் ஆண்டு மே மாதம் இரண்டாம் நாளில் எழுதப் பட்டது.

1. ராஜமகா ராஜேந்த்ர ராஜகுல
 சேகரன் ஸ்ரீராஜ ராஜன்
 தேசமெலாம் புகழ்விளங்கும் இளசைவெங்க
 டேசுரெட்ட சிங்கன் காண்க,
 வாசமிகு துழாய்த் தாரான் கண்ணனடி
 மறவாத மனத்தான், சக்தி
 தாசனெனப் புகழ்வளரும் சுப்ரமண்ய
 பாரதிதான் சமைத்த தூக்கு.

2. மன்னவனே! தமிழ்நாட்டில் தமிழறிந்த
 மன்னரிலை யென்று மாந்தர்
 இன்னலுறப் புகன்றவசை நீமகுடம்
 புனைந்தபொழு திருந்த தன்றே!

சொன்னலமும் பொருணலமும் சுவைகண்டு
சுவைகண்டு, துய்த்துத் துய்த்துக்
கன்னலிலே சுவையறியுங் குழந்தை கள்போல்
தமிழ்ச்சுவைநீ களித்தா யன்றே!

3. புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழில் ஏற்றும்
கவியரசர் தமிழ்நாட்டிற் கில்லையெனும்
வசையென்னற் கழிந்த தன்றே!
"சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது
சொற்புதிது சோதி மிக்க
நவகவிதை எந்நாளு மழியாத
மகாகவிதை" என்று நன்கு.

4. பிரான்ஸென்னும் சிறந்தபுகழ் நாட்டிலுயர்
புலவோரும் பிறரு மாங்கே
வீராவுபுகழ் ஆங்கிலத்தீங் கவியரசர்
தாமுமிக வியந்து கூறிப்
பராவியென்றன் தமிழ்க்கவியை மொழிபெயர்த்துப்
போற்றுகின்றார்; பாரோர் ஏத்துந்
தராதிபனே! இளசைவேங்க டேசுரேட்டா!
நின்பா லத்தமிழ் கொணர்ந்தேன்.

வேறு

5. வியப்புமிகும் புத்திசையில் வியத்தகுமேன் கவிதையினை
வேந்த னே! நின்
நயப்படுசந் நிதிதனிலே நான்பாட நீகேட்டு
நன்கு போற்றி,
ஐயப்பறைகள் சாற்றுவித்துச் சாலுவைகள் பொற்பைகள்
ஜதிபல் லக்கு
வயப்பரிவா ரங்கள்முதற் பரிசளித்துப் பல்வாழி
வாழ்க நீயே!

— *சி. சுப்பிரமணிய பாரதியார்.*

குறிப்புரை

1. இளசை — எட்டயபுரம்; வெங்கடேசுரெட்ட சிங்கன்: இவர் எட்டயபுரம் ஜமீன்தார்; பாரதியார் புதுவையிலிருந்து திரும்பி வந்து எட்டயபுரத்தில் இருந்த பொழுது, இவரை நேரில் சந்தித்தால் அரசாங்கத்தாரால் தமக்கும் இவருக்கும் துன்பங்கள் ஏற்படக் கூடும் என்று கருதி இவருக்கு இந்தச் சீட்டுக் கவியை எழுதி அனுப்பினுர். துழாய்த்தாரான் — துளசிமாலையையுடையவன்; சக்தி தாசன் — சக்திதேவிக்கு அடியான்; சமைத்த தூக்கு — எழுதிய சீட்டுக்கவி.

2. இன்னல் — மனவருத்தம்; வசை — பழிச்சொல்; மகுடம் - முடி; துய்த்து — அனுபவித்து; கன்னல் — கரும்பு.

3. வான்புகழ் — சிறந்தபுகழ்; வளம் — பொருள்வளம்; நவ கவிதை — புதிய பாடல்.

4. விராவுபுகழ் — புகழ்விராவு, புகழ் கலந்த; தீங்கவியரசர் — இனிய கவிமன்னர். பாரோர் — உலகத்தவர்; தராதிபன் — தரை + அதிபன், புவிமன்னன்;

5. புத்திசை — புதுமை + திசை; புதுமை + இசை எனினும் பொருந்தும்; வியத்தகு — மேம்பட்ட; நயப்படு — நன்மைமிகும்; சந்நிதி — முன்னிலை; ஜயப்பறைகள் சாற்றுவித்து — வெற்றிமுரசு கொட்டச் செய்து; சாலுவை — அங்கவஸ்திரம்; பொற்பைகள் — பொன் முடிச்சுக்கள்; ஜதிபல்லக்கு — புவியரசர்க்குச் சரி சமான மான பல்லக்கு; வயப்பரிவாரங்கள் — வலிமைமிக்க சூழ்படைகள்; ஊழி — காலம்.

பயிற்சி வினுக்கள்

சிலேடை

1. சிலேடை என்பது யாது? அதன் வகையைக் குறிப்பிட்டு விளக்குக.

2. சிலேடையாக வந்துள்ள செய்யுட்கள் எந்தெந்த நூலிலுள்ளன? யார் யார் பாடியன? காலம் எவை?

3. நஞ்சிருக்கும், முடிமேலிருக்கும், வெஞ்சினத்திற் பற்பட்டால் மீளாது — இத் தொடர்கள் பாம்புக்கும் வாழைப் பழத்திற்கும் எவ்வாறு பொருந்தும்?

4. திருமலைராயன் யார்? அவனைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

5. கலிசைச் சிலேடை வெண்பா என்பது என்ன? அதன் பெயருக்கேற்ப வெண்பா எவ்வாறு அமைந்துள்ளது?

6. கலிசை வளம் எங்ஙனம் கூறப்பெற்றுள்ளது? அஃது எக் கடவுள் எழுந்தருளிய தலம்?

7. காவலர் என்பது எவ்வாறு பிரிமொழிச்சிலேடையாகும்? விளக்கி எழுதுக.

8. 'அரிவையம் பாகத்தான் அரணொரு மூன்றுமெய்தோன்
அரிவையம் பாகத்தான் அகம்'

(i) இதற்குப் பதப்பொருள் தருக. (ii) இதிலமைந்த அணியைக் குறிப்பிட்டு விளக்குக. (iii) இதிலமைந்த புராணக் கதைகளைக் குறிப்பிடுக.

சீட்டுக்கவி

1. சீட்டுக்கவி என்பது யாது? அதற்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

2. பாரதியார் யாருக்கு எப்பொழுது எதன் பொருட்டுச் சீட்டுக்கவி எழுதினர்?

3. பாரதியார் சீட்டுக் கவியில் சமீன்தாரையும் தம்மையும் எங்ஙனம் அறிமுகம் செய்கின்றார்?

4. சமீன்தார் தமிழ்ச்சுவை யறியும் தன்மை எங்ஙனம் கூறப்பெற்றுள்ளது?

5. பாரதியார் தம் கவிப்பெருமையை எங்ஙனம் குறிப்பிடுகின்றார்?

6. பாரதியார் தமக்கு வேண்டுவனவாகச் சமீன்தாரிடம் எவைகளைக் கேட்கின்றார்?

7. இலக்கணக் குறிப்பு எழுதுக:— காண்க, மன்னரிலே, தீங்கவி, பொற்பை.

உரைநடைக் கோவை

1. தமிழர் விழிப்பு

(யோகி சுத்தானந்த பாரதியார்)

சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ்ப் பள்ளிக்கூடங்களிற் படித்தவர்களுக்கு நான்கு பாஷை ஒக்கபுலேரி (அக்காலச் சிறுவர், "ஒக்கபிள்ளையார்" என்பர்.) நினைப்பிருக்கலாம்; எண்சுவடி, குழிமாற்று, குமரேசசதகம், பஞ்சதந்திரம் படித்த பிறகு ஒக்கபுலேரி படிப்பர். சிறுவயதில் நானும் அதைப் படித்தேன். தமிழ், தெலுங்கு, துலுக்கு, ஆங்கிலம் நான்கு மொழிகளிலும் பேச்சுப் பழக்கம் பெற அஃது ஒரு சாதனமாயிருந்தது.

தமிழ்: அவன் உனக்கு என்ன செய்தான்?

தெலுங்கு: வாடு நீகு ஏமி சேசெனு?

ஹிந்துஸ்தானி: வஹ் தும்கோ க்யாகியாஹை?

ஆங்கிலம்: வாட் டிட் ஹி டு டியு?

இப்படி நான்கு இலக்கத்தில் நான்கு மொழிகளும் தமிழில் எழுதப்பட்டிருக்கும். இந்த நான்கு மொழிகளும் தமிழருக்கு ஒரு காலம் அவசியமாயிருந்தன. ஏன்? அது தான் தமிழ்வரலாற்றில் ஏற்பட்ட மாறுதல். இந்த நான்கு மொழிகளுடன் மராத்திகூடத் தெரியவேண்டிய காலமும் இருந்தது.

1714ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு சுதந்தரமாக இருந்தது, பிறகு அன்னியர் வந்து புகுந்தனர். சேர சோழ பாண்டியர்களிடையே எழுந்த கலகங்களால் அன்னியர் புகுந்தனர். பாண்டிநாட்டில் இரண்டு இளவரசர்களுக்குள் போட்டியுண்டாகி, விஜயநகரமன்னர் துணையை நாடினர். தெலுங்கர், பாண்டிநாட்டிற் புகுந்தனர்; அரசையும் கைப்பற்றினர். தமிழரசு மறைந்தது; தெலுங்கரசு வந்தது. தமிழ் மொழியுடன் நம்மவர்

தெலுங்கும் கற்க நேர்ந்தது. தஞ்சை நாயக்கருக்கும் மதுரை நாயக்கருக்கும் நடந்த போர்களால் மராட்டியர் தமிழகத்திற் புக நேர்ந்தது. தஞ்சையில் மராட்டியர் ஆட்சி நடந்தது. அல்லாவுதீன் காலத்தில் தொடங்கிய முகமதியப் படையெடுப்பு வரவர அதிகரித்தது. தமிழரிற் பலர் இஸ்லாம் மதத்தைத் தழுவினர். சந்தாசாகெபு, ஹைதர், திப்பு முதலிய இஸ்லாம் மன்னரின் படையெடுப்புக்களால், ஏராளமான தமிழர் மதம் மாறினர். ஹிந்துஸ்தானியே தாய்மொழியாகக் கொண்டவர்கள் நமது நாட்டிற் குடியேறி, இராணுவத்திலும் வணிகத்திலும் முதன்மை பெற்றனர். வடக்கே பிளாசி யுத்தம், தெற்கே ஆர்க்காடு முற்றிகை—இரண்டும் ஆங்கிலேயர் கொடிக்கு ஏற்றமீந்தன.

கிளைவ் காலத்திற்குப் பிறகு ஆங்கில ஆட்சியும் அத்துடன் ஆங்கில மொழியும் நமது நாட்டில் வேரூன்றிக் கொண்டன. மெக்காலேயின் அழுத்தமான முயற்சியால், இந்தியர் வயிற்றுப் பிழைப்புக்கு ஆங்கிலமும் முதன்மை யானது. ரிப்பன், பெண்டிங்கு பிரபுக்களின் காலத்தில், நாடெங்கும் முறையான ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டன. ஆங்கிலத்தினுல் நமது சமுதாய வாழ்வில் ஒரு புதிய விழிப்பு உண்டானது; எண்ணங்கள்; தாராளமாயின; சிந்தனைத் திறமை அதிகரித்தது; பிற நாடுகளின் சுதந்தர வாழ்க்கை நம்மவர்க்குத் தெரிய நேர்ந்தது. ஆனுல் அன்னிய மொழிக்கு முதன்மை தந்து, இந்தியர் தாய்மொழியை மறந்ததுதான் பெரிய குற்றம். இக் குற்றம் மற்ற மாகாணங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் அதிகமாக நேர்ந்தது. தமிழர்போல ஆங்கிலம் கலந்து தாய்மொழியைக் கொச்சை கொச்சையாகப் பேசுவோர் உலகத்திலேயே கிடையாது. குஜராத்தி, வங்கம், ஹிந்தி, மராத்தி முதலிய மொழியினர் தமது தாய்மொழியைச் சுத்தமாகவே பேசுகின்றனர். ஆங்கிலேயர், ப்ரெஞ்சுக்காரர், ஜெர்மானியர், இத்தாலியர், ஜப்பானியர், தமது தாய்மொழியை இலக்கணப் பிழைகளில்லாமல் சுத்தமா

கவே பேசுகின்றனர். சிலர் பேசுவது உயர்ந்த இலக்கியம் படிக்கக் கேட்பது போலிருக்கிறது. தமிழரோ அப்பப்ப! சொல்லவேண்டா! கொச்சைப் பேச்சுப் பேசி, அதுவே ஒரு பழக்கமாகி, நூல்களிலும் அது புகுந்துவிட்டது, அதனுல் பழந்தமிழ் இலக்கியங்கள், இலக்கண வழுவின்றி எழுதிய நூல்கள், கிரேக்கு இலத்தீன் போலாயின. தகுந்த உரைநடை நூல்களே தமிழில் அரியனவாயின. தமிழ் வழக்கற்றுப் போகுமோ என்று அறிவாளர் ஏங்கிய நாட்களில், இராமலிங்க சுவாமிகளும், ஆறுமுக நாவலரும் தமிழுக்கு உயிர்த்தாரை வார்க்கத் தோன்றினர். அருட்சோதி வள்ளலார் தமது அருட் பாடலாலும், ஆறுமுக நாவலர் உரைநடை நூல்களாலும் தமிழை வாழ வைத்தனர். அதன்பிறகு, அறிஞர் சி. வை. தாமோதரம் பிள்ளே, தமிழ் நாட்டுப் பெரும் பேராசிரியர் டாக்டர் சாமிநாதையரின் இடைவிடா முயற்சியால், சங்க நூல்கள் புத்துயிர் பெற்றன. இவர்களுக்குத் தமிழர் என்றும் நன்றி செலுத்த வேண்டும். எனினும் பொது ஜனங்களிடையே தமிழ் விழிப்புக் காணவில்லே.

அந்த விழிப்பை ஈந்தது நாட்டுணர்ச்சிதான். தமிழ் நாட்டில் சுதேச இயக்கம் என்று தலே தூக்கியதோ, அன்றே தமிழும் புதுப்பிறவி பெற்றது. அக்காலம் சிதம்பரம்பிள்ளே, பாரதியார், சிவா, ஜி, சுப்பிரமணிய ஐயர் முதலிய வீரமணிகளின் பேச்சும் எழுத்தும், நாட்டுணர்வையும் தமிழுணர்வையும் எழுப்பின. சுதேசமித்திரன், இந்தியா, ஜனபிமானி முதலிய பத்திரிகைகள் தமிழை வளர்த்தன. ஆங்கிலத்திலேயே பேசிக்கொண்டிருந்தவரும், தமிழில் பேசத் தொடங்கினர்; சாதாரண ஜனங்களுக்கும் புரியும்படி எளிய நடையில் பேசினர்; எழுதினர். திலகர் — அரவிந்தர் இயக்கத்தின் பயனுகத் தமிழ் நாட்டின் இலக்கியமும் கவிதையும் புதுமை பெற்றன. மஹாத்மா காந்தி நாட்டியக்கத்தை மேற்கொண்டபிறகு, நாட்டில் பல எழுத்தாளரும், பத்திரிகைகளும், பேச்சாளரும் எழுந்தனர். இக்காலம் பெரியார் திரு. வி. கலியாண

சுந்தர முதலியார், தமிழ்ப் புலவர் உமாமகேசுரனுர், வ. வெ. சு. ஐயர், ராவ் சாஹெப் — வையாபுரிப்பிள்ளை, கா. சுப்பிர மணிய பிள்ளை, மறைமலையடிகள் முதலியோர் அரிய தமிழ்ப் பணியாற்றினர். பிறகு, வலிய நடையும் புலவர் பாணியும் மறைந்து, 'எளிய நடை இயக்கம்' ஒன்றெழுந் தது. அத்துடன் பொது ஜனங்களுக்குப் பளிச்சென்று புரியும் படியான பேச்சுத் தமிழிலேயே பத்திரிகைகளும் நூல்களும் ஏராளமாகத் தோன்றின; இவற்ருல் ஒரு புதிய நடை தமிழுக்கு ஏற்பட்டது. அப்புதிய நடையில் இப்போது நடக்கும் இரண்டொரு பத்திரிகைகள் இந்தி யாவிலேயே முதன்மை வகிக்கின்றன. சிறு கதை, தொடர் கதை, நகைச்சுவைக் கட்டுரைகள், சமுதாய நடை யுடை பாவனைகளை விளக்கும் கட்டுரைகள் — இவற் றில் தமிழ் எழுத்தாளரே இப்போது முன்னணி வகிக்கின் றனர் என்னலாம்.

நாட்டியக்கத்தால் தமிழ் இவ்வாறு புதுமை பெற்று வரும்போது, ஹிந்தி தமிழ் நாட்டிற் புகுந்தது. ஹிந்திக் கதைகள் தமிழரின் கற்பனு சக்தியை அதிகரிக்கச் செய் தன. இப்போது ஹிந்தி பள்ளிக்கூடங்களில் புகுந்துள் ளது. இதனுல் வட நாட்டுக் கலையும் சேர்ந்து, தமிழ் விரிவடையலாம் சிலர் ஹிந்தி புகுந்து தமிழை விழுங்கி விடும் என்கின்றனர். இரண்டிற்கு மிடையே 'தமிழைப் பல பீமனுக்குங்கள்' என்று நாம் சொல்லுகிருேம்.

* * * *

தமிழ் நாட்டிற்கும் ஹிந்தி வந்துவிட்டது! பள்ளிக் கூடங்களில் ஹிந்திப் பாடம் நடக்கிறது! ஹிந்தி வந்தத ஞல் தமிழருக்கு ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டுள்ளது. அது நல்லதுதான். ஆங்கிலம் தமிழை விழுங்கியது போல ஹிந்தியும் நமது தாய்மொழியை விழுங்கி விடும் என்று சிலர் அஞ்சுகின்றனர். ஆனுல் தமிழர் விழிப்புடனிருந் தால் ஆங்கிலம் ஹிந்தி இரண்டையும் தனக்குப் பணிப் பெண்களாகக்கொண்டு தமிழ்க்கலை உலகை ஆளலாம். நாம் பலசாலியாயிருந்தால் — வீட்டில் புகுந்தவன் நமது

கண்ணில் பொடி தூவாது விழித்திருந்தால் மோசம்போக மாட்டோம். தமிழை வளர்க்க ஆயிரம் மடங்கு வீரமுடன் இன்று தமிழர் முன்வர வேண்டும். இப்போதும் உறங்கி ஞல், தமிழருக்கு மோசம் வரும். வெள்ளம் வந்து கொண்டு தான் இருக்கிறது. அதைத் தாண்டத் தமிழ்ப் படகை உறுதியாக்குங்கள்.

குறிப்புரை

ஒக்கப்புலேரி — சொல்தொகுதி; குழிமாற்று — பெருக்கல் வாய் பாடு; ஏற்றம் — உயர்வு; புலவர் பாணி — புலவர் மொழி; முன் னணி — முன் வரிசையில் நிற்றல்; பணிப்பெண் — வேலைக்காரி.

பயிற்சி விஞக்கள்

1. 'நான்கு பாஷை ஒக்கப்புலேரி' என்பது யாது? அது ஒரு காலத்தில் தமிழ் மாணவர் பள்ளியில் பயலவேண்டுவது அவசியமாயிருந்தது, ஏன்?

2. தமிழ் மொழியுடன் நம்மவர் தெலுங்கும் கற்க நேர்ந் தது எப்பொழுது? ஏன்?

3. பழந்தமிழ் இலக்கியங்களும், இலக்கண வழுவின்றி எழுதிய நூல்களும் நமக்குக் கிரேக்கு இலத்தீனுயிமை ஏன்?

4. தமிழுக்கு உயிர்த்தாரை வார்த்த பெரியோர்கள் யாவர்? எங்ஙனம்?

5. தமிழர் யார் யாருக்கு என்றும் நன்றி செலுத்த வேண்டும்? ஏன்?

6. தமிழ்மொழி எப்பொழுது விழிப்புற்றது? அதற்குக் காரணமாயிருந்தார் யார் யார்?

7. இடைக்காலத்தில் தமிழ்மொழி வளர்ச்சியுற்ற தன் மையை எழுதுக.

8. தமிழர் எங்ஙனம் விழிப்பாய் இருத்தல் வேண்டும்? ஏன்?

2. சான்ருண்மை

(பேராசிரியர் அ. கி பரந்தாமனுர், எம். ஏ.)

நாடு சிறந்து விளங்க வேண்டுமெனில், நாட்டில் வாழ்பவர்களான ஆணும் பெண்ணும், நற்பண்புள்ளவர்களாக இருத்தல் வேண்டும். ஔவைப் பிராட்டியார்,

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை: வாழிய நிலனே"

என்ருர். ஆடவர்மட்டும் நல்லவரா யிருப்பின், நாடு நலம் பெருது; மகளிரும் நல்லவரா யிருந்தாற்ருன் நாடு நலம் பெறும். நாடு நலம்பெறச் சான்ருண்மை என்னும் பண்பு இரு பாலார்க்கும் இன்றியமையாதது.

சான்ருண்மை என்பது, பல நற்குணங்களை ஆளுந் தன்மை. இச்சொல், சால்பு என்பதிலிருந்து தோன்றியது. சால்பு என்னும் சொல்லுக்கு எல்லா நற்குணங்களின் நிறைவு என்பது பொருள். இந்நாளின் சான்ருண்மையுடையவரைப் பெரியார் என்றும், பெருந்தன்மையுடையவர் என்றும் சொல்கிருேம்.

திருக்குறளில் பெருமை, சான்ருண்மை என்று இரண்டு அதிகாரங்கள் இருக்கின்றன. செயற்கரிய செய்தல், தருக்கு இன்மை, பிறர்குற்றம் கூருமை என்றிவை முதலிய நற்குணங்களால் பெரியாரது தன்மை பெருமை என்றும், பெருமையுள் அடங்காத அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மை முதலிய பண்புகளின் நிறைவே சான்ருண்மை என்றும் பரிமேலழகர் விளக்கியுள்ளார். ஆனல், இன்று உலக வழக்கில் நாம் பெருமைப் பண்புகளையும் சான்ருண்மைப் பண்புகளையும் ஒன்றுசேர்த்துப் 'பெருந்தன்மை' என்னும் சொல்லாகக் கூறுகிருேம்.

ஆங்கிலத்தில் 'ஜென்டில்மேன்' (Gentlemen) என்னும் சொல் வழங்குகிறது. 'யார் ஜென்டில்மென்'? என்பதைக் குறித்து நியூமென் என்ற ஆங்கிலப் பேரறிஞர் மிக அழகாக விளக்கம் தந்துள்ளார். நியூமென் எழுதிய விளக்-

கம் அற்புதமாக இருப்பதைக் காணலாம். அவர் கூறிய தன் சுருக்கம் வருமாறு :—

"சான்ேறேன் என்பவன் பிறருக்குத் துன்பம் செய்யாதவன் என்று சுருக்கமாகக் கூறலாம். அவன் தன்னைச் சூழ்ந்துள்ளவர்களுடைய இன்னலை நீக்குவதையே தொழிலாகக் கொள்பவன் ; தான் முன் சென்று எச்செயலில் ஈடுபடாவிடினும், பிறர் நடத்தும் நல்ல இயக்கங்களுக்குப் பொல்லாங்கு செய்யமாட்டான். அவன் பிறருடைய உள்ளம் உடையுமாறே, புண் படும் படியோ, மாறுபட்ட கருத்துக்களைச் சொல்லமாட்டான் ; பிறர் செயல்களில் சந்தேகம் கொள்ளவும் மாட்டான். பிறரை நன்கு மதிப்பதே அவனது நோக்கமாகும். அவன் எல்லாரிடத்தும் அன்புள்ளவனாகவும், அருளுள்ளவனாகவும் இருப்பான் ; எவருடன் பேசினாலும் அவருடைய குற்றங் குறைகளைக் கூறி உள்ளம் உடையுமாறு செய்யமாட்டான் ; பிறனுக்கு உதவி செய்யும்போது உதவி செய்வதாகக் காட்டிக் கொள்ளாமல் உதவி செய்வான் ; அவசியம் ஏற்பட்டாலன்றித் தன்னைக் குறித்து ஒரு போதும் பெருமையாகப் பேசமாட்டான் ; பிறரைப்பற்றிப் புறங்கூற மாட்டான் ; பிறர் புறங்கூறுதலுக்குக் காது கொடுத்தலும் செய்யான் ; பிறர் செய்யும் செய்கைகளிலும் செயல்களிலும் 'ஏதோ இருக்கவேண்டும்' என்று ஐயமும் கொள்ளமாட்டான். அவன் எவர் செயலிலும் நல்லதைக் காணும் இயல்பு உள்ளவனாவான் ; எவரிடமும் இழிவாகவோ மரியாதைக் குறைவாகவோ நடந்து கொள்ளவும் மாட்டான்.

"இன்னா செய்தவருக்கும் இனியது செய்தலே அவனது செயலாகும். பிறரிடம் பெரு நோக்குடனும், இனிய பண்புடனும் நடந்துகொள்வதே அவனுடைய இயல்பு. அவன் இன்பம் தோன்றும்போது துடிப்பதில்லை ; துன்பம் வரும்போது அஞ்சுவதில்லை. ஒருவரிடம் வாதம் செய்யும் போது அவன் என்றும் வரம்பு கடந்து நடப்பதில்லை ; தன் கருத்துச் சரியாக இருப்பினும் தவறாக இருப்பினும் நீதி முறையிலிருந்து தவறுவதில்லை. அவன் எதிர்வாதம்

செய்பவன் மனநிலையைக் கண்டு அவனிடம் இனிதாக நடந்து கொள்வான்.

"தனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை எனினும் அவன் கடவுள் நம்பிக்கையுள்ளவர்களைத் தாக்கிப் பேசி இழிவுபடுத்தும் செயலைச் செய்யமாட்டான்; பிறர் பக்தியை மதிப்பான்; நல்ல சிறந்த பழக்க வழக்கங்களைப் போற்றிப் பேசுவான். அவனிடம் பிடிவாதக் கொள்கையோ வெறியோ இருப்பதில்லை. தனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை என்பதற்காகச் சமயத் தலைவர்களை மதிக்காமல் இருப்பதில்லை. தனக்குப் பிடிக்காத சமயக்கொள்கைகளைத் தாக்காமலும், ஒன்றும் கூறாமலும் புறக்கணித்து விடுவது அவனது இயல்பு. விரிந்த மனப்பான்மையும், பரந்த பெருநோக்கமும், திருந்திய அருளுள்ளமும், அரிய நேர்மையும் அவனிடம் காணப்படும் சிறந்த பண்புகள்."

இனி வள்ளுவர், பெருமையைப் பற்றியும், சான்றாண்மையைக் குறித்தும் கூறுவதைக் காண்போம். அரிய செயலை ஆற்றுவார் பெரியார் என்றும், செருக்கின்றி ஒழுகுபவர் பெரியார் என்றும், பிறர் குற்றத்தை மறைத்து வைப்பது பெருமைக்குச் சிறந்த பண்பு என்றும் கூறிய வள்ளுவர், அன்பு, ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை இவற்றை யுடையவர் சான்றோர் என்றும், அவர்கள் பிறர் தீமையைச் சொல்லமாட்டார்கள் என்றும், தங்களைப் பார்க்கினும் தாழ்ந்தவரிடத்தும் தங்களுக்குத் தோல்வி ஏற்பட்டால் ஒப்புக் கொள்வார்கள் என்றும், அவர்கள் இன்னா செய்தவர்களுக்கும் இனிய நன்மைகளைச் செய்வார்கள் என்றும் சான்றாண்மையை விளக்கியுள்ளார்.

நாலடியார் என்னும் நூலோ இரகசியத்தில் செவிடனாயும், தீய புறங்கூற்றில் ஊமையாயும் இருப்பவனே சான்றோனாவான் என்று நவில்கிறது.

சங்கநூல்களுள் ஒன்றாகிய புறநானூற்றுச் செய்யுள் ஒன்றில் சான்றாண்மைப் பண்புகளை நன்றாகக் காண்கிறோம். அச்செய்யுளைப் பாடியவன் **இளம்பெருவழுதி** என்ற பாண்டியன். செய்யுள் வருமாறு :—

"உண்டால் அம்மஇவ் வுலகம்! இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனி(து)எனத்
தமியர் உண்டலும் இலரே: முனி(வு)இலர்;
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ(து) அஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையராகித்
தமக்(கு)என முயலா நோன்தாள்
பிறர்க்(கு)என முயலுநர் உண்மை யானே."

இளம்பெருவழுதி, இவ்வுலகம் எப்படி நடைபெறு கிறது என்பதைக் குறித்து வியந்து, அப்படி இவ்வுலகம் நடைபெறுவதற்குக் காரணமாயிருப்பவர்கள் சான்ருண் மை மிக்க சான்ருேர்களே என்று முடிவுகட்டி, அப்பெரியார் களின் பண்புகளை இச்செய்யுளில் விரித்துக் கூறியுள்ளான். "தேவாமிர்தம் கிடைத்தாலும் தாங்களே உண்ணுது பிற ருக்குக் கொடுத்துண்ணும் பெருந்தன்மையும், யாரிடத்தும் வெறுப்பின்மையும், பிறர் அஞ்சும் துன்பத்திற்கு அஞ்சிச் சோம்பி இராமையும், புகழுக்காக உயிரையும் கொடுக்கும் மனப்பான்மையும், பழியுடன் உலகம் கிடைப்பதெனினும் அதைப் பெருத வீரப்பண்பும், மனக்கவலை கொள்ளாமை யும், அத்தகைய மாண்புகளோடு தங்களுக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருநோக்கமும் கொண்ட பெரியார் களான சான்ருேர்கள் இருப்பதனுலேயே இவ்வுலகம் நடைபெறுகிறது" என்பது இப்பாட்டின் பொருள். இதில் சான்ருண்மைப் பண்புகள் இனிது புலனுகின்றன.

ஆங்கிலப் பேரறிஞரான நியூமென் பாங்குறப் பகர்ந்த வையும், சங்க நூல்கள் இனிதெடுத்துக் கூறியவையும் சான்ருண்மை என்னும் பெருந்தன்மையின் அரும் பண்பு களாகும். இளம்பெருவழுதி இயம்பியுள்ள சான்ருண்மை இன்று மறைந்து வருகிறது; மறைந்து வராதிருப்பினும் குறைந்து வருகிறது. பிசிராந்தையார், "ஆன்றவிந் தடங் கிய சான்ருேர் பலர் தம் ஊரில் இருந்த காரணத்தால்

தமக்கு நரை தோன்றவில்லை" என்றார். அன்று போல் இன்றும் நம் நாட்டில் சான்றாண்மைப் பண்பு மலர வேண்டும். நாம் அனைவரும் சான்றாண்மை மிக்கவராகி வாழ நாளும் முயல்வோமாக!

குறிப்புரை

பண்பு — நற்குணம்; தருக்கு — எதிர்வாதம்; நாண் — நாணம்; ஒப்புரவு — உலக நடையறிந்து ஒழுகுதல்; கண்ணோட்டம் — தாட்சண்யம்; வாய்மை உண்மை; இன்னல் — துன்பம்; புறங்கூறுதல் — காணாவிடத்துப் பழித்துக் கூறுதல்; இன்னா — துன்பம்; துடிப்பது — ஆத்திரப்படுவது; வாதம் — எதிர்ப்பேச்சு; வரம்பு — அளவு புறக்கணித்து — நீக்கி; ஆற்றுவார் — செய்பவர்கள்; செருக்கு — அகந்தை; தமியர் — தனியே, ஒருவராக; முனிவு — வெறுப்பு; துஞ்சல் — சோம்பி இருத்தல்; பழி — பிறர் பழித்தற்குரிய பொருள்; அயர்வு — சோர்வு; மாட்சி — தன்மை; நோன்தாள் — வலிய முயற்சி; மாண்புகழ் — மாட்சிமைப்பட்ட புகழ்; பாங்கு — முறை; ஆன்றவிந்தடங்கிய — நற்குணங்களால் அமைந்து பணிய வேண்டும் உயர்ந்தாரிடத்துப் பணிந்து ஐம்புலனு மடங்கிய.

பயிற்சி வினாக்கள்

1. சான்றாண்மை என்பதற்கு ஆசிரியர் தரும் பொருள் விளக்கம் யாது?

2. சான்றாண்மையின் அவசியத்தை ஆசிரியர் எங்ஙனம் குறித்துள்ளார்?

3. திருக்குறளில் கூறப்படும் பெருமை, சான்றாண்மை என்னும் அதிகாரங்களில் சொல்லப்படுவன யாவை? அவை எச்சொல்லினுள் அடங்கும்?

4. சான்றோன் என்பதற்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்? அதற்கு நியூமென் என்ற ஆங்கிலப் பெரியார் தரும் விளக்கம் என்ன?

5. சான்றோன் குணங்களாக நியூமென் கூறுவன யாவை?

6. சான்றாண்மையைக் குறித்து வள்ளுவரும் நாலடியாரும் யாது கூறியுள்ளனர்.

7. சான்றோன் பண்புகளாக இளம்பெருவழுதி யாது கூறியுள்ளார்?

3. கிறிஸ்தவர் தமிழ்த் தொண்டு

(பேராசிரியர் பண்டித வித்துவான் தா. மாசில்லாமணி நாடார்)

நம் நாட்டில் பன்னெறியாளர் செய்துள்ள தமிழ்த் தொண்டில் கிறிஸ்தவர் தொண்டு பற்றி ஈண்டுச் சிறிது ஆராய்வோம். வெவ்வேறு திருநெறிபற்றிய தமிழ் மக்கள் தத்தம் திருநெறிக் கொள்கைகளையும், கருத்துக் களையும் சிறந்த நூல் வடிவாகத் தத்தம் தாய்மொழி வாயிலாய் வெளியிடும் பொழுது தம் திருநெறிக்கே அன்றித் தமிழ் மொழிக்கும் அவர் தொண்டு புரிந்தவர் என்றே கருதப்படுவர்.

நாயன்மார், சேக்கிழார், பரஞ்சோதியார் முதலான சைவப் பெரியோரும், ஆழ்வார்கள், செவ்வைச்சூடுவார், வில்லிபுத்தூரார், முதலான வைணவப் பெரியோரும், திருத்தக்கதேவர், தோலா மொழித்தேவர் முதலான சமணப் பெரியோரும், சீத்தலைச்சாத்த ஞர் முதலான பௌத்தப் பெரியோரும், உமறுப்புலவர் முத லான முஸ்லீம் பெரியோரும் இவ்வண்ணம் தமிழ்த் தொண்டு புரிந்தவரே ஆவர். இவ்வகையில் கிறிஸ்தவர் மற்றையோர்க்கு எத்துணையும் பிற்பட்டவர் அல்லர்.

கிறிஸ்துபெருமான் பாலஸ்தீன நாட்டில் பிறந்த பொழுது அவரைக் காணச் சென்ற பேரறிவாளரில் நம் நாட்டினர் ஒருவர். கிறிஸ்து சமயம் பாலஸ்தீனத்தில் வெளிப்பட்ட முதலாம் நூற்ருண்டிலேயே அது நமது நாட்டிற்கும் வந்தது. மலையாள நாட்டில் சீரிய கிறிஸ்தவர் எனப் பெயர் சிறந்த ஒரு வகுப்பினர் அக்காலம் தொட்டு இக்கால மட்டும் இங்கு வாழ்ந்து வருகின்றனர். அன்னுர் மேற்கூறியவாறே, தம் திருநெறிக் கொள்கை களைத் தம் தாய்மொழி வாயிலாக வெளியிட்டு அம் மொழிக்கு மிகப் பெருந் தொண்டு இயற்றியுள்ளனர்.

தமிழ்நாட்டில் கிறிஸ்து சமயம் பதினேழாம் நூற் ருண்டு முதலே ஐரோப்பியர் வாயிலாகப் படிப்படியாய்ப் பரவி வந்தது. இந்நாட்டில் வாழ்ந்த தமிழ் மக்களே

கிறிஸ்து சமயத்தை மேற்கொண்டனர். ஆதலின், கிறிஸ்தவர் தமிழ் மக்களே ஆவர்; வேற்று மக்கள் அல்லர். அவர் தாய்மொழி தமிழ் மொழியே; வேற்றுமொழி அன்று. அதனுல் சைவர், வைணவர் ஆகியோர்க்கு உளதேபோல் அவர்கட்கும் இயற்கையாகவே தம் தாய்மொழி மீது மிகப் பெரும்பற்று உளது.

தமிழ்த் தொண்டு புரிந்த கிறிஸ்தவரில் அவர் சமய குரவரை முதல் வரிசையில் வைத்தல் வேண்டும். அவருள் பெரும்பாலார் ஐரோப்பியரே எனினும், வெவ்வேறு நோக்கம் பற்றி அவர் இயற்றிய பனுவல்கள் அவர் தமிழ் மொழிக்குச் செய்த பெருந்தொண்டுகளாய் முடிந்தன. அவர்களுள் முதல்வர் **வீரமாமுனிவர்** என்பவரே. அவர் தமிழ் நாட்டில் திருநெறித்தொண்டு சிறப்பாக ஆற்றுதற் பொருட்டுத் தம் உடைநடைப் பழக்க வழக்கங்களை மட்டுமேயன்றி, தமது பெயரைத் தானும் மாற்றிக்கொண்டார். அக்காலத்தில் கிறிஸ்தவர்க்குத் தனியே பெருங்காப்பியம் இல்லாத குறையை நீக்கி, தூயர் சூசை முனிவர் வரலாற்றின் வாயிலாய் அவர்க்குச் சமயக் கொள்கைகளையும் பத்தி நெறியையும் அறிவுறுத்தும் பொருட்டுச் சிந்தாமணியைப் பின்பற்றித் **தேம்பாவணி**யை இயற்றினுர். **திருக்காவலூர்க் கலம்பகம்** முதலாய பனுவல்களும், ஐந்திலக்கணத் **தொன்னூலும்** அவர் செய்தனவேயாம். தமிழ் உரைநடைக்கு அவரே தந்தை என்பர். உரைநடையில் **பரமார்த்தகுரு கதை** முதலிய பல அரிய நூல்கள் இயற்றியுள்ளார். ஐரோப்பியக் கல்வி முறையைப் பின்பற்றித் தமிழில் முதன் முதல் அகராதி வகுத்தவர் இப்பெரியாரே. அதன் பெயர் **சதுர் அகராதி**. அதன் வழியே பிற்காலத்தில் **உவின்சிலோ** மிகச் சிறந்த பேரகராதி வகுக்காலாயினர்.

போப்பையர் என்பவர் தமிழ் மொழியை ஐரோப்பியர்க்குக் கற்பிக்க விழைந்து அரிய பெரிய பாடப் புத்தகங்களும், அகராதிகளும், இலக்கண நூல்களும் இயற்றினுர். தமிழ் மக்களின் நீதிநெறிகளை ஐரோப்பியர்க்கு எடுத்துக் காட்ட விரும்பித் திருக்குறளையும், நாலடியாரையும் ஆங்கிலத்தில்

மொழி பெயர்த்தார். தமிழர் திருநெறி மாண்பை அவர்க்குத் தெரிவிக்கும் வண்ணம் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ஆங்கில அரசியல் மேன்மையைத் தமிழ் மக்கள் உணரும் பொருட்டு, ஆங்கில நாட்டு வரலாற்றைத் தமிழில் எழுதினர் சமயக் கருத்துக்களையும், இலக்கண விதிகளையும் காண்டிகை யுரையின் உறுப்புகள் ஆகிய வினு விடைகளின் வடிவாய்ச் சிறந்த நூல்கள் ஆக்கி அவற்றை முதன்முதல் வெளிப்படுத்தியவர் அவரே.

கால்டுவெல் அத்தியட்ச குரு பெரிய ஆராய்ச்சியாளர். திராவிட மொழிகளின் ஒப்புமை இலக்கணம் அவருக்கு என்றும் அழியாப் பெரும் புகழைத் தந்துள்ளது. திருநெல்வேலி மாவட்ட வரலாறும், திருநெல்வேலி கிறிஸ்தவத் திருநெறி கழகங்களின் வரலாறும் அவர் எழுதியுள்ளார். தமிழ் நாட்டின் பண்டை வரலாற்றைத் தெரிந்து கொள்ள மிகவும் ஆர்வமுற்று ஆங்காங்கு இடிந்து பழுதுற்ற பட்டினங்கள், கோட்டை கொத்தளங்கள், கோபுரங்கள், முதுமக்கட்டாழிகள் முதலியவற்றைத் துருவி ஆராய்ந்து குறிப்புகள் வரைந்தார் தமிழ்த் தொண்டு செய்த ஐரோப்பிய கிறிஸ்தவர் இன்னும் பலர் உளர். இன்னோரன்னோரால் இரு நாட்டினரும் பெரும் பயன் எய்தினர்.

தமிழ்க் கிறிஸ்தவப் புலவர்களில் காலத்தால் முந்தியவர் வேதநாயக சாஸ்திரியார். இவர் இசைத் தமிழ்ப் பெரும் புலவர். தஞ்சைச் சரபோஜி மன்னர் அவைக்களத்தில் பெரும் புகழ் பெற்றவர். இறைவர்க்கு எக்காலமும் பாடல் தொண்டு செய்தவர். மன்னர், செல்வர் முதலியோர்பால் எவ்வகைப் பரிசும் வரிசையும் வேண்டாதவர் அக்காலத்தில் தெலுங்கு மொழியில் பேரிசைப் புலவராய் விளங்கிய தியாகராஜ சுவாமிகள் பாடிய மெட்டுக்களில் எல்லாம் இவர் தமிழ் இசைப் பாட்டுகள் இசைத்துள்ளார். அவர் பாடியுள்ள ஞானபத கீர்த்தனைகட்கு ஒப்பும் உயர்வும் இல்லை. சிறியனவும், பெரியனவுமாக இரு நூறு நூல்கள் அவர் செய்துள்ளார். அவை கற்றூர்க்கும், மற்றூர்க்கும் பெரிதும்

பயன்படுவன. பற்பல பதிகங்கள் அடங்கிய ஜெபமாலை என்னும் பனுவல் கிறிஸ்தவர் நடுவே வழங்கி வருகின்றது. அவர் பாடிய பெத்லேகங் நறவஞ்சி திருக்குற்றாலக் குறவஞ்சியை ஒரு படி விஞ்சியுள்ளது.

அந்தோணிக்குட்டி அண்ணாவியார் என்னும் பாவலர் தாயுமான சுவாமிகள் பாடல் போன்ற மிகவும் உருக்கமுள்ள பன்னூறு பாடல்களும், பதிகங்களும், வண்ணங்களும் பாடியுள்ளார்.

மாயூரம் வேதநாயகம்பிள்ளையை அறியாத தமிழ்ப் புலவர் எவரும் இரார். அவர் பாடிய சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளும், நீதி நூலும், பெண்மதி மாலையும் மிகவும் பாராட்டத் தக்கவை. அவரே தமிழில் முதன் முதல் நாவல் எழுதியவர். காப்பியப் புனைவுகளும், நகைச்சுவையும், இனிய பழமொழிகளும் இயையப் பற்பல அரிய நீதிகளை அமைத்து எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் அவர் இயற்றிய பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் அந்த முதல் நாவல் இன்றும் முதன்மையான நாவலாகவே விளங்குகின்றது.

கிறிஸ்தவர் திருமறை பூர்வ சுருதி, உத்தர சுருதி என்னும் இரு பெருங் காண்டங்களும், அறுபத்தாறு ஆகமங்களும், பன்னூறு அதிகாரங்களும் அடங்கிய மிகப் பெரிய நூல். அது முழுவதும் திருவாக்குப் புராணம் என்னும் பெயரால் பெருங் காப்பியமாக இயற்றப்பட்டுள்ளது. உத்தர சுருதி மட்டும் சுவிசேட புராணம் என்னும் பெயரால் தனிக்காப்பியமாகவும் வகுக்கப்பட்டுள்ளது. திருமறை முழுவதையும் சாயர்புரத்தை யடுத்த புளியங்காடு என்னும் ஊரிலுள்ள வேதமாணிக்க நாடார் என்பவர் வேதப்பொருள் அம்மானை என்ற பெயரோடு பாடியிருக்கிறார்.

ஆங்கிலத்தில் பத்தி நெறியை விளக்கிக் காட்டும் 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' என்னும் அரிய உரைநடை நூல் ஒன்று உளது. அது உலகப் பெரும் புகழ் பெற்றது. அதனைப் பவுல் ஐயர் என்பவர் 'மோட்சப் பிரயாணம்' எனத்

தமிழில் மொழி பெயர்த்தார். ஸ்ரீவைகுண்டத்தை யடுத்த **ஆழ்வார்தோப்பு** என்னுமூர் கிராம முனிசிபாயிருந்த **சுவீகர நாடார்** என்பவர் அதனை '**முத்திவழி அம்மானை**' எனப் பாடினார். **கிருஷ்ண பிள்ளை** என்னும் புலவர் '**இரக்ஷணிய யாத்திரிகம்**' என்னும் சிறப்புள்ள பெருங் காப்பியமாக அதனைச் செய்து முடித்தார். கிருஷ்ணபிள்ளை இயற்றிய '**இரக்ஷணிய மனோகரம்**' என்னும் பனுவல் இனிமையும், உருக்கமும், பத்திச்சுவையும் நிரம்பியுள்ளது,

இந்தியர்களில் முதன் முதல் அத்தியட்ச குரு பட்டம் பெற்றவர் **வீ. எஸ். அசரியா** என்னும் பெரியார். அவருடன் பிறந்த அண்ணனர் **எஸ். வீ. தாமஸ் நாடார்** என்பார், தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், கணிதம் என்னும் நான்கு கலைகளில் எம். ஏ. பட்டம் பெற்றவர். அவர் ஆங்கிலப் புலவராகிய மில்டன் என்பார் இயற்றிய '**பாரடைஸ் லாஸ்ட்**' என்னும் பெருங் காப்பியத்தைப் '**பூங்காவனப் பிரளயம்**' என்னும் பெயரால் தமிழில் மொழிபெயர்த்துப் பாடினர். அதன் வழியாகவே முதுபெரும் புலவர் **வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார்** அவர்கள் '**சுவர்க்க நீக்கம்**' என்னும் காப்பியம் இயற்றியுள்ளார்கள்.

இவையன்றி, திருமறை வரலாறுகளைச் சார்ந்து உலகப் படைப்பு, ஊழி வெள்ளம், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, இஸ்ரவேல், யோசேப்பு, மோசே, சிம்சோன், ரூத்து, சாமுவேல், தாவீது, சாலோமோன், தானியேல், எலியா, யோபு என்னும் பெயரால் தீர்க்கதரிசிகள், அரசர்கள், பெரியோர்கள் ஆகியோர் வரலாறுகள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு புலவர்களால் இசைப் பாட்டுக்களாகவும், நாடகங்களாகவும் இயற்றப் பெற்றுள்ளன. திருவாங்கூர் சமஸ்தானம், இலங்கை, யாழ்ப்பாணம் முதலான இடங்களில் வாழ்ந்த கிறிஸ்தவப் புலவர்களும் இம்முயற்சியிலும் தொண்டிலும் பங்கு பெற்றனர். நாகர்கோவிலில் வாழ்ந்த புலவர் ஒருவர் இராமாயணத்தைப் பின்பற்றி '**கிறிஸ்தாயனம்**' என்னும் பெருங்காப்பியம்

செய்தார். தமிழ்நாட்டில் கிறிஸ்தவர் இயற்றிய ஆயிரக் கணக்கான இசைப் பாட்டுக்கள் — கீர்த்தனைகள் வழங்கு கின்றன.

சென்னையில் நிறுவியுள்ள கிறிஸ்தவ இலக்கியக் கழகமும், திருமறை வெளியீட்டுக் கழகமும் எண்ணிறந்த உரைநடை நூல்கள் வெளியிடுகின்றன. வெவ்வேறு இடங்களிலுள்ள கிறிஸ்தவர் நூற்றுக்கணக்கான திங்கள் இதழ்கள் வெளியிடுகின்றனர்.

செய்யுள் நூல்களிலும் உரைநடை நூல்களே பொதுமக்கட்குப் பெரும் பயன் அளிப்பவை என்பது ஆதி முதலே கிறிஸ்தவப் பெரியோர் கருத்து. **யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர்** அவர்களும் இக்கருத்தே கொண் டிருந்தார்கள். பெரிய புராணம், திருவிளையாடற் புரா ணம் முதலான பெருங்காப்பியங்களை அவர் தாமே உரை நடையில் வரைந்துள்ளார்கள். அவர்கள் உரைநடை அக்காலத்திற்கேற்ப எளிமையும், தூய்மையும், தெளிவும் அமைந்துள்ளது. போப்பையர் மேற்கொண்ட வினு விடை முறையை அவர்களும் மேற்கொண்டு சைவ வினு விடை, இலக்கண வினு விடை நூல்களும் அரிய பாடப் புத்தகங்களும் அவர்கள் இயற்றினார்கள். இது காலை அவரைப் பின்பற்றியே திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் இக்காலத்திற் கேற்பத் தனித் தமிழ் உரைநடைக்குப் பெருமதிப்பு வழங்கி, அதனை மிகுதியும் வளர்த்து வருகின்றனர். இவர் தமிழ் மொழிக்குப் புத்துயிர் அளித்தவர் ஆவர்.

குறிப்புரை

நெறி — வழி, மார்க்கம்; ஈண்டு — இங்கு; துணை — அளவு; சமய குரவர் — சமய ஆசாரியர்; அஞ்ஞானம் — அறிவின்மை; புராணேதிகாசம் — புராணம், இதிகாசம்; கட்டுக்கதை — கற்பனைக் கதை; பறை சாற்றினர் — பிரசாரம் செய்தனர்; வியப்பு — ஆச்சரியம்; பனுவல்கள் — நூல்கள்; திருநெறித்தொண்டு — சமயத் தொண்டு; ஆற்றுதல் — செய்தல்; முதுமக்கட்டாழிகள் — இறந்த வீரர்களை இட்டு

வைக்கும் பானை வகை ; பரிசு — கொடை ; வரிசை — அரசர் முதலியோரால் பெறும் சிறப்பு ; வேண்டாதவர் — விரும்பாதவர் ; விஞ்சியுள்ளது — மிகுந்துள்ளது : காப்பியப் புனைவு — காப்பிய அமைப்பு : திருமறை — வேதம் ; பூர்வ சுருதி — பழைய ஏற்பாடு ; உத்தர சுருதி — புதிய ஏற்பாடு ; ஆகமம் — நூல்.

பயிற்சி வினாக்கள்

1. *தமிழ் நாட்டில் நிலவிய சமயங்கள் யாவை ?*

2. *தமிழ்த் தொண்டு செய்த சமயப் பெரியார் சிலர் பெயர்களைக் குறிப்பிடுக.*

3. *சீரிய கிறிஸ்தவர்களைப்பற்றி என்ன தெரியும் ?*

4. *கிறிஸ்தவர்கள் தமிழ் மொழி கற்பதற்கு ஏற்பட்ட தடைகள் யாவை ?*

5. *வீரமாமுனிவர் தமிழ்த் தொண்டினைக் குறிப்பிடுக*

6. *போப்பையர் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் செய்த தொண்டுகள் யாவை ?*

7. *கால்டுவெல் அத்தியட்சரின் ஆராய்ச்சித் திறனைக் குறிப்பிடுக.*

8. *வேதநாயக சாஸ்திரியாரின் இசைப் புலமையை ஆராய்க.*

9. *தாயுமானவர் பாடலையொத்த பாடல்களைப் பாடிய கிறிஸ்தவப் புலவர் யார் ? அவர் பாடியன யாவை ?*

10. *மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் தமிழ்ப் பணிகளை எழுதுக.*

11. *திருவாக்குப் புராணம், சுவிசேட புராணம், வேதப் பொருள் அம்மானை — இவை கூறுவன யாவை ? விளக்குக.*

12. *'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' என்னும் ஆங்கில நூலை ஆதாரமாகக் கொண்டு எழுந்த தமிழ் நூல்கள் எவை ? ஆசிரியர் யாவர் ?*

13. கிருஷ்ண பிள்ளை இயற்றிய தமிழ் நூல்களைக் குறிப்பிடுக.

14. 'சுவர்க்க நீக்கம்' என்பது யாது? அதை இயற்ற ஆதாரமாயிருந்த நூல் எது? ஆசிரியர் யார்?

15. 'கிறிஸ்தாயனம்' என்னும் நூல் எதுபற்றி எழுந்தது? ஆசிரியர் யார்?

16. கிறிஸ்தவர்களைப் பின்பற்றி நல்லூர் ஆறுமுக நாவலர், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் முதலியோர் செய்துள்ள தமிழ்ப் பணிகள் யாவை?

4. அன்னைக்கு

(டாக்டர் மு. வரதராசனார், எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச். டி.)

அன்புள்ள அம்மா!

நான் எதிர்பார்த்ததற்கு மாறாகவே, உன் பதில் வந்தது. இவ்வளவு காலம் உன்னோடு பழகியிருந்தும் உன் மனத்தைத் தெரிந்து கொள்ளாதது உண்மையாகவே என்னுடைய குறைதான். இருளிலே கிடந்த எனக்கு ஒளி காட்டுவதுபோல் இருக்கின்றன உன்னுடைய அருமைக் கருத்துக்கள். அவற்றைப் படித்து உணர்ந்தபின், என் அறிவிலேயே ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டு விட்டது. ஏன்? என்னுடைய மூட நம்பிக்கையே தொலைந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

கல்லூரிகளில் கல்லாதவர்களிடத்திலும், நாகரிகம் இல்லாதவர்களிடத்திலும் மூட நம்பிக்கை வாழ்வதாக நான் இதுவரையில் எண்ணிக்கொண்டிருந்தேன். பல்லி சொல்வதைக் கேட்டுப் பதைப்பவர்களையும், பூனை குறுக்கே வரக்கண்டு கலங்குகிறவர்களையும் மட்டுமே மூட நம்பிக்கை உடையவர்கள் என எண்ணி வந்தேன்; இப்போதுதான் உண்மை தெரிந்து கொண்டேன். அடுக்கடுக்காக நூல்களை வாங்கிப் படித்தவர்களிடமும், பட்டமும் புகழும் பெற்றவர்களிடமும் மூட நம்பிக்கை வேறு வேறு வடிவில் வாழ்வதாக உணர்கின்றேன். கல்லாதவன் பல்லி சொல்வதை நம்பித் தன் வாழ்க்கையை அளப்பது போலவே, கற்றவன் பத்திரிகை சொல்லுவதை நம்பி ஏமாறுகின்றான். தலைமுறை தலைமுறையாக வந்த சில பழக்கங்களை வைத்துக் கொண்டு படிக்காதவன் தயங்குகின்றான். கட்சியாட்கள் சொல்லும் சில கருத்துக்களைக் கேட்டு மயங்கிப் படித்தவன் தயங்குகின்றான். அவனும் எண்ணிப் பார்த்து ஏற்றுக் கொள்வதில்லை. இவனும் அப்படித்தான் கண்மூடி வாழ்வு நடத்துகின்றான்.

அம்மா! எதையோ எழுதுகின்றேன் என்று எண்ண வேண்டாம். என்னுடைய சொந்த மூட நம்பிக்கையைத்

தான் இங்கே குறிக்கின்றேன். இந்த மூட நம்பிக்கை, இன்று பத்திரிகை படிக்கின்ற எல்லோருக்கும் பெரும்பாலும் உரியதாகவே இருக்கின்றது என்று சொல்லுவதில் தவறு உண்டா? நானும் அந்தக் கூட்டத்தில் ஒருவன்; அதனால்தான் இதுவரையிலும் அப்படி எண்ணி வந்தேன்.

"நம் நாட்டில் நடந்தது மதச்சண்டை அல்ல; இனச் சண்டை. மதம் உயர்ந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது. இனம் என்பதோ சில பழக்க வழக்கங்களையும், நிறம் முதலியவைகளையும் அடிப்படையாகக் கொண்டது. எல்லாரும் தவருக மத வேற்றுமை கூடாது கூடாது என்று அறிவுறுத்துகின்றூர்கள், அது பொருளற்ற முயற்சி. பொதுமக்கள் மதத்தின் உண்மைகள் தெரியாத நிலையில் இருக்கின்றூர்கள். அவர்கள் பழக்க வழக்கங்களின் வேற்றுமையைத்தான் பாராட்டிக்கொண்டு பிரிந்து கலகம் செய்கின்றூர்கள். அதற்கும் காரணம் ஒன்றுதான்; செல்வத்திலும் செல்வாக்கிலும் போதுமான பங்கு தங்கள் இனத்துக்கு வேண்டும் என்பதுதான்" என்று நீ எழுதிய அந்தப் பகுதியைத் தனியே கத்தரித்து எடுத்து ஒரு நல்ல அழகான அட்டையில் ஒட்டித் தொங்கவிட்டிருக்கின்றேன். அதை விடுதி மாணவர்கள் வந்து படித்துவிட்டுப் போகின்றூர்கள்.

அவர்களில் ஒருவன்—என் நண்பன் தான்—என்னை ஒரு கேள்வி கேட்டான். அவனுடைய மூட நம்பிக்கையின் ஆழம் அப்போதுதான் தெரிந்தது. "பழக்க வழக்கங்கள் இல்லாமல் மதம் என்பது என்ன?" என்று என்னைக் கேட்டான். நான் அவனைப் பார்த்து, "இங்கிலாந்தில் உள்ள கிறிஸ்தவனுடைய பழக்க வழக்கங்கள் வேறு; சீனவில் உள்ள கிறிஸ்தவனுடைய பழக்க வழக்கங்கள் வேறு; இந்தியாவில் உள்ள கிறிஸ்தவனுடைய பழக்க வழக்கங்கள் வேறு, இந்த மூவருடைய மதமும் ஒன்றே; ஆனல் அவர்கள் மூவரும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா?" என்று சொன்னேன்.

அதற்குள், பக்கத்தில் இருந்த மற்ருெரு நண்பன், " அந்த மூன்று பேரும் கிறிஸ்தவர்கள் என்பது மட்டும் உண்மையா? கிறிஸ்துவின் உயர்ந்த கொள்கைகள் அவர்களுடைய வாழ்க்கையில் உண்டா? கிறிஸ்தவராக உலகத்தில் பிறந்தவர் ஒருவரே, அவரும் சிலுவையில் மாண்டார். இப்படித்தான் அறிஞர் ஒருவர் சொல்லுகிருர் " என்று வெடிகுண்டு போல் எடுத்துச் சொன்ஞன்.

எப்படியாயினும் ஆராய்ந்து பார்த்தால், நாட்டில் நடந்தது மதச் சண்டை அல்ல என்ற முடிவுக்கு வர வேண்டும். மற்றவர்கள் சொன்னதை அப்படியே கேட்டு எண்ணுமல் ஏற்றுக்கொண்டு இதுவரையில் மதச் சண்டை என்று நம்பி வந்தோம். இப்போது உண்மை நன்ருகத் தெரிகின்றது. சமயத் துறையில் ஆராய்ச்சியும், அன்பும் உடையவர்கள் மிக மிகச் சிலரே. அந்தச் சிலர் எந்தக் காலத்திலும் கலகம் செய்வதே இல்லை. சமயம் வேறுபாடும் அவர்கள் வாழ்வுக்கும், அறிவுக்கும் தோன்றுவதே இல்லை. எங்கும் உண்மை இருப்பதாக அவர்கள் எடுத்துச் சொல்கின்ருர்கள்; எல்லோரிடமும் அன்பாக அவர்கள் பழகுகின்ருர்கள். சமய உண்மைகளை உணராதவர்களே பிணக்கும் பூசலும் வளர்க்கின்ருர்கள்.

நீ சொல்கின்றபடி ஆராய்ந்து பார்த்தால், கலகம் செய்கின்ற யாருக்கும் மதத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமே இல்லை. ஆனுல், செல்வமும் செல்வாக்கும் தேடிக்கொள்ள வேண்டும் என்ற போட்டிப் பூசல் தான் இது. நாட்டின் செல்வத்தையும், செல்வாக்கையும் பங்கிட்டுப் பிரித்துக் கொள்வதில் மக்களுக்கு உள்ள ஆசை என்று தான் இதைச் சொல்ல வேண்டும்.

ஆசை என்று ஏன் சொல்ல வேண்டும்? கடமை என்றும் சொல்லலாம் போல் தோன்றுகின்றது. பொருள் தேடும் போட்டிக்கு இடம் கொடுத்து, அதை மேன்மேலும் தூண்டி வருகின்ற உலக அமைப்பில் அதைக் கடமை என்று சொல்வதும் பொருத்தமாகத் தோன்றலாம்.

தந்தையும் நீயும் அமைதியாக இருந்து பாட்டனரின் செல்வத்தைப் பங்கிட்டுக் கொள்ளவில்லையா? அது கடமை என்று தானே எண்ணிச் செய்தீர்கள்? ஆனல், சிற்றப்பா கவலே கொண்டு, நம்பிக்கை இழந்து கலகம் செய்தார். அவருடைய ஏக்கம் அவ்வாறு ஆத்திரப்படச் செய்தது.

நான் நேற்று மாலே மண்ணடித் தெருவுக்குப் போய்த் திரும்பி வந்தபோது கண்ட ஒவ்வொரு காட்சியிலும் உன் கடிதமே நினைவுக்கு வந்தது. இரும்புப் பெட்டிக் கடைகளே வழியில் பார்த்தேன். வாங்குகிறவர்கள் யார் என்று எண்ணினேன். "பொருளில்லார்க்கு இவ் வுலகம் இல்லே" என்ற உண்மையைத் தெரிந்து கொண்ட வர்கள் அவர்கள். திருடர் கையில் அகப்படாதபடி தங்கள் செல்வத்தை இரும்புப் பெட்டிக்குள்ளே வைத்துக் காக்க விரும்புகின்றவர்கள் அவர்கள். பூட்டுக் கடைகளேப் பார்த்தேன். மாகாணங்களேத் தனித்தனியே பிரித்துக் கொண்டு தற்காப்புத் தேடிக்கொள்ளச் சில இனங்கள் பாடுபடுகின்றன. தனி மக்கள் இந்தப் பூட்டுக்களேயும் அந்த நோக்கத்தோடு தான் வாங்குகிருர்கள். பிராட்வே வழியாக வந்தபோது சில கடைகளுக்கு அமைந்திருந்த உறுதியான இரும்புக் கதவுகளேப் பார்த்தபோதும் இந்த நினேவே வந்தது. சைன பஜாரைக் கடந்து கோட்டையை நோக்கி நடந்த போது சில உயர்ந்த வன்மையான கட்டிடங்களேக் கண்டேன். நீ சென்ற ஆண்டில் வந்த போது உனக்கு அவைகளேக் காட்டினேன். நினேவு இருக்கும் என்று நம்புகின்றேன். அந்த நிதி நிலேயக் கட்டிடங்களேயும், அவற்றின் உறுதியையும் எண்ணிய போதும் உன் கடிதமே நினேவுக்கு வந்தது. செல்வத் தைத் தேடிக் காத்துக் கொள்வதில் உள்ள ஆசையை அவை காட்டுகின்றன. "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லே" என்பதை அடிப்படையாகக் கொண்டு, பிறர் மேல் நம்பிக்கை இல்லாமல், தனி மனிதர் இரும்புப் பெட்டியைத் தேடுகின்ருர். தனி வீட்டார் பூட்டை நாடு

கிருர். வியாபாரக் கம்பெனியார் உறுதியான இரும்புக் கதவை அமைக்கின்றனர்; நிதி நிலையத்தார் வன்மையான கட்டிடங்கள் எழுப்புகின்றனர். இவர்களின் முயற்சிகளுக்கெல்லாம் அடிப்படையில், தற்காப்பும் பிறர்மேல் நம்பிக்கை இன்மையும் காணலாம். இந்த அடிப்படைகளைக் கொண்டே தம் இனத்தின் ஆக்கமும், பிற இனத்தார் மேல் நம்பிக்கை இன்மையும் காரணமாகக் கொண்டே இனங்கள் சண்டையிடுகின்றன. பெட்டியும், பூட்டும், கதவும், கட்டிடமும் நாடுவது போலவே அரசியல் அமைப்பை நாடுகின்றன. முன் சொன்ன நான்குக்கும் இடம் கொடுத்த உலகம் ஐந்தாவதையும் காண்கின்றது. வேறு வழி உண்டா? "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று திருவள்ளுவர் எழுதியபோது தனி மனிதரையும் குடும்பத்தாரையும் எண்ணியிருக்கலாம். ஆனல், இப்படி மக்கள் பலவாறு பிரிந்து போரிட்டு நாட்டைக் குழப்புவதை எண்ணியிருப்பாரோ?

அம்மா! உண்மைக்காரணம் விளங்கி விட்டதே தவிர, இனி என்ன வழி என்று தெளிவாகவில்லை. பழக்க வழக்கங்களை ஒன்று படுத்திஞல் ஒற்றுமை ஏற்படும் என்று இன்று காலையில் எனக்குத் தோன்றியது. கடிதம் எழுதும் போதுதான் அந்த வழியிலும் குறை இருப்பது தெரிந்தது. பழக்க வழக்கங்களை ஒன்று படுத்துவதற்கு வழி என்ன? அதற்கு உரிய வழி தெரியவில்லையே. பெரிய தலைவர்கள் இதுவரையில் செய்ய முடியாததை நாம் இன்று செய்து விட முடியுமா? ஒன்று பட்டால் வாழலாம் என்ற நம்பிக்கை ஒன்றே இருந்த அந்தக் காலத்தில் செய்ய முடியாததைப் பிரிவு பட்டால் தான் வாழலாம் என்ற உணர்ச்சியும் தலையெடுத்துள்ள இன்று செய்ய முடியுமா?

மன்னிக்க வேண்டும். எனக்கு ஒரு துணிச்சலான எண்ணம் தோன்றுகின்றது. அந்தத் திருக்குறளை மாற்றி அமைத்தால்—மாற்றி எண்ணும் காலம் வந்தால்—? அப்போது எதுவும் செய்ய முடியும் அல்லவா?

அதாவது "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று இருப்பதால் தானே பெட்டி, பூட்டு, கதவு, கட்டிடம் என்பன வளர்ந்து இனங்களின் ஆட்சிப் பொறுப்பு வரையில் பொருள் தேடும் போட்டி பெருகியுள்ளது. இத்தனை குற்றங்களுக்கும் ஒரே கழுவாய் என் கனவில் தோன்றுகின்றது.

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்னும் நிலைமை போக வேண்டும். பொருள் பற்றிய பூசல் உலக அமைப்பில் இருக்கக்கூடாது. "பொருளில்லார் இவ்வுலகில் இல்லை" என்று மாறிய நிலைமை வந்துவிட வேண்டும். அப்போது அந்தத் தொல்லைகளுக்கு இடம் உண்டா?

எல்லாக் கட்சிகளும், எல்லா அறிஞர்களும் சேர்ந்து இதற்காகப் பாடுபடக்கூடாதா? இதிலும் ஒருவர் மேல் ஒருவர்க்கு நம்பிக்கை இல்லையா? மதச் சண்டை, இனச் சண்டை என்று சொல்லி மூட நம்பிக்கையையும் வீண் வெறியையும் வளர்ப்பதை விட, நாட்டை விட்டு வறுமையைத் துரத்துமாறு ஆக்க வேலையைச் செய்யக்கூடாதா?

அன்புள்ள மகன்,
எழில்

குறிப்புரை

புரட்சி — புத்துணர்ச்சி; கண்மூடி வாழ்வு — அறிவில்லாத வாழ்க்கை; இனம் — சாதி; சமயத்துறை — சமயக் கொள்கை; பிணக்கு — சிறு சண்டை; பூசல் — பெருஞ் சண்டை; செல்வாக்கு — புகழ்; ஏக்கம் — பேராசை; இனங்கள் — கூட்டங்கள்; கழுவாய் — மாற்று; தொல்லை — துன்பம்; வெறி — பகை; ஆக்கவேலை — நன்மை தரும் முயற்சி.

பயிற்சி வினாக்கள்

1. *மூட நம்பிக்கையுள்ளவர்கள் கல்லாதவர்களுள் மட்டுமன்றி கற்றவர்களுக்குள்ளு முள்ளனர் என்பதை விளக்குக.*

2. "இந்த மூட நம்பிக்கை பத்திரிகை படிக்கின்ற எல்லாருக்கும் பெரும்பாலும் உரியதாக இருக்கிறது." — எந்த மூட நம்பிக்கை? அதனை எதனால் அறிகிறோம்?

3. 'அதை விடுதி மாணவர் வந்து படித்து விட்டுப் போகிறார்கள்' — இடஞ் சுட்டி விளக்குக.

4. "பழக்க வழக்கங்கள் இல்லாமல் மதமென்பது என்ன" என்ற கேள்விக்கு இறுக்கப்பட்ட விடை யாது? பொருந்துமாறு காட்டுக.

5. சமய உணர்வால் சண்டை ஏற்படாது என்பது எங்ஙனம் விளக்கப்படுகிறது?

6. நாட்டின் செல்வத்தையும், செல்வாக்கையும் பங்கிட்டுப் பிரித்துக் கொள்வதில் மக்களுக்குரிய ஆசை என்பதை விட, கடமை என்று கூறுவது இக்காலத்திற்குப் பொருந்துமாறு எங்ஙனம்?

7. "பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்ற உண்மையைத் தெரிந்து கொண்டவர்கள் யாவர்? எங்ஙனம்?

8. செல்வத்தைத் தேடிக் காத்துக் கொள்வதில் உள்ள ஆசையை எவை காட்டுகின்றன? இதனால் அறியப் படுவது யாது?

9. 'ஒன்று பட்டால் வாழ்வாம்' என்ற உண்மை போய் 'பிரிந்து பட்டால் வாழ்வாம்' என்ற உணர்ச்சி நாட்டில் தோன்றியிருப்பதற்குச் சான்றுகள் தருக.

10. "பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" — இவ்வாறு கூறியவர் யார்? எதனால் அவர் இதனைக் கூறியிருக்கக் கூடும்? இதனை ஆசிரியர் எங்ஙனம் மாற்றிக் கூற விரும்புகிறார்? ஏன்?

---

5. பேரூரின் பெருஞ்சிறப்பு

[தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் எம். ஏ.]

சமீபத்தில் நான் கோயம்புத்தூர்த் தமிழ் விழாவிற்குச் சென்றிருந்த போது, ஒரு நண்பர், "பக்கத்தில் உள்ள பேரூருக்கு வருகிறீர்களா?" என்று என்னைக் கூப்பிட்டார். கூப்பிட்டவர் நல்லதொரு காரும் வைத்திருந்தார். உப்புச் சப்பில்லாதிருந்த அந்தத் தமிழ் விழா நிகழ்ச்சிகளைவிட கார் சவாரி கொஞ்சம் குஷாலாய் இருக்குமல்லவா என நினைத்துச் "சரி" என்றேன். காரிலும் போய் ஏறிக்கொண்டேன். கோயம்புத்தூருக்கு மேற்கே மூன்று மைல் தூரத்திலுள்ள பேரூர் என்னும் மேலைச் சிதம்பரம் போய்ச் சேர்ந்தோம். அங்குள்ள பட்டீசர் கோயிலின் கோபுரவாசலுக்குத் தெற்கே கொண்டு போய்க் காரை நிறுத்தினோம். காரை விட்டு இறங்கியதும் ஜட்கா வண்டி நிலையத்தையும், அதை யொட்டிக் கல்லால் கட்டிய மேடையையும் பார்த்தோம். அந்த மேடை மீது ஒரு புளியமரம் பெரிதாக வளர்ந்திருந்தது. பழமையான மரந்தானென்றும் தெரிந்தது. "ஸார், உங்களுக்குத் தெரியுமா இந்தப் புளியைப்பற்றி? இதுதான்–ஸார்–பிறவாப்புளி" என்றார் நண்பர். "அதென்ன பிறவாப்புளி? அது தான் பிறந்து, வளர்ந்து, பூத்துக் காய்த்துக் கொண்டு நிற்கிறதே! அதை ஏன் பிறவாப்புளி என்கிறீர்கள்?" என்றேன். நண்பரோ, "உண்மைதான் ஸார் — இந்த மரம் பூக்கும், காய்க்கும், பழுக்கவும் செய்யும்; ஆனால் இந்த மரத்தின் பழத்தினின்றும் எடுத்த விதைகளை முளைக்கப் போட்டால் முளைப்பதே இல்லை. இந்த மரத்துக்குப் பிறவி, இப்பிறவியோடு சரி; இனிப் பிறவியே கிடையாது" என்று விளக்க ஆரம்பித்தார்.

"பிறவாப்புளி இங்கிருக்கிறதே! இறவாப் பொருள் ஏதேனும் உண்டோ?" என்று ஒரு கேள்வியைப் போட்டேன் நான். "உண்டு ஸார், உண்டு. அதுவும் இந்தத்

தலத்திலேயே இருக்கிறது ; வாருங்கள் " என்று நண்பர் அந்தப் பெரிய கோயிலுக்கு வடக்கே காஞ்சிமா நதியின் தென்கரையில் உள்ள **வடகயிலாயம்** என்னும் சிறிய கோயிலுக்குள் கூட்டிச்சென்றார். அங்கே அந்தக் கோயிலின் வெளி முகப்பில் ஒரு பனை நீண்டு வளர்ந்து நின்று கொண்டிருந்தது. எத்தனை வருஷ காலமாக அது அங்கே இருக்கிறது என்று சொல்லக் கூடியவர்கள் இந்தத் தலைமுறையில் அங்கே இல்லையாம். இதற்கு அழிவே கிடையாதாம். மேலும் இந்த இறவாப் பனை மக்கள் நோய் தீர்க்கும் கற்பகமாகவும், இருந்து வருகிறதாம். இந்தப் பனையின் மேற்பட்டையைக் கஷாயம் வைத்துக் குடித்தால் தசை சம்பந்தமான எல்லா வியாதிகளும் நீங்குமாம். "இப்படிப் பிறவாப் புளியும், இறவாப் பனையும் இருந்துகொண்டு பேரூரின் பெருஞ்சிறப்பை வளர்த்துக் கொண்டிருக்கின்றன " என்றெல்லாம் நண்பர் கூறினர்.

பிறவாப் புளியையும், இறவாப் பனையையும் பார்த்து விட்டு—ஏன் பார்த்துவிட்டு ?—தரிசித்து வணங்கிவிட்டு— அந்தப் பட்டிநாதர் கோயிலுக்குள்ளேயே நுழைந்தோம். கோயிலின் மகா மண்டபத்தையும், அர்த்த மண்டபத்தையும், கர்ப்பக் கிருகத்தையும் பார்த்தால் சோழர்கள் கட்டிய கோயிலாகத் தெரிந்தது. விசாரித்ததில் கி. பி. பதினேராம் நூற்றுண்டின் தொடக்கத்திலே **விஜயாலய சோழன்** கால்வழியினனை **முதலாம் இராஜேந்திரன்** கட்டினன் என்று தெரிந்தது. இந்த இராஜேந்திரன் தான் கி. பி. 1013 முதல் 1015 வரை சோழ சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்த **கங்கை கொண்ட சோழன்**. இவன் அரியணை ஏறி இருபத்தாறு ஆண்டுகள் கழிந்த பின்னரே இக்கோயில் திருப்பணியை ஆரம்பித்திருக்கிறன். அர்த்த மண்டபத்தையும், மகா மண்டபத்தையும் கட்டி முடிக்க மூன்று ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. மகா மண்டபம் கட்ட, விழுமிய பட்டன், தனபாலன், கனபாட்டி அரசாண்டார், வீரசேகர தேவன், அகமுடையான் தேவி, சோழப்பிச்சன்,

அதிகமான் முதலியோர் உதவி இருக்கிறார்கள் என்று அங்குள்ள கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இந்த மண்டபங்களைக் கடந்து கர்ப்பக் கிருகத்துக்கே சென்றோம். அங்கே கோயில் கொண்டிருக்கும் சுயம்பு லிங்கத்திற்குப் பட்டீசர், பட்டி நாதர், கோட்டீசர் என்றெல்லாம் பெயர்கள் வழங்குகின்றன. அன்றொரு நாள் காம தேனுவின் கன்று, இந்தப் பேரூர்ப் பகுதியான பிப்பிலா ரண்யத்தில் துள்ளி விளையாடியபோது, அதன் முன் கால்கள் ஒரு மண் புற்றுக்குள் சிக்கிக்கொள்ள, அந்தக் கன்றின் அலறல் கேட்டு அதனை விடுவிக்க வந்த காம தேனு தன் கொம்பால் அந்தப் புற்றை முட்ட, அந்தப் புற்றிடத்தே முளைத்திருந்த சிவலிங்கத்தின் தலையில் காம தேனுவின் கொம்பு பட்டு இரத்தம் பீறிட்டது என்றும், அதைக் கண்டு காமதேனு வருந்த, அங்கே சிவபெருமான் காமதேனுவுக்குப் பிரத்தியக்ஷமாகக் காட்சி கொடுத்தார் என்றும் இவ்வூர்த் தலபுராணம் கூறுகிறது. புராண வரலாறு எப்படி இருந்தாலும் இருக்கட்டும். கன்றினது காற்குளம்பின் சுவடுகளும், பசுவின் நுனிக் கொம்பின் சுவடும், இன்னும் சிவலிங்க உருவின் சிரசில் அடையாள மாக இருக்கின்றன. காமதேனு அங்கே பட்டியிட்டு நோற்ற காரணத்தால் பட்டீசர் என்றும், அதன் நுனிக் கொம்பின் சுவட்டையே அதன் பக்திக்கு அடையாளமாகக் கொண்டதால் கோட்டீசர் என்றும் அவ்விடத்து இறைவன் பெயர் பெற்றுள்ளார் என்று தெரிகிறது. தழும் பேறிய அந்தத் திருவுருவைக் கண்டு தரிசித்து நாத்தழும் பேற அவன் புகழ் பாடி மகிழ்ந்தால் பிறவாநெறி பெறலாம் என்று கூறுவதில் ஒரு வியப்பும் இல்லையல்லவா ?

பட்டீசரை வணங்கிய பின் பச்சைநாயகியையும் வணங்கினோம். இரண்டு கோவிலுக்கும் இடையேயுள்ள கல்யாண மண்டபத்திற்குள்ளும் நுழைந்து அங்கே இருப்புக் கிராதிகளுக்குள்ளே சிறை செய்து வைத்திருக்கும்

உற்சவ மூர்த்திகளையும் கண்டு தரிசித்தோம். இதன்பின் கிழக்கே பார்க்கத் திரும்பினோம். ஒரு சிறு வாயில் வழியாக ஒரு பெரிய மண்டபத்துக்குள்ளேயே நுழைந்தோம். அதுதான் வெள்ளி மன்றம் என்றார் நண்பர். அங்கே தான் ஆடவல்லான் என்ற பெயரோடு ஆனந்த நடராஜர் கோயில் கொண்டிருக்கிறார். அப்பெருமானை இன்று அலங்கரித்திருக்கிற முறை அந்த அற்புத மூர்த்தியை ஏதோ கேலி செய்வதாகவே இருக்கிறது. இரண்டு காதிலும் சுளகு அகலத்தில் வெள்ளியால் காதணி செய்து வைத்திருக்கிறார்கள். இது அந்த அற்புத மூர்த்தியின் அழகை அடியோடு கெடுக்கிறது. மேலும் என்ன என்ன அலங்காரங்களோ செய்து அந்த மூர்த்தியை 'அவனிருக்கும்' வண்ணத்திலேயே கண்டு வணங்க வகையில்லாது செய்திருக்கிறார்கள். பக்கத்திலிருந்த சிவகாமி தேவியையும் இத்தனை கூத்துக்கும் ஆளாக்கி இருக்கிறார்கள்.

இந்த ஆடவல்லானையும், அருட் சக்தியையும், மானஸீகமாகவே கண்டு வணங்கி விட்டு வெளியே வந்தால் இத்தனை நேரம் சுற்றியதன் பயனும் இத்தனை சிரமம் எடுத்து இங்கே வந்ததன் பயனும் கைவரப் பெறுகிறோம். ஆடவல்லானின் மூலத்தானத்துக்கு முன்னுள்ள சபா மண்டபம் நிரம்பவும் அழகு வாய்ந்தது. அந்த மண்டபம் 94 அடி நீளமும், 38 அடி அகலமும், 16 அடி உயரமும் உடையது. 36 தூண்கள் அந்த மண்டபத்தைத் தாங்கி நிற்கின்றன. முன் வரிசையில் நிற்கும் எட்டுத் தூண்களிலும் எட்டு அற்புதமான உருவங்கள், சிற்பக் கலையின் வெற்றிகள் அழகு செய்கின்றன. ஆகு வாகனத்தில் அமர்ந்துள்ள ஐங்கரன் ஒரு தூணில் என்றால் வீறுமுக மயில் மீது விளங்கும் ஆறுமுகன் எதிர்த்த தூணில், கனல் உமிழ் கண்ணோடு காட்சி கொடுக்கும் அக்கினி வீரபத்திரனும், அகோர வீரபத்திரனும் இரண்டு தூணை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். யானையை உரித்துத் தமது திருமேனியில் போர்வையாகப் போர்த்திக்கொண்ட கிருத்தி

வாஸன் ஒரு தூணில் என்ருல், தாருகா வனத்து முனிவர் பத்தினிகளின் கற்பு நிலையைச் சோதிக்க நிர்வாணமாய் மானும் மழுவும், இளமதியும் திருவோடும் சிறந்திலங்கப் பிக்ஷாடனக் கோலம் தாங்கிய பிஞ்ஞகன் ஒரு தூணிலே காட்சி கொடுக்கிருன். நடனக் கலையில் இந்த அகிலத்தி லேயே தனக்கு நிகர் ஒருவரும் இல்லை என்னும் அகந்தை யுடன் ஆடல் புரிந்த அந்த ஆலங்காட்டுக் காளியின் கோரச் சிலைக்கு எதிரிலேயே அவள் கர்வம் அடக்கத் தாளொன்ருல் பாதாளம் ஊடுருவ, மற்றைத் தாளொன் ருல் அண்டம் கடந்து நிற்கும் அந்த அற்புத ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியும் நிற்கிருன். இந்தச் சிலைகளில் ஒவ் வொன்றும் ஆறடி உயரமும், மூன்றடி அகலமும் உடைய தாய் ஒரே கல்லில் சிற்றுளி வேலையின் நயமெல்லாம் தெரி யச் செதுக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சிற்பங்களைச் செதுக்கியவன் கம்மணச்சாரி என்ற சிற்பி என்றும், இந்த அற்புத மண்டபத்தைக் கட்டி அங்கே இத்தகைய அதி அற்புதமான சிற்ப உருவங்களையும் நிருமாணித்தவர் கி. பி. 1625 முதல் 1659 வரை மதுரையில் அரசாண்ட திருமலை நாயக்கருடைய சகோதரரான அளகாத்திரி நாயக்கர் என்றும் வரலாறு கூறுகிறது.

இந்தச் சிற்ப உருவங்கள் எட்டையும் பார்ப்பதற் கென்றே கோயம்புத்தூருக்குப் போகலாம். அங்கிருந்து காரிலோ, வண்டியிலோ ஏறிப் பேரூர் செல்லலாம். பட்டீ சுவரரையும், பச்சைநாயகியையும் எத்தனை முறை வேண்டுமானுலும் வலம் வரலாம். நாம் மாத்திரம் என்ன, அன்று அந்தப் பெர்கூஸன் துரை ஆருயிரம் மைல் கடல் கடந்தல்லவா இங்கு வந்து இந்தச் சிற்ப உருவங்களைப் பார்த்திருக்கிருர். பார்த்ததோடு மட்டுமல்லாமல், 'பேரூர் வெள்ளி மன்றத்துச் சிற்ப உருவங்கள் சிற்பக்கலை மலின தசை அடைந்த காலத்தில் உருவானவையல்ல; அக்கலை உச்ச நிலையில் உயர்ந்து விளங்கிய உன்னத காலத்தில் உருவானவையே' என்று 'சர்டிபிகேட்' கொடுத்து விட்டுப் போயிருக்கிருர்.

'பிறவா யாக்கைப் பெரியோன்' என்று சிவனை நாம் பாராட்டுகிறோம். அந்தப் பிறவாப் பெருமையுடைய இறைவனது மூர்த்தங்கள் இறவாப் புகழோடு இன்று அங்கே காட்சி கொடுக்கின்றன. பேரூர் பிக்ஷாடன மூர்த்தி வெகு அழகான உருவம். தாருகாவனத்து முனிவர்களால் ஏவப்பட்ட மானுக்கும் இறைவன் புல்லருத்துவது எவ்வளவு வாய்ப்பாக அமைந்திருக்கிறது! மானும் எப்படித் தலையைத் திருப்பிக்கொண்டு அந்தப் புல்லைக் கடிக்கத் துடிக்கிறது; அந்தச் சிலையைப் பார்க்கும் நமக்கு, அந்த ஒரு பகுதியிலேயே மனம் அப்படியே லயித்து விடுகிறது. ஒரு வளைவோடு கூடிய வலது கால், துவண்டு நிற்கும் அந்த இடை, கருணையோடு சாய்ந்திருக்கும் தலை எல்லாம் ஏதோ கவிதையில் காணுகின்றோமே 'லளிதம்'— அந்த லளிதம் — அந்த 'ரிதும்' என்பதை அல்லவா கல்லில் உருவாக்கி விடுகிறது? தலையணி, மார்பணி, இடையணி, காலணி எல்லாம் அழகுக்கு அழகு செய்கின்றன. ஆம்! தாருகா வனத்து ரிஷி பத்தினிகளும் இந்த ஆணழகனைக் கண்டு தானே நிறையழிந்தார்கள்? அது தானே அன்றைக் கதை!

இந்த மூர்த்திக்கு எதிர்த் திசையில் இருப்பவர் தாம் கஜஸம்ஹார மூர்த்தி. தாருகா வனத்து முனிவர்கள் ஏவிய அந்த யானையைச் சங்கரித்து அதன் தோலையே போர்வையாகப் போர்த்திக் கொண்டு நிற்கின்ற நிலையில் சிலை அமைந்துள்ளது. சங்கார மூர்த்தியின் காலடியில் உயிரிழந்த யானையின் தலை மிதிபடுகிறது. அந்தத் தும்பிக்கை, அந்த யானையின் அலறலோடு கூடிய வாய், ஒற்றைக்காலில் நின்று மற்றொரு காலைத் தூக்கி மடித்திருக்கும் நிலையிலே, ஒரு சுழற்சி, எட்டுக் கைகளாலும் அந்த யானைத் தோலை ஏதோ 'பாரசூட்' விரிப்பது போல விரித்துப் போர்த்தியிருக்கும் நேர்த்தி எல்லாம் பார்த்துப் பார்த்து அநுபவிக்கத் தக்கவை. மனிதனைப் பிறவாமல் காக்கும் திறமையுடையவன்தான் இறைவன். பிறவாத யாக்கையுடைய பெருமகன்தான் அவன். என்றாலும் அவ

னுக்கும் அவனுடைய மூர்த்தங்களுக்கும் இறவாப் புகழ் அளிக்கக் கூடியவன் மனிதனுகத்தான் இருந்திருக்கிருன். அந்த மனிதனேயே கலேஞன், சிற்பி என்கிறேம் நாம்.

குறிப்புரை

கார் — பொறி வண்டி; உப்புச் சப்பில்லாத — பயனில்லாத; குஷாலாய் — மகிழ்ச்சியோடு; தலம் — ஊர்; கற்பகம் — தெய்வத் தரு; அர்த்த மண்டபம் — இடைவழி மண்டபம்; கர்ப்ப கிருகம் — இறைவன் எழுந்தருளியுள்ள உள்ளிடம்; கால் வழியினன் — பரம் பரையில் உள்ளவன்; அரியணே — சிம்மாசனம், அரசிருக்கை; கோயில் திருப்பணி — கோயில் கட்டிவைக்கும் சேவை; பிரத்தியக்ஷ மாக — வெளிப்படையாக; பட்டியிட்டு — தங்கி; நோற்றல் — தவஞ்செய்தல்; பிறவாநெறி — முத்திவழி; வியப்பு — ஆச்சரியம்; இருப்புக் கிராதி — இரும்புக் கம்பிகள் கோத்த அறை; உற்சவ மூர்த்தி — உற்சவ காலத்திற்குரிய உருவம்; வியாஜம் — முறை; கூத்து — விளேயாட்டு; மானஸிகமாக — மனத்திலே; ஆகு வாகனம் — பெருச்சாளி வாகனம்; வீறுமுகம் — வெற்றி முகம்; ஆக்கிரமித்து — உரிமையாக்கி; பிக்ஷாடன கோலம் — பிச்சை ஏற்கும் தோற்றம்; பிஞ்ஞகன் — சிவபெருமான்; அகிலம் — உலகம்; அகந்தை — பெருமை; ஆலங்காடு — திருவாலங்காடு; கோலம் — அழகு; மலினதசை — சீர்கெட்ட நிலே; மூர்த்தங்கள் — உருவங்கள்; நிறை — கற்பு.

பயிற்சி வினுக்கள்

1. *பேரூர் எங்குளது? அதற்குரிய மற்ருெரு பெயர் யாது?*

2. *பேரூரில் கண்ட பிறவாப் புளியைப்பற்றி நண்பர் கூறி யன யாவை?*

3. *வடகயிலாயம் என்பது யாது? அங்குள்ள இறவாப் பனேயின் சிறப்புக்கள் யாவை?*

4. *கல்வெட்டுக்கள் என்பன யாவை? பட்டீசுரர் கோயில் கல்வெட்டுக்களால் எவை அறியப்படுகின்றன?*

5. *பட்டீசுரர் கோயில் எப்பொழுது யாரால் கட்டப்பட் டது?*

6. பட்டீசுரம் தலபுராணம் அவ்விடத்து இறைவன் வரலாற்றினை எங்ஙனம் கூறுகின்றது?

7. பேரூரில் எழுந்தருளிய இறைவன் பெயர்களையும், அவற்றின் காரணங்களையும் குறிப்பிடுக.

8. பட்டீசுரத்திலுள்ள வெள்ளி மன்றத்தில் ஆசிரியர் கண்டு தரிசித்தன யாவை? அங்குக் காணப்படும் குறைகளாக அவர் எவைகளைக் கூறுகின்றார்?

9. ஆடவல்லானின் மூலத்தானத்திற்கு முன்னிருந்த சபா மண்டபத்தில் காணப்பட்ட சிற்ப உருவங்களைப் பற்றி என்ன தெரியும்? அதைக் கட்டியவர் யார் என்று தெரிகிறது?

10. பெர்கூஸன் துரை என்பவர் யார்? அவர் பட்டீசுரர் கோயில் சிற்பங்களைப் பற்றி யாது கூறியுள்ளார்?

11. இறைவனுடைய மூர்த்தங்கள் பேரூரில் எங்ஙனம் இரவாப் புகழோடு காட்சியளிக்கின்றன?

12. கலைஞன், சிற்பி என்று நாம் பாராட்டுவது யாரை? ஏன்?

6. குக்லியல்மோ மார்க்கோனி

[N. K. வேலன், பீ. ஏ.]

உலகப் புதுமைகள் யாவற்றினும் மேலாக விளங்குவது ரேடியோ என்னும் கம்பியில்லாத் தந்தியாகும். இக்கருவி நெடுந் தொலேவிலுள்ள இடங்களுக்கு இடையில் கம்பி ஒன்றும் இல்லாமலே மின்சாரத்தின் உதவியால் செய்திகளே அனுப்புவதற்குப் பயன்படுகிறது. இக்காலே ரேடியோவின் மூலம் பல்லாயிரக் கணக்கான கற்களுக்கு அப்பாலுள்ளவர்கள் பேசுவதையும், பாடுவதையும் கேட்கின்ருேம். இஃது எங்ஙனம் இயலும்? இவ்வியத்தகு செயல் மின்சார அலேயினுலேயே நடைபெறுகின்றது. மின்சார அலே என்பது யாது? குக்லீயல்மோ இதனே மிகத் தொலேவிலுள்ள ஓர் இடத்திற்கு அனுப்பி ஆங்குள்ள கருவியை இயக்குவது எங்ஙனம்? ஒரு நீர் நிலேயில் ஒரு கல்லே வீசி எறிவோமாகில் அந்நீரில் அலேதோன்றி நெடுந்தொலே பரந்து சென்று மறைகின்றது. மின்சார அலேகளேயும் ஓரிடத்தினின்றும் பிறிதோரிடத்திற்குத் தாங்கிச் செல்ல நீரைப்போன்று வேறு ஏதேனும் ஒரு பொருள் வேண்டும். இத்தகைய பொருள் வான்வெளியெங்கும் பரவியுள்ளதும் மிகவும் நுண்ணிய அணுத்திரள்களால் ஆகியதுமான ஈதர் என்னும் ஒரு வளி ஆகும். இவ்வியத்தகு வளியில் மின் அலேகள் ஒரு விநாடிக்குச் சுற்றேறக்குறைய 186,000 கல் விழுக்காடு விரைந்து செல்கின்றன. இவ்வலேகள் ஈதர் வளியின் உதவியால் வானில் தோன்றும் எல்லாப் பொருள்களேயும் தங்குதடையின்றி ஊடுருவிச் செல்கின்றன.

செய்திகளே ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு ஈதர் மூலமாய் அனுப்புதற்கு முதலில், ஒலியானது மின்சார ஆற்றலாக மாற்றப் படுகின்றது. இம்மின்சார ஆற்றல் ஈதர் அலேகளின் உதவியால் குறிப்பிட்ட இடங்களுக்கு அனுப்பப் பெறுகின்றது. ஆங்கு இம்மின்சார ஆற்றலே மீண்டும் பழைய ஒலியின் வடிவாக மாற்றிச் செய்திகளே யாவரும் அறிகின்றனர். இங்ஙனமே இசைவாணர் ஒரு

வர் பாடினுல் மின் காந்தத்தால் ஆகிய ஒரு கருவி அப்பாடலிலுள்ள பலதிறப்பட்ட ஓசைகளே மின் அலேகளாக மாற்றி வான்வெளியிற் செலுத்துகின்றது. இவைகளேத் தொலேவிலுள்ள மின்வாங்கிகள் ஏற்றுக் கொண்டு அவற்றை ஒலிபெருக்கியின் மீது பாய்ச்சி அப்பாடலேத் தெளிவாகக் கேட்கும்படி செய்கின்றன.

இவ்வரிய ரேடியோ என்னும் கருவி குக்லியல்மோ மார்க்கோனி என்னும் பேரறிஞரால் கண்டு பிடிக்கப்பட்டது. இவர் 1875ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25ஆம் நாள் இத்தாலி நாட்டில் பிறந்தார். ஆய்வுகள் நடத்துவதில் இளமையிலே இவர் மிகுந்த ஊக்கங் கொண்டிருந்தார். இவர் தமது வீட்டிற்கு அருகிலுள்ள குன்ருென்றில் வளரும் கள்ளிப் பழங்களே ஒன்று கூட விடுவதில்லே என்றும், அவற்றின் சாற்றைப் பிழிந்து தாம் எழுதுவதற்கு மை ஆக்கிக் கொள்வார் என்றும் கூறப்படுகின்றன. இவர் மாணவராக இருக்கும் பொழுதே எடிசன் என்னும் மின்சார வல்லுநரின் ஆராய்ச்சிகளேயும், அவற்ருல் விளேயும் பயன்களேயும் கேள்வியுற்றுத் தாமும் மின்சார ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

இவர் தம் 14 ஆம் ஆண்டிலேயே வான்வெளியெங்கும் கண்ணுக்கு எட்டாது மறைந்து கிடக்கும் ஈதர் என்னும் வளியைப்பற்றி ஆராய்ச்சி செய்தார். கதிரவனின் ஒளி ஈதர் அலேகளின் உதவி கொண்டு நம்மைச் சேர்கின்றதென்றும் ஒளியலேகளேப் போன்று அதே விரைவுடன் மின்சார அலேகளேயும் இவ்வளியின் மூலம் செலுத்தக் கூடுமென்றும் இவர் கண்டுணர்ந்தார். அன்றியும், இவ்வலேகளின் உதவியால் செய்திகளே ஓரிடத்தினின்றும் பிறிதோரிடத்திற்கு அனுப்பக் கூடுமெனவும் இவருக்குத் தோன்றிற்று. ஆகவே, இவர் ஈதர் அலேகளே விருப்பம் போல் இயக்குவதற்கும் அவற்றை நெடுந் தொலேவிலுள்ள மின்சாரக் கருவியில் தாக்கும்படி செய்வதற்கும் வழி தேடலானுர். அதன் பொருட்டுப் பலதிறப்பட்ட ஆய்வுகள் நடத்தியதின் பலனுக 1896ஆம் ஆண்

டில் கம்பியின் உதவியின்றியே தந்தி அனுப்பும் வியத்தகு கருவிகளை இவர் செய்து முடித்தார்.

ஆயினும், இம்முறைப்படி அனுப்பும் செய்திகள் மிகவும் அருகிலுள்ள இடங்களுக்கே எட்டக்கூடியனவாக இருந்தன. மார்க்கோனி தாம் கண்டுபிடித்த இப்புதிய முறையைப் பரப்புதற்பொருட்டு இங்கிலாந்துக்குச் சென்றார். முதன் முதலில் இலண்டன் அஞ்சல் (தபால்) நிலையத்திலிருந்து 300 அடித் தொலைவிலுள்ள ஓரிடத்திற்குச் செய்திகளை அனுப்பினார். பின்னர் விடாது இத்துறையில் இவர் முயன்று வந்ததன் பயனாய் இக்கலை சிறிது சிறிதாக வளர்ச்சியுற்று 1899ஆம் ஆண்டில் 200 கல் தொலைவு வரை செய்திகள் அனுப்பப்பட்டன. மறு ஆண்டின் தொடக்கத்தில் உலகம் போற்றும் "மார்க்கோனி தந்திச்சாலை" நிறுவப் பெற்றது. மார்க்கோனி அல்லும் பகலும் இடைவிடாது வருந்தியுழைத்து நெடுந்தொலைவிலுள்ள இடங்களுக்குச் செய்திகளை அனுப்பும் ஆற்றல் நிறைந்த கருவிகளைச் செய்து முடித்தார். இவர் கார்ன்வால் என்னும் இடத்தினின்றும் அட்லாண்டிக் கடலுக்கு அப்பாலுள்ள நியூஃபௌண்ட்லாந்துக்கு எவ்வாறேனும் செய்திகளை அனுப்ப வேண்டுமென முயற்சி செய்தார். ஒருவேளை இவ்வெண்ணம் நிறைவேறுவிடில் நகைப்பிற்கிடமாகுமே என அஞ்சி, இவர் இதனை எவரிடமும் வெளியிடாது மறைத்து வைத்துக் கொண்டார்.

கார்ன்வால் தந்தி நிலையத்தில் எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்தவுடன் தம் உதவியாளர்களான கெம்ப் பேஜெட் என்பாருடன் புறப்பட்டு இவர் நியூஃபௌண்ட்லாந்துக்குச் சென்றார்; ஆங்குக் கடற்கரையோரமாக இருந்த பழைய கட்டிடமொன்றில் தம்முடைய கருவிகளை அமைத்துக் கொண்டார். அக்காலை காற்று மிகுதியாக இருந்ததால் இவர் தம் ஆராய்ச்சி சிறிது பொழுது தடைப்பட்டது. ஆயினும் ஊக்கம் குன்றாது ஆராய்ச்சிக்கு வேண்டிய எல்லாவற்றையும் இவர் சீர்படுத்தி வைத்தார். இங்கிலாந்தைவிட்டுப் புறப்படுவதன்முன் கார்ன்வால்

தந்தி நிலையத்திலுள்ள தம் ஆட்களிடம் இவர் ஒரு நாளைக் குறிப்பிட்டு அன்று மாலை 3 மணி முதல் இடைவிடாது மூன்று சிறிய மின்சார அலைகளை அனுப்பிக் கொண்டிருக்கும்படி கட்டளையிட்டார். மூன்று சிறு அலைகள் அல்லது புள்ளிகள் தந்தி முறைப்படி 'S' என்னும் ஆங்கில எழுத்தைக் குறிப்பன ஆகும். குறிப்பிட்ட நேரம் வந்தவுடன் மார்க்கோனி தமது செவியில் மின்சாரக் கருவியை வைத்துக்கொண்டு உற்றுக் கேட்டார். காற்றோ மிகவும் கடுமையாக வீசிக்கொண்டிருந்தது. இதனால் அன்று முழுவதும் இவருக்கு ஓசையொன்றுங் கேட்கவில்லை; மறுநாள் மாலை சிறிது ஓசை கேட்கத் துவங்கிற்று. உடனே மார்க்கோனி தம் உதவியாளரின் செவியில் அக்கருவியை வைத்துக் கேட்கும்படி செய்தார். எனினும் சிறிது பொழுதிற்குள் அவ்வொலி நின்று போயிற்று. அனைவரும் பொறுமையோடு காத்திருந்தனர். நெடு நேரத்திற்குப்பின் அவ்வோசை மீண்டும் கேட்கத் தொடங்கிற்று. இவ்வண்ணம் தந்திச் செய்தி கம்பியின் உதவியின்றி அட்லாண்டிக் கடலை முதன் முதலாகக் கடந்து சென்றது. உலகிற் பெரியதொரு புதுமையைக் கண்டுபிடித்தோமென்பதை யுன்னியுன்னி மார்க்கோனி அளவிலா மகிழ்வெய்தினர்.

தம்முடைய அரிய ஆய்வுகளாற் கண்டறிந்த உண்மைகளை மார்க்கோனி செய்தித்தாள்களில் வெளியிட்டார். துவக்கத்தில் மக்கள் பலர் அவற்றை உண்மையன்றென மறுத்தனர். ஆயினும், **கெல்வின்** என்னும் ஆராய்ச்சியாளரும் அவர் போன்றவர்கள் சிலரும் இவர் தம் அறிவுரைகளைப் போற்றிப் புகழ்ந்தனர்.

இதன் பின்னரே மார்க்கோனியின் பெருமை மக்களுக்குத் தெரியலாயிற்று. 27 ஆண்டுகளும் நிரம்பப் பெறாத இளைஞராயிருக்கும் பொழுதே அரிய இவ்வாய்வுகளை இவர் நடத்தி வெற்றி பெற்றமை கண்டு அறிஞர் அனைவரும் இவரைப் பாராட்டினர். அறிவியல் வளர்ச்சியின் பொருட்டு ஆண்டுதோறும் **ஸ்வீடன் நாட்டில்** வழங்கப்

படுவதுவும், நூறுயிரம் ரூபாக்களுக்கு மேல் மதிப்பிடக் கூடியதுமான நோபெல் பரிசு இவருக்கு 1909 ஆம் ஆண்டில் கிடைத்தது. இக்காலத்தில் எவரும் பெறுதற்கரிய பெரும் பேறுகளில் இஃது ஒன்று ஆகும். கம்பியில்லாத் தந்தியின் அருமை பெருமைகளை இத்தாலி, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகள் நன்குணர்ந்து பல்வேறு இடங்களிலும் புதிய முறையில் தந்தி நிலையங்கள் அமைத்துக் கொண்டன.

மார்க்கோனி தம் ஆராய்ச்சியை இவ்வளவோடு நிறுத்தி விடவில்லை. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மறைபொருளாய் அனுப்பும் செய்திகளைப் பகைவர் எவரும் அறிந்து கொள்ளாதிருப்பதற்குரிய வகையொன்றைத் தேடலானுர். இது கருதி இவர் பல்லாண்டுகளாய் ஓயாது உழைத்து "ஒலி திருத்தல்" என்னும் முறையொன்றைக் கண்டு பிடித்தார். இம்முறைப்படி மின்சார அலைகளின் அளவும் விரைவும் இக்காலை ஏறக்குறைய இருநூறு வகைகளாய் மாற்றி அனுப்பப்படுகின்றன. செய்திகளைப் பெற்றுக்கொள்ளும் மின்வாங்கிக் கருவிகள் இவற்றிற்கேற்ப அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆதலின், அனுப்பப்படும் மின் அலைகளின் அளவு, விரைவு இவற்றை முன்னுல் அறிந்து அவற்றிற்கு ஏற்றவாறு மின்வாங்கியைத் திருகி விட்டாலொழிய ஓசை ஏனைய இடங்களுக்கு எட்டாது. அன்றியும் அயலான் ஒருவன் குறுக்கிட்டு இவ்வலைகளிற் செய்தியைத் தாங்கிச் செல்லும் அலை இன்னதென எளிதில் அறிந்து கொள்ளவும் முடியாது. ஒரு விநாடிக்கு நூற்றெண்பதாயிரம் கல் தொலைவிற்குமேல் விரைந்து செல்லும் இவ்வலை ஒவ்வொன்றையும் சோதித்துப் பார்ப்பதற்குள் செய்திகள் குறிப்பிட்ட இடங்களுக்குப் போய்ச் சேர்ந்து விடும்.

ரேடியோவை மக்களுக்குப் பயன்படும்படி சிறந்த முறையில் அமைப்பதற்கு எடிசன், பிளெம்மிங், டீஃபாரஸ்ட் முதலிய மின்சார வல்லுநர்கள் மார்க்கோனிக்கு உதவியாக இருந்தனர். 1914ஆம் ஆண்டில் மார்க்கோனிக்கு

அரசாங்கத்தார் ஓர் அரிய பட்டத்தை வழங்கினர். 1930 ஆம் ஆண்டில் இவர் இத்தாலி நாட்டின் பல்கலைக் கழகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ருர்.

ரேடியோவின் வியத்தகு செயல்கள் அளவற்றன வாகும். இது பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் காப்பாற்றி வருகின்றது. திசை தப்பிச் செல்லும் கப்பல் களுக்கு இது வழிகாட்டியாக உதவுகின்றது. 1909 ஆம் ஆண்டில் ரிபப்ளிக் என்னும் கப்பல் கடலில் மூழ்கத் தொடங்கியவுடன் ரேடியோ நிலையங்கள் அதனை அறிந்து உதவிப் படகுகளை அனுப்பின. இதனால் 200 உயிர்கள் வரைக் காப்பாற்றப்பட்டன. ரேடியோவின் உதவியால் பல்வேறு நாடுகளும் ஒன்ருேடொன்று எளிதில் இணைக் கப் பெற்று மக்கள் அனைவரும் ஒரே வீட்டில் இருப் போரைப் போன்று பல வசதிகளைப் பெறுகின்றனர்.

ரேடியோவினல் தொலைவில் உள்ளவர்களின் பேச் சையும், பாட்டையும் மட்டும் கேட்க முடியும், "டெலிவிஷன்" என்னும் தொலைநோக்கித் தந்தியின் வாயிலாகவோ நாம் நம் வீடுகளில் இருந்தபடியே அயல் நாடுகளிற் பேசுகிறவர்களையும், பாடுகிறவர்களையும் நேரில் காணலாம். இக்கருவியினல் நாம் உள்ளூரில் இருந்தபடியே இங்கி லாந்து முதலிய நாடுகளில் நடக்கும் பந்தயங்களையும், விழாக்களையும் கண்கூடாகக் காணலாம். இஃது என்ன புதுமை? ரேடியோவினல் எங்ஙனம் தொலைவிலிருந்து பேச்சும், பாட்டும் செவிக்கு எட்டுகின்றனவோ, அங்ஙனமே அங்குள்ள ஒளியும் நம் கண்ணுக்கு வந்து சேர்கின்றது. கண்போன்ற மின்சாரக் கருவியானது பாடுகின்றவர்மேல் விழும் ஒளிக் கதிர்களைப் பொறுக்கி எடுத்து மின் அலை களாய் மாற்றி வான் வெளியிற் செலுத்துகின்றது. இவ் வலைகளைத் தொலைவிலுள்ள மின்வாங்கிகள் ஏற்றுக் கொண்டு அவற்றை மீண்டும் ஒளியாக மாற்றித் திரை யின்மேல் வீசுகின்றன. இங்ஙனமாக நெடுந் தொலைவில் நிகழ்வனவற்றை நாம் கண்டுங் கேட்டும் இன்புறு கின்ருேம்.

குறிப்புரை

தொலைவு — தூரம்; இக்காலை — இந்தக் காலத்தில்; வியத்தகு — ஆச்சரியப்படத் தக்க; வளி — காற்று; விழுக்காடு — வீதம்; ஆற்றல் — வலிமை; இசைவாணர் — பாட்டுப் பாடுவோர்; ஆய்வு — ஆராய்ச்சி; குன்று — சிறுமலை; உணர்ந்தார் — அறிந்தார்; நகைப்பு — சிரிப்பு, கேலி; குன்ருது — குறையாது; உன்னி உன்னி — நினைத்து நினைத்து; எய்தினர் — அடைந்தனர்; அறிவுரைகள் — அறிந்து கூறியவைகள்; பேறு — நன்மைகள்.

பயிற்சி வினாக்கள்

1. ஈதர் என்பது யாது? அதன் பயன்கள் யாவை?

2. செய்திகள் ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு எவ்வாறு ஈதரால் அனுப்பப்படுகின்றன?

3. ரேடியோவைக் கண்டுபிடித்த பேரறிஞர் யார்? அவரது வாழ்க்கைக் குறிப்புகளைக் குறிப்பிடுக.

4. மார்க்கோனி இளமைதொட்டே ஆய்வு நடாத்துவதில் விருப்பங்காட்டி வந்தனர் என்பதை எதனுல் அறியலாம்?

5. மார்க்கோனி தந்தியில்லாக் கம்பியை எவ்வாறு கண்டு பிடித்தார்?

6. மார்க்கோனியின் இடைவிடாத வெற்றிக்கு ஒரு சான்று தருக

7. 'மார்க்கோனி நோபெல் பரிசு பெற்ற பெரியார்களில் ஒருவர்' என்பதை விளக்குக.

8. மார்க்கோனி கண்டுபிடித்த 'ஒலி திருத்தல்' என்ற முறையமைப்பையும் அதன் பயன்களையும் குறிப்பிடுக.

9. மார்க்கோனி ஆராய்ச்சியால் அடைந்த சிறப்புக்கள் யாவை?

10 மக்களுக்குப் பயன்படுமுறையில் ரேடியோவை அமைத்த பெரியார் யாவர்? அதனுலுண்டான பயன்களைக் குறிப்பிடுக.

11. 'டெலிவிஷன்' என்பது யாது? அதன் அமைப்பு முறையையும், பயனையும் குறிப்பிடுக.

---

7. கிராமப் பண்பாடு

(வித்துவான் ச. த. கணபதி ஐயர், எம். ஏ.)

முன்னுரை :

பண்பாடு, நாகரிகம் என்பன அநேகமாக ஒரே பொருளைத் தரும் சொற்களாகும். பூர்வ காலத்தில் மக்கள் தங்கள் சீவனத்துக்காக அலைந்து திரியும் வாழ்க்கையை யுடையவர்களாக இருந்தனர். காலம் செல்லச் செல்ல அவர்கள் ஓரிடத்தில் நிலையாகத் தங்கி வேளாண்மையைக் கைக்கொண்டார்கள். அலைவாழ்க்கை மறைந்து நிலை வாழ்க்கை ஏற்பட்டதற்குப் பண்ணைகளே காரணமாக இருந்தன. பண்ணைகளின் மூலமாகவே விவசாயம் ஓங்கி, அந்த விவசாயத்தை யொட்டி மற்ற தொழில்கள் பெருகின. மனப் பண்புக்கும், பண்பட்ட வாழ்க்கைக்கும் பண்ணைகளே காரணமாக இருப்பதனுல் நாகரிகத்தைத் தமிழர், 'பண்பாடு' என்பர். நகரங்கள் தோன்றி, அவற்றின் வழியாக அரசியல், பாதுகாப்பு, அமைதி முதலியவை தோன்றியபின் மக்களின் வாழ்க்கை உயர்ந்ததை நினைத்து நகர சம்பந்தமாகத் தோன்றிய பண்பாட்டைச் சிலர் நாகரிகம் என்றனர்.

கிராமப் பண்பாடு, நகரப் பண்பாடு இரண்டும் வேறு வேறு :

தற்காலத்தில் நகரங்களிற் காணப்படும் பண்பாட்டையும், புகைவண்டி மோட்டார்ப் பாதைகளுக்குத் தொலைவிலுள்ள கிராமங்களின் பண்பாட்டையும், ஒருவர் சீர்தூக்கிப் பார்த்தால் அவை இரண்டும் வேறு என்பதை நன்கு அறிவார்கள்.

கிராமங்களில் நடைபெறும் தொழில்களில் முக்கியமானது விவசாயம். மற்ற குடிசைத் தொழில்களெல்லாம் அதற்கு ஆதாரமாகச் சிறிய அளவில் நடைபெறுவனவாகும். நகரங்களிலோ வியாபாரம், கைத்தொழிற் பெருக்கம் இவைகளையே காண முடியும்.

கிராமங்களில் நடைபெறும் காரியங்களில் எல்லாம் அந்த அந்தக் கிராம மக்களெல்லாம் கலந்து கொள்ளு வார்கள். கூட்டுறவு முறையிலேயே முக்கியமான காரியங் களெல்லாம் அங்கே நடைபெறுகின்றன. ஏகோபித்த அபிப்பிராயமே கிராமங்களில் செல்வாக்கைப் பெற்றிருக் கிறது. நகரங்களிலோ மக்கள் தங்கள் தங்கள் காரியங் களைப் பார்த்துக்கொண்டு போகிறவர்கள். தனிப்பட்ட அபிப்பிராயப் பண்பு நகர மக்கள் ஒவ்வொருவரிடமும் காணப்படுதல் இயல்பு. இவ்விதம் இரண்டாக உள்ள இயல்புகளை அறிஞர் ஜே. ஸி. குமரப்பா போன்றவர்கள் 'மந்தை வாழ்க்கை முறையென்றும்,' 'ஓநாய் வாழ்க்கை முறை' யென்றும் கூறுவார்கள்.

கிராமங்கள் இயற்கை வாழ்வை உடையன. நகரங் கள் செயற்கை வாழ்வை உடையன. இவற்றின் காரண மாகக் கிராம மக்களைச் சுவாதீனமாக வாழ்கிறவர்கள் என் றும், நகர மக்களைப் பராதீனமாக வாழ்கிறவர்கள் — பிறரு டைய உழைப்பை எதிர் நோக்கிப் பிழைப்பவர்கள் என் றும் பொதுப்படக் கூறுவர் அறிஞர். சேவையும், உழைப் பும் கிராமப் பண்பாட்டின் லக்ஷியங்கள்; இலகுவான வாழ்க்கையில் விருப்பமும், விநோதப் பொழுது போக்கு வேட்கையும் நகரப் பண்பாட்டின் கூறுகள். இங்ஙனம் இவ்விரண்டு பண்பாடுகளும் தம்முள் வேறு வேருக உள்ளன.

வேற்றுமையில் ஒற்றுமை:

இவை தம்முள் வேறுபட்டிருப்பினும் ஒன்றுக் கொன்று அந்நியோந்நியமானவை. ஒன்றினுல் மற் ருென்று நலமடைகிறது.

கிராமத்தில் உற்பத்தியாகும் காய்கறிகள், பழங்கள், பால், தயிர், மோர், முட்டை முதலியவை விலையாக வேண் டும் அல்லவா? இவைகளுக்கு ஏற்ற சந்தையாக உள் ளவை நகரங்கள். நகர மக்கள் இவைகளுக்காகக் கிரா மங்களை எதிர்பார்த்துப் பிழைக்கிருர்கள். கிராமங்களில்

விளையும் பருத்தி முதலிய விளைபொருள்கள் நகரங்களில் இயந்திரங்களின் செய்பொருள்களாக மாற்றப்படுகின்றன. கிராமத்தார் விளைபொருள்களைக் கொடுத்துச் செய்பொருள்களை விலைக்கு வாங்கிக் கொள்கிறார்கள்.

இந்தப் பரிவர்த்தனையைத் தவிர கிராமங்களில் இருப்பவர் எப்பொழுதாவது விநோத உல்லாசங்களில் கலந்து கொள்ள வேண்டுமானால் நகரங்களில் உள்ள திரைப் படம், நாடகம், நடனம் முதலிய காட்சிகளுக்குச்சென்று சாந்தியைப் பெற்று வருகிறார்கள். நகரமக்கள் வாழ்க்கைப் போராட்டம், சந்தடி, அவசர வேலைகள், நிர்ப்பந்தம் முதலிய கட்டுகளிலிருந்து சில நாட்களாக விடுதலை பெற்று அமைதி, ஓய்வு, ஆரோக்கியம், இயற்கைக் காட்சி முதலியவற்றை அனுபவிக்கக் கிராமங்களை நாடுகிறார்கள்.

அரசாங்கத்துக்கு வரும் வரிப்பணத்தின் பெரும் பாகம் கிராம நிலங்களிலிருந்து வருவதாகும். இப்பெருந் தொகையினால் நகரங்களில் பெரிய பெரிய ஆபீஸ், நிர்வாக நிலையங்கள், பிரயாணிகள் தங்கும் கட்டடங்கள், நூல் நிலையங்கள், விளையாடுமிடங்கள், வைத்தியசாலைகள், பிற வசதிகள் முதலியன ஏற்படுத்தப்படுகின்றன. நாட்டு நலத்துக்கு ஆதாரமான கிராமங்கள் முன்னேற்றம் அடைவதற்காக நகரங்களில் சிலர் கிளர்ச்சி செய்து விவசாயிகளின் நன்மைக்கு அவசியமான காரியங்களாகிய மது விலக்கு, கடன் நிவாரணம் முதலிய வேலைகளில் ஈடுபட்டுப் பிரசாரம் செய்து வருகிறார்கள். விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகங்கள், விவசாயக் கல்லூரிகள் முதலியன நகரங்களிலேயே இருக்கின்றன.

கிராம நகரங்களுக்கிடையில் அமைந்துள்ள பரஸ்பர அந்நியோந்நியம் மேற்கூறிய செய்திகளால் விளங்கும்.

மாறுபாடே இல்லாமல் வாழ்க்கை ஒரே போக்கில் செல்வதானால் அதில் சுவை இராது. எனவே, நமக்கு இந்த இரு வேறு வகையான பண்பாடுகளும் அவசியமே.

கிராமப் பண்பாடுடையது இந்தியா :

இந்தியாவில் கிராமங்களே அதிகம். கிராம மக்களின் தொகை மொத்த ஜனத் தொகையில், நூற்றுக்கு எண்பது பங்குக்குமேல் உள்ளது. எனவே, பெரும்பாலரான கிராம மக்களின் வாழ்வே இந்தியாவின் வாழ்வாகும். வேளாண்மை வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சியாகும். கைத்தொழிலே முக்கியமாக உள்ள இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகள் நகரப் பண்பாட்டை உடையவை. அவைகள்கூட யுத்தகாலத்தில் விவசாயப் பண்பாட்டில் முக்கியமாகக் கருத்தைச் செலுத்தி வந்தன. இப்பொழுதும் செலுத்துகின்றன என்ருல், நம்மவரின் முழுக் கவனமும் கிராமப் பண்பாட்டில் அமையவேண்டும் என்பது கூருமலே விளங்கும். இதனுல் நமக்கு ஒரு விஷயம் தெரிகிறது. நகரப் பண்பாடு உடைய நாடுகள் சில சமயங்களில் கிராமப் பண்பாட்டை மேற்கொள்கின்றன என்ருல், கிராமப் பண்பாட்டினுல் நகரப் பண்பாடு வளர்ச்சியுறும் என்பது தெள்ளிதின் புலனுகிறது. ஆனுல் நகரப் பண்பாடு என்று கிராமப் பண்பாட்டைக் குலைக்கத் தொடங்குகிறதோ, அன்றே தேசம் வறுமையுற்றுக் கீழ் நிலை பெற்று அதன் காரணமாக இரு பண்பாடுகளும் அழிந்து போகும்.

இன்றைய இந்தியாவில் கிராமங்கள் தம் தம் பண்பாட்டை மெல்ல மெல்ல இழந்து வருகின்றன. இதன் விளைவு இப்பொழுதே தெரிகிறது. கிராமப் பண்பாடு மேலும் அழியாமற் பாதுகாப்பது இத்தேச மக்கள் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

அழிவின் அறிகுறிகள் :

நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் போக்குவரவுச் சாதனங்களால் இப்பொழுது நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. நகரங்களில் காணப்படும் பண்பாடுகளிற் பல கிராமத்தாரிடை இன்று காணப்படுகின்றன கிராமங்களில் உள்ள இளைஞர்கள் படிப்பதற்காக நகரங்களுக்குச்

சென்று படிப்பை முடித்துக்கொண்ட பிறகு கிராம வாழ்க்கையை விரும்புவதில்லே. விரும்பி, கிராமங்களுக்கு மீண்டும் வரும் ஒரு சிலர் நகரப் பழக்க வழக்கங்களே (இலகு வாழ்க்கை ஆடம்பர வாழ்க்கைகளே) மேற்கொள்ளுகிருர்கள். அவர்களே மாதிரியாகக் கொண்டு மற்றவர்களும் தங்கள் சொந்தப் பண்பாட்டை இழந்து விடுகிருர்கள்.

பெரிய ஆலேகளில் நிகழும் வேலே நிறுத்த, ஆர்ப்பாட்டங்களே நேரிலும் பத்திரிகைகள் மூலமும் அறிந்த குடியானக் கூலிகள், வயல், தோட்டம் முதலியவைகளில் வேலே செய்பவர்கள் முதலியவர்கள் நிலச் சொந்தக்காரருக்குத் தொந்தரவு தருகிருர்கள். நிலச் சொந்தக்காரரும் பழைய கால முறைகளேப் பின்பற்ருமல் ஆலே முதலாளிகளின் முறையை மேற்கொள்ளப் பார்க்கிருர்கள். கிஸான் சச்சரவுகளுக்கு இவை காரணமாகின்றன.

கிராமங்களில் சில தனி நபர்களின் ஆட்சியும் அதிகாரமும் தலேயெடுத்துத் தாண்டவமாடுவதுண்டு, ஒவ்வொரு கிராமத்திலும் இத்தகைய அதிகாரிகள் இரண்டொருவர் உண்டு. முன்பெல்லாம் இவர்களுடைய முன்னேர்கள் அதிகாரிகளாகவே இருந்தார்கள். ஆனல் அவர்களுடைய ஆட்சி சுயநலங் கருதாது தம்மைச் சார்ந்தவர்களே ஆதரித்து வருவது. அடிக்கும் கைகளே அணேக்கும் கைகளாகவும் இருந்தன. எங்கும் சம உரிமை, சகோதரத்துவம், சமதர்மம் என்ற கொள்கைகள் நன்கு பரவியிருக்கிற இக்காலத்தில் இரண்டொருவரின் அதிகாரம் செல்லுபடியாகாது அதற்குப் பலருடைய எதிர்ப்பு இருந்தே தீரும். பலர் கிராமங்களே விட்டொழித்துச் சுயேச்சையாக வாழ நகரங்களுக்குச் சென்று விடுகிருர்கள். இந்தச் சச்சரவினுல் கிராமப் பண்பாடு அழிகிறது.

நாம் செய்ய வேண்டுவன:

கிராமப் பண்பாட்டை நாம் காப்பாற்ற வேண்டும். அரசாங்கம் இத்துறையில் ஆகவேண்டியவற்றைச் செய்து வருகிறது என்ருலும், மக்களின் ஒத்துழைப்பும் அவசியம்.

சொந்த நிலத்தை உடையவர்கள் நகரங்களில் இருப்பாரேயானல் அவர்கள் தங்கள் நிலங்களுக்குச் சென்று அங்கே வீடு கட்டிக்கொண்டு பண்ணை வாழ்க்கையை நடத்த வேண்டும். பணம் இருக்கிறவர்கள் சில ஏக்கர் நிலங்களை விலைக்கு வாங்கி அங்கே போய்க் கிராம வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். இதற்குத் தியாகமும், உழைப்பும் அவசியம். பண்ணை வாழ்க்கை ஸ்திரமாகி விட்டால் பண்ணைக்காரர் பிறருக்கு அடிமையாக இல்லாமல் சுதந்திரமுள்ளவர் ஆகிருர். செல்வம் பெருக்கும் வழி அவருக்குச் சொந்தம் ஆகிறது. ஒருவருடைய உத்தியோக சாலையும், வீடும், விநோதப் பொழுது போக்குக்கு ஏற்ற இடமும் தம்முடைய பண்ணையே ஆகிறது.

அமெரிக்க ஐக்கிய நாடு தற்சமயத்தில் வேளாண்மையில் தலைசிறந்து விளங்குகிறது. கிராமப் பண்பாட்டை அந்நாட்டு அரசாங்கம் நிலைப்படுத்தப் பல வழிகளில் உழைத்து வருகிறது. அங்கே இப்பொழுது சுமார் அறுபது லக்ஷம் பண்ணைக்கு மேல் இருக்கின்றன. பண்ணைக்காரர்களின் வாழ்க்கை மேலானதாக அங்கே திகழ்கிறது. அமெரிக்காபோல் நம் நாட்டிலும் சாத்தியமானவர்கள் பண்ணை வாழ்க்கை முறையைக் கைக்கொள்ள வேண்டும். அதன் மூலம் கிராமப் பண்பாட்டை வளர்க்க வேண்டும். இவர்கள் வளர்க்காமலேகூட அந்தப் பண்பாடு அப்பொழுது தானக வளர்ந்து விடும்.

குறிப்புரை

சீவனம் — உயிர் வாழ்க்கை; அலை வாழ்க்கை — அலைந்து திரியும் வாழ்க்கை; பண்ணை — வயல், தோட்டம்; ஏகோபித்த — ஒன்றுபட்ட; அபிப்பிராயம் — கருத்து; பராதீனம் — பிறரை எதிர் நோக்கி வாழுதல்; லக்ஷியங்கள் — பண்புகள்; அந்நியோன்யம் — இணைபிரியாமை; பரிவர்த்தனை — பண்டமாற்று; சாந்தி — அமைதி; நிவாரணம் — நீக்கம், விடுதலை; பிரசாரம் — விளம்பரம்; பரஸ்பர — நெருங்கிய; விஷயம் — காரியம்; கிஸான் — விவசாயிகள்; ஸ்திரமாகி — நிலையாகி; பண்ணைக்காரர் — வயலுக்குச் சொந்தக்காரர்; சாத்தியமானவர்கள் — முடியக் கூடியவர்கள்.

பயிற்சி வினாக்கள்

1. பண்பாடு, நாகரிகம் — இவற்றிற்கு ஆசிரியர் தரும் விளக்கம் என்ன?

2. கிராமப் பண்பாட்டிற்கும், நகரப் பண்பாட்டிற்குமுள்ள வேறுபாடுகள் யாவை?

3. மந்தை வாழ்க்கை முறை, ஓநாய் வாழ்க்கை முறை என்று யார் எவற்றைக் கூறுவர்? பொருந்துமாறு காட்டுக.

4. கிராமப் பண்பாட்டின் கூறுகளையும், நகரப் பண்பாட்டின் கூறுகளையும் குறிப்பிடுக.

5. கிராம, நகரங்களுக்கிடையில் அமைந்துள்ள பரஸ்பர அந்நியோந்நியம் எந்தெந்தச் செய்திகளால் விளங்குகிறது?

6. நமக்கு கிராமப் பண்பாடுகளும், நகரப் பண்பாடுகளும் அவசியம் வேண்டுமென்பதை விளக்குக.

7. இந்தியா கிராமப் பண்பாடுடையதென்பதை விளக்குக.

8. கிராமங்களில் கிஸான் சச்சரவுகள் ஏற்படுவதற்குக் காரணங்கள் யாவை?

9. 'கிராமப் பண்பாட்டால் நகரப் பண்பாடு வளர்ச்சியுறும்; நகரப் பண்பாட்டால் கிராமப் பண்பாடு அழிவுறும்' என்பதை விளக்குக.

10. கிராமப் பண்பாடு அழிவதற்கு எவை காரணமாகின்றன?

11. கிராமப் பண்பாட்டைக் காப்பாற்ற நாம் என்ன செய்யவேண்டும்?

12. கிராம வாழ்க்கையாலுண்டான பயன்கள் யாவை?

8 காடுகளைப் பாதுகாத்தலின் அவசியம்

[பேராசிரியர் ஜெ. தாம்சன் எம். ஏ., எல். டி.]

தாதுப்பொருள்கள் மிகுதியாய்க் கிடைக்கும் நாடு செல்வம் படைத்த நாடென்று கருதப்படுகின்றது. ஆனால் ஒரு நாட்டின் காடுகளே அதன் மிக அரிதான செல்வம் என்பதைப் பலர் நன்குணரவில்லை. எரிக்க விறகும், நமக்குப் பயன்படும் பலவகைப்பட்ட சாதனங்களையும் செய்வதற்குரிய மரங்களும் மாத்திரமே அவை நமக்களிப்பதன்றி, அவற்றால் நமக்கு வேறு பயனில்லை என்பர் பலர். நிலப்பரப்பின் பெரும் பகுதியை இக்காடுகள் வீணே அடைத்து நிற்கின்றன; இவற்றை வெட்டித் திருத்தி பயன்படும் செடிகளை வளர்க்கலாமென்பர் வேறு சிலர். ஆதலால், பொருளீட்டும் பொருட்டுப் பழம்பெருங்காடுகளை அவர்கள் அழித்து வெறும் மேடுகளாக்குகின்றனர். இங்ஙனம் செய்வதினால் விளையும் தீமைகள் அவர்களுக்குப் புலப்படுவதில்லை; அவற்றைக் குறித்து அவர்கள் சிறிதும் சிந்திப்பதுமில்லை. ஆனால், இக்காடுகள் நம் உயிருக்கே ஆதாரமானவை யெனக்கூறின், அது மிகையாகாது.

காட்டிலுள்ள மரஞ்செடி கொடிகளின் இலைகள் உதிர்ந்து விழுந்து மட்கிச் சிறந்த உரச்சத்துள்ள வண்டலாகிக் கொண்டே இருக்கின்றன. பழங் காடுகளில் இவ்வண்டல் ஒரு போர்வை போல் தரையைப் பொதிந்து கிடக்கும். இவ்வண்டல் மிருதுவாயும், நீரை உறிஞ்சி வைத்துக் கொள்ளும் பண்பு வாய்ந்ததாயும் இருக்கும்.

காடுகளில் மழை பெய்கையில் வண்டலில் தேங்கிய நீரானது சிறிது சிறிதாகப் பூமியினுள் ஊறிச் செல்லும். பின்பு, ஆங்காங்கே ஊற்றுகளாக வெளிப்பட்டு நதியாகப் பாய்ந்து மக்களுக்கு உயிரளிக்கும். மிகுதியான நீர் பூமிக்குள் படலமாக வெகு தூரம் பரந்து நிற்கும். இந்நீர்ப்படலமே தூரத்திலுள்ள கிணறுகளையும் ஊட்டும்.

காடுகளில் பெருமழை பெய்யினும், தண்ணீரானது தரைமீது பாய்ந்தோடாது பூமிக்குள் ஊறிச் சென்று நதியைச் சேர்வதால், திடீரென வெள்ளப்பெருக்கு உண்டாகாது. தரை கரைக்கப்படாததால் ஆற்றுநீர் கலங்கலின்றி இருக்கும்.

அடர்ந்த காட்டினுள் சூரிய வெப்பம் நுழைய முடியாதாகையால், தரையினின்று தண்ணீர் ஆவியாகச் சென்று மறையாது. ஆனல், அழிக்கப்பட்ட காடுகளோ இப்பொழுது வெட்ட வெளியாய்க் கிடப்பதால், வெயிலும், காற்றும், மழையும் பலமாய் நேரில் மோதுகின்றன. வெப்பத்தினுல் தரை நீர் ஆவியாக வெளியேறவே வண்டல் காய்ந்து துகளாகின்றது. பூமிக்குள் நிற்கும் நீர்மட்டமும் குறைகின்றது. வண்டல் துகளானது சிறிது சிறிதாகக் காற்றினுல் வாரி எடுத்துச் செல்லப்படுகின்றது. மழை தீரும் வண்டலை அடித்துச் செல்கின்றது. இவ்வாறு வண்டல் நாளடைவில் நீக்கப்படவே மேல் தரை தோன்றுகிறது. அதன் மீது மழை பெய்யும் போது தண்ணீர் பூமிக்குள் ஊறிச் செல்ல வழியில்லாது தரையின் மேல் பாய்ந்தோடும். அங்ஙனம் பாயும்போது மேல்தரை சிறிது சிறிதாகக் கரைக்கப்படுவதால் ஓடைகள் உண்டாகின்றன. நாளடைவில் மிகுதியான மண் கரைக்கப்படுவதினுல் அந்த ஓடைகள் பெரிதாகின்றன. அவற்றில் ஆழமும் அதிகரிக்கின்றது. தண்ணீரினுல் கொண்டு செல்லப்படும் மண்ணுனது நதி முகத்துவாரத்தில் படியவே அதின் அடித்தளம் படிப்படியாய் எழும்பிக்கொண்டே வரும்.

அமெரிக்கா தேசத்தில் **போட்டோமாக்** என்னும் நதி, அத்தேசம் குடியேறப்பட்ட காலந்தொடங்கிக் கரைத்தெடுத்துச் சென்ற மண்ணுனது அந்நதி முகத்துவாரத்தில் அமைந்துள்ள ஆழமான துறைமுகத்தைத் தூர்த்துப் போட்டது. முன்னே கப்பல்கள் வந்து தங்கின அத்துறைமுகத்தில் இப்பொழுது **ஆப்பிரகாம்லிங்கனின்** ஞாபகமண்டபம் எழுப்பப்பட்டிருக்கிறது. ஆண்டு

தோறும் 5500000 டன் எடை மண் அந்நதியினுல் வாரிச் செல்லப்படுகிறதென்று கணக்கிடுகிருர்கள்.

மேலும் வண்டல் நீக்கப்பெற்ற தரையில் பெருமழை பெய்யும்போது மிகுதியான தண்ணீர் தரைமீது பாய்ந்தோடி நதியைச் சேர்வதால், திடீரென வெள்ளப் பெருக்கு உண்டாகிறது. பூமிக்குள் ஊறிச் செல்லும் தண்ணீர் குறைவதினுலும், மிகுதியான நீர் சூரிய வெப்பத்தினுல் ஆவியாக வெளியேறுவதினுலும், தரை நீர் மட்டம் தாழ்ந்து விடுவதினுல் தூரத்திலுள்ள கிணறுகளிலும் தண்ணீர் குறையும். அமெரிக்கா தேசத்து **பால்ட்டிமோர் நகரின்** கீழுள்ள நீர் மட்டம் 32 ஆண்டுகளுக்குள் 146 அடி தாழ்ந்து விட்டதாம். ஆதலின், இக்காலத்தில் அவ்விடத்தில் ஒரு கிணறு வெட்ட வேண்டுமாயின், 32 ஆண்டுகளுக்கு முன் வெட்டப்பட்ட ஒரு கிணற்றின் ஆழத்தைவிட 146 அடி கூடுதலாகத் தோண்ட வேண்டும்.

மெக்ஸிக்கோவிலுள்ள **மிக்கோக்கன்** என்னும் மாகாணத்தின் நிலம் செழிப்பற்ற வரண்ட தரை ; ஆங்காங்கே சிற்சில புற் கூட்டங்களே காணப்படும். அவ்விடத்தில் ஒரு பெண் ஐந்து மைல் தூரம் நடந்து சென்று குடி தண்ணீர் சுமந்து வருகிருள். அவள் வீடு இருக்கும் அதே இடத்தில் பல்லாண்டுகளுக்கு முன் பெருங் காடுகள் ஓங்கி நின்றன. அவள் வீட்டோரமாய்த் தெளிந்த ஊற்றுத்தண்ணீர் மலேச் சரிவினின்று பாய்ந்து கொண்டிருந்தது

ஆப்பிரிக்கா தேசத்திலும் பெருங் காடுகள் அழிக்கப்பட்டதின் பயனுக, நிலநீர் மட்டம் தாழ்ந்துகொண்டே வருகிறதாம். முன்னே காடுகள் செழித்து விளங்கின காலத்தில் பெய்யும் ஒரு அங்குல மழை நீரோடைகளேயும், ஆறுகளேயும் பல வாரங்கள் நிரப்பும். ஆனுல், இப்போது அதே யளவு மழை பெய்யினும், அவ்வாறுகளில் இருபத்து நான்கு மணி நேரங்கூடத் தண்ணீர் பாயாதாம். சில

விடங்களில் ஆறுகள் மிகவும் சிறுத்துப் போயின. வேறு சில ஆறுகள் முற்றிலும் மறைந்தே போயினவாம்.

வெள்ளப் பெருக்கினுல் பெரும் பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் விளேவதோடு, அதனுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் பொருளுதவி வழங்க நேரிடுகிறது. வெள்ளப்பெருக்கைத் தடுக்க அணேகள் கட்டவேண்டி யிருக்கிறது. உடைக்கப்பட்ட கால்வாய்களேயும், இருப்புப் பாதைகளேயும் பழுது பார்க்கவும் அதிகப் பணம் செலவிட நேரிடும். பூமிக்குள் நீர்மட்டம் குறைவதினுல் கிணறுகள் வற்றிப்போகுமிடங்களில் குடிகளுக்குத் தண்ணீர் வசதியளிக்கவும் அரசாங்கம் அதிகமான தொகை செலவு செய்யவேண்டி வரும். நதிகள் கடலோடு கலக்குமிடங்களில் குவியும் மண்ணே இயந்திரத்தினுல் அகற்றுவதற்குப் பெருந்தொகை செல்வாகும். அரசாங்கம் செலவு செய்யும் பணம் குடிகளிடமிருந்தே வரிகளாக வசூலிக்கப்படும்.

இவ்வகைத் துன்பங்கட்கும் இழப்புகட்கும் காரணம் காடுகளே அழித்தலே. எனவே, இவை நேராமல் தடுக்க வேண்டுமாயின் காடுகளே அழித்தலே நிறுத்த வேண்டும். அழிக்கப்பட்ட காடுகளே மீண்டும் ஆக்கவேண்டும். இது எளிதான காரியமன்று. ஆயினும் காடுகள் அழிக்கப்பட்ட இடங்களில் படிப்படியாக மரங்கள் வளர்ந்துவர வேண்டும். இந்த நோக்கத்தை முன்வைத்தே நம் அரசாங்கத்தார் ஆண்டுதோறும் **வன மகோற்சவ தினம்** கொண்டாடும்படி நம்மை உற்சாகப்படுத்தி வருகின்றனர். நாட்டின் நல்வாழ்வில் கருத்துடைய அனேவரும் மரம் வளர்க்கும் புதுப்பணியில் முனேவாராக.

குறிப்புரை

அரிதான — அருமையான; உணரவில்லே — அறியவில்லே; பொருள் ஈட்டும் — பொருள் தேடும்; சிந்திப்பதுமில்லே – ஆராய்ந்து பார்ப்பதுமில்லே; மட்கி — உருக்குலேந்து; பண்பு — தன்மை; தேங்கிய — தங்கிய; படலம் — பரப்பு; ஊட்டும் — நீர் ஊறச்

செய்யும் ; வெட்டவெளி — வெறுமையான வெளியிடம் ; துகள் — தூசி ; படியவே — தங்கவே ; தூர்த்துப் போட்டது — மூடிப்போட்டது ; எழுப்பப்பட்டிருக்கிறது — கட்டப்பட்டிருக்கிறது ; வரண்ட — காய்ந்து போன ; வற்றிய — உலர்ந்த ; பாதிக்கப்பட்ட — தாக்கப்பட்ட ; இழப்பு — நஷ்டம் ; நேராமல் — உண்டாகாமல் ; வனமகோற்சவம் — மரநடு விழா ; புதுப்பணி — புதிய வேலை ; முனைவாராக — முன்வந்து செய்வாராக.

பயிற்சி வினாக்கள்

1. காடுகள் எத்தகைய பயனுடையன ? அவைகளை வெட்டுவோர் கருத்துக்கள் யாவை ?

2 காடுகளைப் பாதுகாத்தல், வெட்டுதல் — இவைகளால் உண்டாகும் நன்மை, தீமைகள் எவை ?

3 ஆபிரகாம்லிங்கனின் ஞாபகமண்டபம் எங்குளது ? அது இங்கு எதுபற்றிப் பேசப்படுகிறது ?

4. கிணறுகளில் தண்ணீர் மட்டம் குறைவதற்குக் காரணம் யாது ? அதற்குச் சான்றாக ஆசிரியர் கூறும் எடுத்துக்காட்டு எது ?

5 காடுகளில்லாததால் நீர்ப்பெருக்கு இல்லாமல் போய் விடுகிறது என்பதற்கு ஆசிரியர் கூறும் இரு சான்றுகளையும் குறிப்பிடுக.

6. காடுகள் இன்மையால் அரசாங்கத்திற்கும் நமக்கும் எவ்வகையில் நஷ்டம் ஏற்படுகின்றது ?

7. அர்சாங்கத்தார் ஆண்டுதோறும் வனமகோற்சவ தினம் வைத்திருப்பதன் நோக்கம் யாது ? நாம் அதனை ஏன் கொண்டாட வேண்டும் ?

9. பேராசிரியர் திரு ச. த. சற்குணர் அவர்கள்

(கவிஞர் அ. கு. ஆதித்தர்,)

தோற்றுவாய் :

விரிந்த சரிகைப்பட்டை, பெருக்கல் சின்னங் காட்டி முன் மிளிரும் தூய வெண்பாகை புனைந்து, பரந்த நெற்றியும், படர்ந்த முகப்பொலிவும் கொண்டு, மடங்காது நீண்ட மீசை உருக்கிளர, உடம்பை ஒட்டியதாய்த் தூய சட்டை இறுகப்பற்றி நிற்கப் பொத்தான்கள் யாவும் செம்மையாய் மாட்டப்பெற்று, யாதினும் வழுவாப் பெரு நேர்மையாளர் என்பதனைப் புறக்கோலமே வெளிக்காட்ட, பெருமித உருவத்துடன் கண்டோர் யாவரும் ' இன்னார் ஓய்வு பெறும் பருவத்தை அண்மிய இராணுவ வீரர் ' என்று கூறத்தக்க மேல் தோற்றம் பெற்ற ஒரு புண்ணியர் பேராசிரியர் திரு. ச. த சற்குணர் அவர்கள்.

திரு. சற்குணர் அவர்கள் அதிகம் பேசார். பேசும் சொற்கள் தெளிவாய்ப், பிறர் பாராட்டு ஏற்று நிற்கும் முறையில் ஆணையின் தொனி அமைந்து எடுப்பாக நிற்கும். வன்சொற்களை வாயிற் பேசியறியா ஆசிரியர் அவர் ; இன்சொற்களையே எடுப்பான தொனியில் பேசும் இயல்புடையவர். தோற்றத்தின் பொலிவும், சொல்லின் எடுப்பும் சிறந்து மிளிர அவர் மேடைமீது நின்று பேசுங்கால், ஆங்கு ஓர் அரசவைப் பெருமிதம் நிலவும். எங்கும் அமைதி குடிகொள்ளும். கல்வியறிவுடைய யாவரும் அவர் கருத்துக்களை உன்னி உன்னி நிற்கும் நிலைக்கு ரயில் தொடரின் முன்பொறியும், மின்உறு வண்டிகளுமே உவமையாகுமன்றி வேறு யாதும் ஒவ்வா.

ஆசிரியர் அவர்கள் ஆங்கிலேயர் பரப்பிய கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தவர் ; ஆங்கிலக் கல்வியில் எல்லையில்லாப் புலமை யடைந்தவர் ; பீ. ஏ. பட்டம் பெற்றவர். ஆயினும் அவர் வெள்ளையரின் வெளி நாகரிகத்தில் மூழ்கினாரில்லை. சுத்தத் தமிழ் மகனாகத் தோன்றினார் ; தமிழனாக உழைத்தார் ; தமிழனாக வாழ்ந்தார். தமிழனாகவே

மறைந்தார். அஃது எவ்வாறு என்பதை இனிச் சிறிது விளக்குவோம்.

தமிழ் மகனுகத் தோன்றினர் :

நம் நாட்டு மாணவர் யாவரும் ஆங்கிலப் புலமை எய்தியவுடன் காற்சட்டை பூணுவது ஒரு வழக்கம். மேலும் ஆசிரியராகவோ, அரசியல் அதிகாரியாகவோ இடம் பெறின் கால்சட்டை, கழுத்து விரிந்த மேற்சட்சை, கழுத்தைச்சுற்றி ஒரு சொட்டை இத்தனையும் பூண்பது இயல்பாகித் தமிழ்நாட்டு மக்கள் மேல்நாட்டுக் கோலத்தில் தோற்றம் அளிப்பர். ஆசிரியர் சற்குணர் பீ. ஏ. படித்திருந்தும் — ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியராக இடம் பெற்றும் — கல்லூரியில் பேராசிரியராகி வெள்ளைப் பெரு மக்களுடன் உழைக்கும் வாய்ப்பு எய்தியும் பண்டைத் தமிழ் மகன் கொண்ட உடை மரபை விட்டாரல்லர். நீளத் தார் அமைத்துக் கட்டிய கீழ்வேட்டி, தலையில் தூய வெண் பாகை. மேலுக்கு ஒரு சட்டை இத்தனையும் பூண்டார். இவரது தலையின் முடியும் கத்தரிக்கப்படாமல் பாகைக்குள் அமைந்து அடங்கி நிற்கும். திரு. பவுல் பள்ளியில் இருந்தபோது ஆங்குற்ற ஆங்கிலத் தலைமகன் நம் ஆசிரியரை நோக்கி, "சற்குணர் அவர்களே, தாங்கள் தங்கள் முடியைக் கத்தரித்துக்கொள்ள விரும்பவில்லையா ?" என்று கேட்க, அதற்கு அவர் எதிர்மாற்றமாக, 'இல்லை' என்று பதில் உரைத்தார். மீண்டும் அப்பெருமகன் 'ஏன் அதை வைத்துக்கொள்ள விருப்பம் ?' என்று கேட்க, 'என் முந்தையோர் முடி கொண்டனர் ; ஆதலின் யானும் கொள்ளல் வேண்டினேன்' என்று பதில் உரைத்தார் ஆசிரியர்.

இவரது தந்தையார் பெயர் **சாமுவேல் சற்குணர்** ; இவர் தம் பெயரோ **தருமராஜர்**. ஆயின் தமது பெயர் ச. த. சற்குணர் என்று கூறவேண்டியதுண்டு ; பெயர் முதலில் 'சா' என வந்து அமங்கலமாக நிற்கலாகாது என்னும் தமிழ் மரபு கண்ட தருமராஜ சற்குணர், 'சா' என்னும் நெடி

லைக் குறிலாக்கி, என்றும் ச. த. சற்குணர் என்றே பெயர் எழுதி வந்தார். இவர் தமிழ்மரபு தவருத தவப்பெரு நெறியில் நிலைநின்ருரென்பதற்கு இஃதொன்றே சிறந்த சான்ருகுமன்ரே!

தமிழனுக உழைத்தார்:

தமிழ்மக்கள் யாவரும் பழந்தமிழ் நூல்களை உணர வேண்டும், தமிழ்ப் பண்பாடு பெறவேண்டும், பெருநெறி கண்டு வாழவேண்டும் என்பது ஆசிரியர் அவர்களின் உள்ளக் கருத்து. இதனுல் அவர்கள் '**தென் இந்தியத் தமிழ்க்கல்விச் சங்கம்**' என ஒன்று நிறுவி, அதன் தலைவராய் இருந்து பல ஆண்டுகள் பல்லோர்க்குத் தமிழ் நூல்களைப் போதித்து வந்தார். யாரும் மேற்கொள்ளா உழைப்பாகச் **சங்கநூல்கள், தொல்காப்பியம், ஷேக்ஸ்பீயர்** போன்ற பேரிலக்கியங்களைப் பல்லோருக்கும் போதித்துப் பயன் கருதாது நின்ருர். 'மாரிமாட்டு என் ஆற்றுங்கொல்லோ உலகு' என்பது தமிழ்நெறி யன்ரே!

தமிழனுக வாழ்ந்தார்:

'கொளல் தீது, கொடுப்பதே நன்று' என்ற வள்ளுவர் வாக்குக்கு ஒரு சான்ருக வாழ்ந்தார் திரு. ச. த. சற்குணர். இவர் தம் கல்விச்சங்கத்துக்கு வந்த மாணவர் பலரை மாண்புடையவராக்கினுர். அதற்குப் பயன் கருதினுர் அலர். தம் மனை போந்தார்க்கெல்லாம் நல் உரையும் பல் உணவும் அளித்தார், தண்ணளி புரிந்து நின்ருர். 'இம்மையில் செய்தது மறுமைக்கு ஆம்' என்ற கருத்தும் இவர் கொண்டார் அல்லர். தம் உழைப்புக்கு விளைவு கருதாதவராய் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற கருத்துடன் வாழ்க்கை நடத்தினுர். 'தம் தந்தையார் பல தமிழ் நூல்களையும் மனையில் சேர்த்து வைத்ததே தாம் தமிழ் படிக்க ஏதுவாயிற்று.' எனக் கூறித் திரு சாமுவேல் சற்குணரைப் போற்றிக் களிப்பார்; தாயார் **ஞானப்பூ அம்மையார்** கொண்ட 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல்' பிற மாதரிடம் காண்டற்கரிது எனத் தாயாரைப் பாராட்டுவார்; தம்

மைந்தன் ஞானமார்த்தாண்டன் தக்க கல்வியும், பதவியும் பெற வைத்தார்; நெறிமுறையில் நேர்மைக்கு முதலிடம் அளித்து, எவ்வகைத் தாழ்வும் இன்றி வசையிலா வாழ்வு நடத்தினர்.

தமிழனுக மறைந்தார் :

உலகில் யாவருக்கும் ஒரு முடிவு உண்டு. அம்முடிவு நம் ஆசிரியரையும் அண்மியது. "யான் இறந்து என் உடல் அடக்கம் பெறும்பொழுது அஃதுடன் எனது பழைய புறநானூற்றுப்பிரதியும் உடன் அமைய வேண்டும்" என்று இவர் இறப்பதற்குமுன் தம் சுற்றத் தினரைக் கேட்டிருந்தனர். அஃது 1952ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் இருபத்துநான்காம் நாள் இவர் இறந்து இவருடைய உடல் அடக்கம் செய்யப்பட்டபோது நிறை வேறியது. சாவிலும் சங்கத்தமிழை மறவாச் சான்றோர் எனச் சாற்றுமாறு விளங்கினர் ச. த. சற்குணர். தமிழ் நாட்டில் நள்ளி என ஒரு வள்ளல் இருந்தான். வறிய புலவருக்குக் கானத்தில் பெரிய உதவி செய்தான். தன் பெயரையும் கூறினன் அல்லன்; தன் ஊரையும் கூறினன் அல்லன். புகழையும் விரும்பா மிக்கோன் அவன். அந் நெறியே பொன்னையும், புகழையும் விரும்பாது உழைப்பே கடனுகக்கொண்டு வாழ்ந்து உயிர் நீத்த சங்கத் தமிழ்மகன் ச. த. சற்குணர் ஆவார்.

பாராட்டு :

சற்குணர் 1877ஆம் ஆண்டு மேத் திங்கள் 25ஆம் நாள் பிறந்து 1952ஆம் ஆண்டு இறுதிவரை இந்நிலவுல கில் வாழ்ந்தார். அறுபதாம் ஆண்டில் அன்னரின் சேவை யைப் பாராட்ட அவர்தம் மாணக்கர்களும், மற்றுமுள்ள அன்பர்களும் கூடி ஒரு விழா நடத்தினர்கள். அந்நாளில் வெளியிடப்பட்ட '**சற்குண மலரில்**' காட்டும் சில குறிப்புக் களை ஈண்டுக் காட்டுவேன்.

" இந்நாளில் பழந்தமிழ் வீர மரணம் சற்குணர் ஒருவ ரிடத்தில் பிறந்து கமழ்தலைக் காணும் பேறு பெற்றவருள் யானும் ஒருவன் "

— திரு. வி. கலியாணசுந்தர முதலியார்.

"இவர்கள் ஆங்கிலப்புலமை பெற்றிருந்தும், தம்மைப் பிறர் தமிழ்ப்புலவர் எனச் சொல்வதிலேயே விருப்புள்ள வர்கள் "

— வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார்.

" சற்குணர் பேசும்போது, அறிவாளி ஒருவர் தாம் அறிந்த விஷயங்களை அடக்கத்துடனும், சாக்கிரதை யுடனும் அறிவாளிகளின் முன்னிலையில் அவர்களும் அதைச் சர்ச்சை செய்யும் பொருட்டுத் தெரிவிக்கிறார் என்ற உணர்ச்சியே ஏற்படும்."

— அப்புஸ்வாமி ஐயர்.

" இவரைப் பார்த்தபோதெல்லாம் ஆங்கில நாட்டுப் பேராசிரியரான டாக்டர் ஜான்சனுடைய நினைவு எனக்கு வருவதுண்டு. புறத்தே போல அகத்தும் பகட்டும், மினுக் கும் இன்றி, உள்ளத்து உறுதியோடு மிளிர்பவர். உறுதி, ஊக்கம், தன்னம்பிக்கை என்பன இவர் முகத்தில் நிழலிடு கின்றன."

— தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்.

" கண்ணின்று கண்ணறச் சொல்லும் திண்மை வாய்ந்தவர் ; நேர்மைக்கும், நேயப்பான்மைக்கும் நிலைய மானவர்."

— ரா. பி. சேதுப்பிள்ளை.

இத்தகையன பல உள்ளன. யான் சென்னையில் வாழ்க்கை தொடங்கிய முந்தை நாட்கள் ஒன்றில் 'செந் தமிழ் முதுமுனி' என்று யான் போற்றும் **டாக்டர் உ. வே. சாமிநாதையர்** அவர்களைக் காணச் சென்றேன். காலை நேரம் பதினொரு மணி இருக்கும். என் வரவைச் சிறார்

அறிவித்ததும் ஐயர் அவர்கள் வெளியேவந்தார்கள். பின் நடந்தவை வருமாறு :—

ஆதித்தர் : வணக்கம்.

சாமி — (தலை தாழ்த்தி 'அப்படி உட்காரட்டும்' என்று குறிப்பாய்க் கைகாட்டி யான் உட்கார்ந்தவுடன்) யாரோ ?

ஆதி — என் பெயர் ஆதித்தர். திரு. பவுல் கலாசாலைத் தமிழ் ஆசிரியர்.

சாமி — நல்லது. நிரம்ப சந்தோஷம். தமிழ் கற்றது எவ்விடத்திலோ ?

ஆதி — 'தமிழ் எனக்குக் குல வித்தையாக வந்தது கொஞ்சம்; அண்மையில் புரசைபாக்கத்தில் ஒரு சங்கத்தில், வாரந்தோறும் கிறிஸ்தியன் காலேஜ் சற்குணர் பாடம்...........

சாமி — ஆ - ஆ - ஆ (என எதிர் மறுப்பான தொனியில்) யான் அப்படிக் கூறவேமாட்டேன். '**சற்குணர் அவர்கள்**' என்றே கூறுவேன்.

ஆதி — சரி, யானும் இனி அவ்வாறே கூறுகிறேன்.

சாமி — சற்குணர் அவர்களைப் போலத் தமிழ் கற்றவர்களும் இல்லை; எடுத்துச் சொல்கிறவர்களும் இல்லை. சங்க நூல்களை நன்ருகப் படித்தவர்கள்; அவர்கள் உண்மையான முறையில் ஓதி வருகிருர்கள். நாங்கள் எல்லாம் உரையாசிரியரை விட்டு விலக அஞ்சுவோம். சற்குணர் அவர்கள் தவறு என்று கண்டதைத் தைரியமாகக் கண்டிப்பார்கள். அந்த மாதிரி யாரும் பாடஞ் சொல்ல முடியாது. அவர்களிடத்தில் நீங்கள் கற்பது எனக்கு மிக்க சந்தோஷம்! நான் அவர்களை விசாரித்ததாக அறிவியுங்கள்.

ஆதி — சரி, அப்படியே செய்கிறேன்.

சாமி — நீங்கள் அவர்களிடத்தில் படிக்க நேர்ந்தது பெரும் பாக்கியம். நன்ருகப் படியுங்கள். அப் பெரிய நூல்களோடு **பிள்ளைத் தமிழ், அந்தாதி, தூது** முதலிய சிறு நூல்களையும் படியுங்கள். இவற் றிலும் தமிழ் இனிமை நிரம்ப உண்டு.

ஆதி — சரி, அப்படியே செய்கிறேன்.

சாமி — நிரம்ப சந்தோஷம். சற்குணரவர்களை விசாரித் ததாகச் சொல்லுங்கள். நீங்கள் நல்ல சுந்தர புருஷராய் இருக்கிறீர்கள். தமிழும் சுந்தர மானது. உங்களால் அஃதும் அஃதாய் நீங்க ளும் நல்ல சிறப்பெய்தலாம். சரி.

ஆதி — சரி, யான் சென்று வருகிறேன்.

மேற்கூறிய பெரு மக்கள் வாக்கால் சற்குணர் அவர் களின் உண்மை நிலையை நாம் நன்கு உணரலாகும். இத்தகைய பேராசிரியரிடம் கற்ற மாணவர் ஒவ்வொரு வரும் ஒரு பேறு பெற்றதாகப் பெருமிதங் கொள்கின்ற னர். அவர்களின் ஒரு சிறு மாணவனுகிய யான், பின்னர் எழுதிய 'கற்புக்கனல்' என்னுங் காவியத்தில் குரு வணக் கம் கூறினேன். அதனை இங்குக் காட்டி இக்கட்டுரையை முடிக்கிறேன்.

சற்குணச் சான்ருேர் பாதம்
சார்ந்துநற் சங்க நூல்கள்
கற்றவர் பலரில் யானே
கடையன்அக் கல்வி முற்றும்
பெற்றிலன் அதனுல் நீரில்
குடமெனப் பாடு கின்றேன்
மற்றவர் பலரும் ஒவ்வோர்
மலையென நிற்பர் அம்மா!

குறிப்புரை

பெருக்கல் சின்னம் — பெருக்கல் அடையாள (×) மாகிய குறி; பாகை — தலைப்பாகை; உருக்கிளர — அழகைத் தோற்றுவிக்க; பெருமித — பெருமையான; அண்மிய — நெருங்கிய; ஆணை — கட்டளை; அரசவைப் பெருமிதம் — அரசவை போன்ற பெருமை; உன்னி — எண்ணி; பொறி — இயந்திரம்; மின்உறு வண்டி — மின் விளக்குகளையுடைய வண்டி.

முந்தையோர் — முன்னோர்; முடி — தலை மயிர், கிரீடம்; மரபு — முறை; சான்று — எடுத்துக் காட்டு; போந்தார் — வந்தவர்; தண்ணளி — கருணை; பணி — தொண்டு; மனை — வீடு; ஓம்பல் — பாதுகாத்தல்; வசை — குற்றம்; அண்மியது — நெருங்கியது; கமழ்தல் — வாசனை தருதல்; சர்ச்சை — ஆராய்ச்சி, வாதம்; மிளிர்பவர் — விளங்குபவர்; கண்ணற — தாட்சணியமின்றி; நிலயம் — இருப்பிடம்; முந்தை — பழைய; சிறார் — சிறுவர்கள், குழந்தைகள்; வித்தை — கல்வி; அண்மையில் — சமீப காலத்தில்; ஓதி — படித்து.

பயிற்சி வினாக்கள்

1. திரு. சற்குணர் அவர்களின் தோற்றப் பொலிவுகளை விளக்குக.

2. சற்குணரின் பேச்சுவன்மை எத்தகையது? அதற்கு ஆசிரியர் எதனை ஒப்பிடுகின்றார்?

3. சற்குணர் தமிழ்மகனாகவே தோன்றினர் என்பது எதனால் தெரிகிறது?

4. "என் முந்தையோர் முடி கொண்டனர்; ஆதலின் யானும் கொள்ள வேண்டினேன்" — இடஞ்சுட்டி விளக்குக.

5. சற்குணர் தமிழ் மரபு தவறாத வாழ்க்கையுடையவர் என்பதற்குச் சான்றுகள் தருக.

6. சற்குணர் தமிழுக்காக உழைத்ததெங்ஙனம்?

7. 'சற்குணர் தம் சாவிலும் சங்கத்தமிழை மறவாச் சான்றோர்' — என்பதை விளக்குக.

8. சற்குணர், நள்ளி என்னும் வள்ளலுக்கு எவ்வாறு ஒப்பாவார்?

9. சற்குணரைப் பற்றிய பாராட்டுகளிலிருந்து நாம் அறிந்து கொள்வன யாவை?

10. இக்கட்டுரையாசிரியரும், உ. வே. சா. அவர்களும் உரையாடிய உரையாடலிலிருந்து நாம் சற்குணரைப்பற்றி அறிந்துகொள்வன யாவை?

11. திரு. ச. த. சற்குணர் அவர்களிடத்தில் இக்கட்டுரை யாசிரியரின் பணிவுடைமையும், பக்தியுடைமையும் எதனுல் அறியப்படுகின்றன?

12. சற்குணரின் சிறந்த பண்புகளைத் தொகுத்து எழுதுக.

---

10. சிலப்பதிகார நாடகம்—கொலைக்களக் காட்சி

(கரந்தை கவியரசு அரங்க. வேங்கடாசலம் பிள்ளை)

காட்சி 1.

இடம் :— மதுரைத்தெரு

காலம் :— பகல்

உரியோர் :— கோவலன், பொற்கொல்லர் தலைவன், அவன் சுற்றம்.

கோவலன் :— (சுற்றத்தினுள் ஒருவனை நோக்கி)

ஐயனே, இதோ செல்லும் உங்கள் தலைவர், யான் எண்ணுகின்றவாறே, அரண்மனைப் பொற்கொல்லர் தாமே ?

ஒருவன் :—ஆம் ஐயரே, அவரே அரசரது தலைமைப் பொற்கொல்லர். அவர் அணிந்திருக்கும் சட்டையே அரசவரிசையென்று காட்டுமே! கையிலுள்ள கொடிற்றுக் கோலும் அரசர் தந்ததே! இதோ, இவர்கள் உருக்குத் தட்டார், நாங்கள் பணித்தட்டார். (தலைவனைய பொற் கொல்லன் கோவலனை அணுகி வணங்கல்)

பொ. தலைவன் :— ஐயரே, வருக! வருக! நீங்கள் எந்த ஊரினரோ ? என்ன காரியமாக இங்கு வந்துள் ளீர்களோ ?

கோவலன் :—ஐயீர்! நான் இருப்பது காவிரிப்பூம் பட்டினம். வணிகன்; இங்கு ஒரு சிலம்பு விற்க வந் துளேன். அது மிக விலையுயர்ந்தது. அதனைத் தாங்கள் விலை மதிக்கவும், விற்றுத் தரவும் வல்லீர் என எண்ணு கின்றேன். உங்கள் முயற்சியளவிற்கேற்ற பொருள் தந்து விடுவேன். (நகையை எடுத்தல்)

பொ. தலைவன் :— காட்டுங்கள், பார்ப்போம். பெண்கள் அணிந்து கொள்ளும் சிலம்பின் விலைமதிக்கும்

ஆற்றல் என்பாலுளதோ, இலதோ நான் அறியேன். ஆயினும் அரசர்கள் முடியிலணியும் முடிக்கலன்களெல் லாம் செய்பவன் யானே !

கோவலன் :—ஐயீர், என் கருத்தினை அங்ஙனம் பிழைபட உணராதீர்கள் ! என் சிலம்பு, மற்ற சிலம்புகள் போல எளியதொன்றன்று. மிக விலையுயர்ந்தது. இதோ பாருங்கள், நீங்களே நேரில் அறிந்து கொள்ளலாம். அதனை நன்கு அறிந்து விலையைக் கூர்மையாக மதிக்க வேண்டும் என்பது பற்றியே அங்ஙனம் கூறினேன், வேறில்லை. (சிலம்பினைத் தருதல்)

பொ. தலைவன் :—அப்படியா ! ஆயின் தங்கள் கருத் தறியாததுபற்றி என்னை மன்னித்திடுக. இங்கு அம ருங்கள், நான் பார்த்துச் சொல்லுகிறேன். (தனியே) ஓ இச்சிலம்பு மிக விலையுயர்ந்ததென்பதில் எட்டுணையும் ஐயமில்லை ! ஓ, தலைமையான மாணிக்கங்கள் ! ஓ, ஓ, முதன்மையான வயிரங்கள் ; ஆ ! ஆ ! அம்மணிகள் பதிப்பதற்கு அமைந்துள்ள கேவணங்களின் சிறப்பினை என்னென்பேன் ! ஓ, உயர்ந்த கிளிச்சிறைப் பொன்னாலே ஆக்கப்பெற்றது ! உட்கருவின் அழகினை என்னென்பது ! உள்ளிடு மணிகள் யாவையோ ! (ஆட்டிப் பார்த்தல்) முத்தின் ஒலியினின்றும் வேறுபடுகின்றதே ! ஒரு சமயம் இரத்தினங்களாகவே இருக்குமோ ! அங்ஙனமாயின் அம்மம்ம ! இதன் விலையினை உள்ளவாறே மதிப்பாரும், இதனை விலை தந்து வாங்குவாரும் இவ்வுலகத்தே யாவ ருளர் ? தன் கைப்பொருளெல்லாம் தந்து நம் அரசன் வாங்கினால் வாங்கலாம்.

ஐயீர் ! நன்கு ஆராய்ந்தேன். நீங்கள் கூறியவாறே இச்சிலம்பு மிக விலையுயர்ந்த தென்பதில் தடையில்லை. இப்பெருவிலைச் சிலம்பினை வாங்குவார் அரசனையின்றிப் பிறர் இலர். ஆகவே அரசனிடம் தெரிவித்து யான் வரு மளவும் நீங்கள் அருள்கூர்ந்து, என் சுற்றத்தினருடன் அதோ என் சிறுகுடிற்பாங்குள்ள கோட்டத்தில் அமர்ந் திருங்கள், விரைவில் வந்து விடுகிறேன்.

கோவலன் :— நல்லது போய் வருக.

காட்சி 2.

இடம் :— அரண்மனையின் ஒரு பகுதி.

காலம் :— பகல்.

உரியோர் :— அரசன், ஏவலர், பொற்கொல்லர் தலைவன்.

அரசன் :— ஆ! இது என்ன விந்தையாக இருக்கின்றது. நமது தேவிக்குத் திடுமெனப் பிணக்கம் வந்து விட்டதே! நம்மோடு உடனிருந்து நாடக மகளிர் ஆடல் பாடல்களை நோக்கிக் கொண்டிருந்தனளே; ஏனோ சடுதியில் முகம் வேறுபாடடைந்தது? தலை நோயெனக் கூறிச் சென்று விட்டனளே! ஆம், ஆம், நோய்களிலெல்லாம் முதன்மைபெற்று நிற்கும் மனநோய்க்குத் தலைநோய் எனல் தகும்! தகும்!! அம்மம்மா! அந்தப் பெண்களின் நோக்கம் என் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டதென்பதே தேவியின் கருத்துப்போலும், இருக்கட்டும். தேவியைக் கண்டு இன்னுரை கூறி அவ்வூடலைப் போக்கி வருவோம். ஓ! அங்கு வருவது யார்! நம் அரண்மனைப் பொற்கொல்லனன்றோ! நல்ல வேளையாயிற்று. சிறந்த அணிகலன்கள்கொண்டு வருவானேல், இவ்வமையத்திற் கேற்றனவாகும்.

பொ. தலைவன் :— அரசே, போற்றி! எம் ஆண்டவா, போற்றி! அரசரேறே! திருடன், திருடன்; அரண்மனைப் பணியை, தேவியின் சிலம்பினை, அஞ்சாது திருடிய திருடன்; காவலாளர்கள் கண்விழித்திருப்ப, வாயில் வழியே சென்று திருடிய திருடன்; கன்னக்கோலின்றிக் கவைக்கோலின்றித் திருடிய திருடன்; அரசே! அச்சிலம்பினை விற்க வந்து என் சிறிய குடிலில் அகப்பட்டுவிட்டான்; தப்பிப் போய்விடுவான்; மந்திரம் வல்லவன், மாய மாய்ப் போய்விடுவான்.

அரசன் :— அடே, யாரோ தன் சிலம்பை விற்க வந்திருக்கலாம், அது நம் சிலம்புதான் என்பது நீ எங்ஙனம் கண்டாய் ?

பொ. தலைவன் :— அரசே! அது அடியேன் செய்ததுதானே. செய்த எனக்குத் தெரியாதா? உலகினில் வேறு எங்கும் இல்லாப் பெருவிலைச் சிலம்பாயிற்றே அது ?

ஏவலாளன் :— அரசரேறே! போற்றி! போற்றி! எங்கள் பெருந்தேவியார் கோயிலில், சிலம்பு ஒன்று காணாமற் றேடிக்கொண்டிருந்ததை நாயினேன் மனைவி கூறினள் ; நான் அறிவேன், அரசே !

மற்றொருவன் :— அரசரேறே! சிலம்பு காணுமலிருப்பது உண்மையே. அடியேங்களுக்கெல்லாம் தெரியும்.

அரசன் :— ஓ, அப்படியா? ஏவலாளர்காள்! இப்பொற்கொல்லன் பின்னே போமின். இவன் கூறும் ஆளிடம் நம் தேவியின் சிலம்பு இருப்பது உண்மையாயின், அவனை பிடித்துக் (கொண்டு) கொன்று சிலம்புடன் இங்கே வருவீர்களாக.

காட்சி 3.

இடம் :— பொற்கொல்லர் தெரு.

காலம் :— பகல்.

உரியோர் :— பொற்கொல்லர் தலைவன், அரசன் ஏவலர், கோவலன்.

பொ. தலைவன் :— ஐயீர்! இதோ இங்கு வந்திருப்பவர்கள் அரசன் ஏவலர்கள். அரண்மனையில் ஒரு சிலம்பு போய்விட்டது; அதுபற்றியே இதைப் பார்த்துப் போகலாமென வந்திருக்கிறுர்கள்.

கோவலன் :— நல்லது. இதோ இருக்கிறது. பாருங்கள்.

பொ. தலைவர் :— பார்த்தீர்களா ? இதுதான் அரசன் தேவியார்க்கு உரியது. அரண்மனையிலிருக்கும் மற்றொரு சிலம்புக்கு இதுதான் இணை. சமயத்தைக் கைவிடாதீர்கள். விட்டுவிட்டால் ஏமாந்து போய்விடுவீர்கள். வந்த காரியத்தை உடனே முடித்துக்கொண்டு போவீராக.

ஒருவன் :— ஐயா, இப்படி வருக. நமக்குள் ஒருவாறு பேசி முடித்துக்கொண்டு அப்புறம் இவரிடம் வருவோம்.

பொ. தலைவன் :— நல்லது, போய் வருவோம். (எல்லோரும் விலகி நின்று ஆராய்தல்)

ஒருவன் :— ஏனையா பொற்கொல்லரே ! இவரா கள்வர் ? உமது கண்ணில் திருட்டுச் சாயம் பூசப்பட்டிருக்கிறது போலும் ! இவரைப் பார்க்கும் போதே இவர் ஒரு பெருஞ் செல்வக் குடியிற் பிறந்து வளர்ந்தவர் என்பது தெரியவில்லையா ?

மற்றொருவன் :— ஆம், ஆம். இவர் திருடரென்று சொல்லப்படுவாருமல்லர் ; கொல்லப்படுவாருமல்லர்.

கோவலன் :— ஐயீர், தலைவரே ! அணியின் அருமையறிந்து தக்க விலை தருவதாயிருந்தால் சொல்லுங்கள். இன்றேல் என்னை விட்டுவிடுங்கள்.

பொ. தலைவன் :— அடடா ! என்ன அப்படிச் சொல்கின்றீர்கள் ! நான் ஒருத்தன் நடுவிலே இருந்தும் உங்களை விட்டுவிடுவேனோ ? (தனியே ஏவலாளர்களைப் பார்த்து) தம்பிமார்களே ! உங்கட்கு உலகியலறிவு போதாது. அதனிலும் கள்வர்கள் திறங்களை நீங்கள் கேட்டும் அறிந்திலீர்கள் ; பாவம் !

சிந்து

ஏமாந்து போகாதீர் — ஏவலர்களே
இவனை விட்டரசனுற் சாகாதீர்! (ஏமாந்து)

1. தெள்ளிய முகங்கண்டு — இவன்முழுத்
திருடென் றறியாமல் தியங்குகின்றீர்!
கள்ளர்கள் திறமறிவேன் — அவற்றிற்சில
கழறுகின் றேன் உற்றுக் கவனித்திடீர்!

2. மந்திரம் வல்லவர்கள் — அவற்றையவர்
வழுத்திடில் தேவரென மறைந்திடுவார்!
தந்திரம் வல்லவர்கள் — இந்திரன்
தன்மார்பின் ஆரமும் தாங்கொள்ளுவர்!

3. தெய்வங்கள் தொழுதெழுவார் — கைக்கொண்ட
செழும்பொருள் காட்டித்தப்பிச் சென்றிடுவார்!
எய்தும் மருந்தறிவார் — அதனுல்
இருந்தவர் தாமிருந்த இடம் பெயரார்!

4. நிமித்தங்கள் பலிக்கிற் செல்வார் — இல்லாவிடில்
நேருமெப் பொருளையும் நெஞ்சில் நினையார்!
தமக்குறு பொழுதறிந்தே — கவர்கள்வர்!
தம்மை விலக்கும்பெரி யோருமுண்டோ!

5. உரியதோர் இடமறிவார் — அவர்தமை
உலகினிற் காணவல் லாரேவரே!
கருவிகள் ஏற்ப கொண்டு — பொருளையவர்
கைப்பற்றில் காணவல் லாருமுண்டோ!

பொ. தலைவன் :— ஏவலர்களே, இங்ஙனமெல்லாம் களவு நூலின் கரைகண்ட இவர்கள் செயல்களை யாவர் கண்டறிவார்? அரண்மனையில் யானறிய மெய்யாக

நடந்ததொரு திருட்டினைக் கேளுங்கள். முன்னாளில் ஒரு திருடன் தூதனைப்போலப் பகலெல்லாம் அரண்மனையில் தங்கியிருந்தான். இரா வந்ததும் பெண்ணுருக் கொண்டு இளங்கோவேந்தன் பள்ளியறையிற் புகுந்து மறைந்து கொண்டான். அவ்வேந்தன் மார்பில் வைர ஆரத்தை எடுத்தான். அவ்வேந்தன் துயில் நீங்கி உடை வாளை உருவிக் குத்தக் குத்த அக்கள்வன் அவ்வாளின் உறையைக்கொண்டு அக்குத்துக்களை வாங்கிக்கொண்டிருந்தான். பின் அரசன் மல்யுத்தம் செய்ய, தூணைத் தன்போலக் காட்டி மறைந்தான். அரசனுக்குப் பேசவும் நா எழவில்லையாம். அக்கள்வனை இப்பால் இன்று வரை கண்டவர்கள் இல்லை. இங்ஙனமெல்லாம் எத்தனையோ.

ஒருவன் :— ஆம் அண்ணன்மாரே! யானறிந்த தொன்று. நல்ல மாரிக்காலம். நள்ளிருள். ஊர்க்காவல் செய்திருந்தேன். ஒரு திருடன் கன்னக்கோலுடன், திருடிய பொருள்களுடன் வந்தான். வாளை உருவி வீசினேன். வாளைப் பிடுங்கிக்கொண்டான். அவ்வளவு தான். அவனையும், என் வாளையும் கண்டார் இதுவரை யாருமிலர்.

மற்றொருவன் :— இத்தகைய இக்கள்வனை விட்டு விட்டால், நமது தலை போய்விடும். (வாளை வீசல். கோவலன் வெட்டுண்டு வீழ்தல்.)

குறிப்புரை

வரிசை — அரசன் முதலியோரால் கொடுக்கப்படும் விருதுகள்; கொடிற்றுக் கோல் — கடப்பாரை; உருக்கு — இரும்பு; பணி — அணிகலன்; ஆற்றல் — திறமை; முடி — கிரீடம்; கலன் — ஆபரணம்; எட்டுணையும் — சிறிதேனும்; கேவணம் — மணி பதிக்கும் குழி; கிளிச்சிறை — கிளிச்சிறகு நிறம்போன்ற பொன்; உட்கரு — உள்ளேயடங்கியுள்ள பொருள்; கோட்டம் — கோயில்; விந்தை — ஆச்சரியம்; பிணக்கு — ஊடல்; நோக்கம் — பார்வை; அணிகலன்கள் — ஆபரணங்கள்; அரசவேறு — அரசர்களுக்குத் தலைவன்; கன்னக்கோல் — சுவரைத் துளைப்பதற்குக் கள்வர் வைத்

துள்ளதொரு கருவி; கவைக்கோல் — ஒருவகை இரும்பாயுதம்; குடில் — குடிசை; நாயினேன் — அடியேன்; ஏவலாளர் — வேலையாட்கள்; இணை — ஒப்பானது; திருட்டுச் சாயம் — பொய்ச் சாயம், வெளிப்பார்வை; அணி — சிலம்பு; வழுத்திடில் — உச்சரித்தால்; ஏற்ப — பொருந்த; மெய்யாக — உண்மையாக; பள்ளியறை — படுக்கையறை.

பயிற்சி வினுக்கள்

1. கோவலன் பொற்கொல்லர் தலைவனுக்குத் தன்னை எவ்வாறு அறிமுகம் செய்துகொண்டான்?

2. பொற்கொல்லன் சிலம்பைக்கண்டு அதிசயித்துக் கூறியன யாவை?

3. கோப்பெருந்தேவி அரசனோடு ஊடியதேன்? அதைத் தீர்ப்பதற்கு அரசன் தேடிய உபாயம் யாது?

4. பொற்கொல்லன் கோவலனைப்பற்றி அரசனிடம் கூறியதென்ன?

5. அரசன் ஏவலாளருக்கு இட்ட கட்டளை யாது? அதனை அவர்கள் எவ்வாறு நிறைவேற்றினர்?

6. ஏவலாளர் கோவலனைக் கொலைசெய்ய இயையாமைக்குக் காரணம் யாது?

7. கள்ளர்கள் திறங்களாகப் பொற்கொல்லன் கூறியன யாவை?

8. பொற்கொல்லன் எடுத்துக்காட்டாகக் கள்வர் செயலைக் கூறியதெங்ஙனம்?

9. ஏவலாளிகளில் ஒருவன் கள்வர் செயலாகக் கூறியது யாது?

TAMIL ILAKKIYA KOVAI

Form IV — Part I

By

Vidwan V. Thangiah

Publishers :

The Tirunelveli Diocesan Book Depot

Palayamkottai

Price : Rs. 1—2—0